
உதயன்
பக்கங்கள் - 16+24 விலை 40 செய்தி: 021 493 0000 வி
சுடர் :35 கதிர் :301 புரட்டாதி 10 ஆம் நாள் சனிக்கிழமை 26 செப்ரெம்பர் 2020



# உணவு தவிர்ப்பு போராட்டம் திட்டமிட்டபடி இன்று நடக்கும்

## தடையால் பின்வாங்கோம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூளுரை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 26
நினைவேந்தலுக்கான உரித்தை - உரிமையை வலியுறுத்தி தொண்டைமானாறு செல் வச்சந்நிதி ஆலய வளாகத்தில் நடாத்தப்படவிருந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், நீதிமன்ற கட்டளையை மீறாத வகையில் திட்டமிட்டபடி இன்று போராட்டம் நடக்கும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் சட்டத்தரணி என்.சிறீகாந்தா தெரிவித்தார் 14 >

## தியாகம் ஆகுதியாகி 33 வருடங்கள்

யாழ்ப்பாணம், செப். 26
அஹிம்சாவாதியின் தேசம் என்றழைக்கப்படும் பாரதத்துக்கு - இந்தியாவுக்கு எதிராக அதே அஹிம்சை வழியில் போராடி மடிந்த தியாக தீபம் திலீபனின் 33ஆவது நினைவேந்தல் இன்றாகும். 14 >

முச்சந்தி முரளி




## தமிழர்களைச் சோதிக்காதீர் வீண்விளைவைச் சந்திப்பீர்!

ராஜபக்ச அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 26
அடுக்கடுக்கான தடையுத்தரவுகள் மூலம் தமிழர்களின் பொறுமையைச் சோதித்தால் 14 >

## நினைவேந்தலையும் அறவழிப்போரையும் தடுக்கவே முடியாது

சஜித், அநுர கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26
ஒவ்வொரு இனமும் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர உரிமையுண்டு. அதை எவரும் பறிக்கவே முடியாது. அதே வேளை, ஓர் இனம் 14 >

## வெடுக்குநாறியில் 108 பானைகளில் எழுச்சிப் பொங்கல்

வவுனியா, செப். 26
வெடுக்குநாறி ஆதி இலிங்கேஸ்வரருக்கு 108 பானைகள் வைத்துப் பொங்கும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. வவுனியா வடக்கு நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதி 14 >

## உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு முட்டுக் கட்டை போட்டது பொலிஸ்

பருத்தித்துறை, மல்லாகம் நீதிமன்றங்கள் தடை உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 26
தியாக தீபம் திலீபனின் நினைவு கூருதலை முன்னெடுக்க நீதிமன்றங்கள் ஊடாக விதிக்கப்பட்ட தடை நீக்கப்படாமையடுத்து நினைவுகூருதல் உரிமையை வலியுறுத்தி 14 >

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் மோடியிடம் கேட்பாராம் மஹிந்த

கொழும்பு, செப். 26
இந்திய மீனவர்கள் இழுவை படகுகளின் மூலம் அத்துமீறி சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடு 14 >

## விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, செப். 26
வவுனியா கனகராயன்குளம் கொல்லர் புளியங்குளம் பகுதியில் நடந்து சென்றவர் வாகனம் மோதியதில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவி 13 >

## மறைந்தது 'பாடும் நிலா'



சென்னை, செப். 26
இந்தியத் திரையுலகில் 'பாடும் நிலா' என்று அனைவராலும் அழைக்கப்படும் பிரபல பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நேற்றுக் காலமானார். 14 >

## யாழ். பல்கலை மாணவரை சீண்டிய ராணுவம் - பொலிஸ்

யாழ்ப்பாணம், செப். 26
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வலிந்து சீண்டினர். இதனால் பல்கலைக்கழக வளாகப் பகுதியில் நேற்று மதியம் பதற்ற மானசூழல் நீடித்தது. 13 >

# வாய்மொழி உத்தரவுகளையும் சுற்றறிக்கையாக செயற்படுத்தவும்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

**கொழும்பு, செப். 26**

**மக்களின் பொது நலனுக்காக வழங்கப்படும் வாய்மொழி மூலமான அனைத்து உத்தரவுகளையும் சுற்றறிக்கையாகக் கருதி செயற்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இந்த உத்தரவுகளை மீறுகின்ற அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.**

பதுளை, ஹல்துமுல்லை, வெலங்விட்ட கிராமத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட 'ஜனாதிபதி கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்வில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

"அரச அதிகாரிகளிடமிருந்து நான் எதிர்பார்ப்பது மக்கள் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்துகொண்டு தீர்வுகளை வழங்குவதே. மக்களின் பக்கம் நின்று சரியாக மற்றும் தைரியமாக முடிவெடுக்கக்கூடிய அதிகாரிகளை நான் பாதுகாப்பேன். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க அரச நிறுவனங்கள் நீண்ட காலத்தை எடுக்கின்றன. ஒரு நிறுவனத்திலிருந்து எழுத்துமூல விசாரணைக்கு இன்னுமொரு நிறுவனம் 14 நாள்களுக்குள் பதில் அளிக்காதவிடத்து அந்த எழுத்துமூல வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதாக கருதி மக்களுக்கு பதில் கூறவும்." என்று ஜனாதிபதி பணித்தார். (கு)

# தமிழரின் ஒற்றுமை பலம்பெறவேண்டும்

## தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 26

தமிழ் மக்களின் ஒற்றுமை இன்னும் பலம் பெற வேண்டும். இதற்காக அனைத்துத் தரப்புகளும் பேதங்களை மறந்து தமிழ் இனத்துக்காக ஒன்றுபடுவது அவசியம் என்று தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது பற்றி பேரவை அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடியான இன்றைய சூழ்நிலையில் தமிழ்த்தேசியத்தின் பெயரால் தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு ஓரணியில் செயற்படுவது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரே பலம் ஒற்றுமை என்பதை தமிழ் மக்கள் பேரவை பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளது. அதற்கான செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது. தமிழ் அரசியல் கட்சிகள் சூழ்நிலை கருதி ஒன்றுபட்டு இருப்பது எங்கள் அரசியல் புலத்தில் ஒரு முக்கியமான விடயம் ஆகும். என்றுள்ளது. (கு)

# நீதிமன்ற விடயம் என்பதால் கஜேந்திரகுமாரை நிராகரித்தேன்

## காரணம் கூறுகின்றார் சபாநாயகர்

கொழும்பு, செப். 26

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் விசேட கூற்று நிராகரிக்கப்பட்டமைக்குக் காரணம், அவர் பேசிய விடயம் நீதிமன்றில் வழக்காகவுள்ளமையே என்று சபாநாயகர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபையில் சபாநாயகரிடம் நேற்றுக் கேள்வியெழுப்பினார்.

"27/2 இன் கீழ் கேள்வி எழுப்பப்பட்ட கேள்விக்கு இடமளிக்காது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிராகரிக்கப்பட்டார். இதில் 76(1) இன் கீழ் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள காரணி என்ற கூற்று முன்வைக்கப்பட்டது.

இன்னொருபுறம் பொன்னம்பலம் அவர் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படவில்லை என்ற காரணி முன்வைக்கப்பட்டது. ஆனால் கட்சித் தலைவர் என்ற காரணத்தினால் தான் அவருக்கு 27/2 இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டது. நீதிமன்ற விசாரணையில் உள்ள விடயம் என அவரது கூற்றை தடுத்தால் அது 27/2 இன் கீழ் பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே என்ன காரணத்துக்காக அவரது உரிமை நேற்று சபையில் மறுக்கப்பட்டது என்பது சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும். இதற்கான விளக்கத்தை நீங்கள் நேற்று முன்வைக்கவில்லை" என்றார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர், "அவரை கட்சித் தலைவராக அங்கீகரித்தே 27/2 இன் கீழ் வாய்ப்பு வழங்கப்பட்டது. எனினும், நீதிமன்றத்தில் உள்ள விவகாரம் குறித்த கூற்றொன்றை அவர் முன்வைத்த காரணத்தால்தான் அவரது விசேட கூற்று நிராகரிக்கப்பட்டது. அவர் கொண்டுவந்த விடயம் நேற்றுவரையில் நீதிமன்ற விசாரணையில் இருந்தது. எனவே அவர் முறையாக தனது கூற்றை முன்வைக்கவில்லை என்ற காரணத்தை உணர்ந்தே நான் அதனை நிராகரித்தேன். அதேபோல் அவர் ஒரு வழக்கில் சாட்சியமளிக்க வேண்டியுள்ள காரணத்தால் இன்று அவர் நீதிமன்றம் சென்றுள்ளார்" என்றார். (கு-இ)

# தென்மராட்சியில் பொலிஸாரின் பணி இராணுவத்தினரிடம்

சாவகச்சேரி, செப்.26


வேலைப் பளு அதிகம் உள்ளதால், தென்மராட்சியில், பொலிஸாருடைய பணி இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மணல் கடத்தலைத் தடுக்கும் பணியே இவ்வாறு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம், பிரதேச பாதுகாப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தில் சட்ட விரோதமாக மணல். அகழ்வு தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது தமக்கு வேலைப்பளு அதிகம் உள்ளதால், படையினரிடம் சட்ட விரோத மணல். அகழ்வு மற்றும் மணல் கடத்தலைக் கட்டுப்படுத்தும் பணிகளை ஒப்படைக்குமாறு பொலிஸார் தெரிவித்தனர். இதனால் படையினரிடம் அந்தப் பணிகளை ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. பிரதேசத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெறுவதை அவதானிக்கும் பொதுமக்கள் பிரதேச செயலகத்திற்கு அது தொடர்பில் அறிவிக்கலாம் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# தடம் புரண்டது டிப்பர்

கொடிகாமம், செப். 26

கருங்கல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் ஏ9 வீதி பரந்தன் சந்திக்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் 2.15அளவில் தடம் புரண்டது.



பரந்தனிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி கருங்கல் ஏற்றிச் சென்ற வேளை மாடு குறுக்கே சென்றதால் மாட்டை காப்பாற்ற முயற்சித்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு-159)

# யாழ்தேவி தடம் புரண்டதால் வடக்குக்கான சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்தேவி ரயிலின் இரண்டு பயணிகள் பெட்டிகள் தடம் புரண்டமையால் வடக்குக்கான ரயில் சேவை பாதிப்படைந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுக் காலை 6.25க்கு புறப்பட்ட யாழ் தேவி ரயிலின் இரண்டு பயணிகள் பெட்டிகள் அநுராதபுரம், சாலியபுர பகுதியில் தடம்புரண்டன. எனினும், பயணிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

விபத்தால் தடைப்பட்ட சேவையை சீரமைக்கும் பணியில் கட்டுப்பாட்டாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும் ஈடுபட்டுள்ளனர். (கு-18)

# கட்சிகளின் முழு அடைப்பை ஆதரிக்க வேண்டாம்

## தமிழரிடமே கோருகிறது ராவணா பலய

கொழும்பு, செப். 26

அரசியல் ரீதியாக தம்மை பலப்படுத்திக்கொள்வதற்காக ஒருசில தமிழ்க்கட்சிகள் இணைந்து முன்னெடுக்கவுள்ள உண்ணாவிரத மற்றும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு மக்கள் ஆதரவு வழங்கக்கூடாது என்று ராவணா பலய அமைப்பின் பொதுச்செயலர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் வலியுறுத்தினார்.

நினைவேந்தல் உரிமையை வென்றெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து முன்னெடுக்கவுள்ள அறவழிப்போராட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உண்ணாவிரத போராட்டங்களில் ஈடுபடுவதும், ஆர்ப்பாட்டம் நடத்துவதும், கடையடைப்பு போராட்டங்களுக்கு அழைப்பு விடுப்பதுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலாக இருந்துவருகின்றது. மாறாக வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்காக குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு எந்தவோர் அபிவிருத்தி திட்டங்களையும் அந்தக் கட்சி முன்னெடுக்கவில்லை. இதன் காரணமாகவே கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் பாடம் புகட்டினார்கள். இந்தநிலையில் அரசியல் ரீதியில் தம்மை பலப்படுத்திக்கொள்வதற்காகவும், மக்களை திசைதிருப்புவதற்காகவும், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் மீண்டும் பழைய நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. புலிகளை நினைவுகூருவதற்கு எவ்வாறு அனுமதி வழங்கமுடியும்? எனவே, தமிழ்க்கட்சிகளின் இந்த அரசியல் சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்கக்கூடாது என வடக்கு, கிழக்கு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. நாமும் அமைதிகாக்கின்றோம். எனவே இனவாதத்தை தூண்டும் விதத்தில் எவரும் செயற்படக்கூடாது' என்றார். (ம-44)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விநியோகம்

## குருநாகல் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

**குருநாகல், செப்.26**

**குருநாகல் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் நன்கு பயிற்றப்பட்ட சுமார் 1,200 போதைப்பொருள் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் விரைவில் அவர்களை கைதுசெய்ய பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் குருநாகல் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் டபிள்யூ.எம். பாலசூரிய தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: குருநாகல், புத்தளம் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் பல்வேறுபட்ட போதைப் பொருள் விற்பனையில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் பிரதான இலக்கு பாடசாலை மாணவர்கள். இவர்களது இந்த தவறான வழிகாட்டலில் கடந்த 9 மாத காலத்தில் மட்டும் சுமார் 6,200 மாணவர்கள் வரை சிக்கியுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தப் பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சுமார் 100 இற்கும் மேற்பட்ட கருத்தரங்குகளை மாகாணக் கல்வி அமைச்சு நடத்தவும், போதை ஒழிப்பு மற்றும் மதுப் பாவனையிலிருந்து விலகிச் செல்லும் வகையில் வழிகாட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது -என்றார். (ற-இ)

# அரிசியை அதிக விலையில் விற்பவர்கள் கைதாவார்கள்

யாழ்ப்பாணம், செப்.26

அரிசியை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சில்லறை விலைக்கு அதிகமாக, சில வர்த்தகர்கள் அரிசியை விற்பனை செய்கின்றனர் எனக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவிப்புக்கு அமைவாக, நாட்டரிசி ஒரு கிலோவின் அதிகூடிய விலை 96 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோ 96 ரூபாவாகவும், கீரி சம்பா ஒரு கிலோ 120 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (ற-இ)

# எரிவாயு குழாய் வெடிப்பு: 7 பேர் காயம்

கொழும்பு, செப்.26

கொழும்பு, கொட்டிஹாவத்தைப் பகுதியில் எரிவாயுக் குழாயொன்று வெடித்ததில் 7 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் 7 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொட்டிஹாவத்தை பொது மயான தகனசாலையில் சடலமொன்றை தகனம் செய்ய முற்படுகையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)

# 23 கோடி ரூபா அதிர்ஷ்டம் அடித்தது கண்டி வாசிக்கு!

கொழும்பு, செப்.26

இலங்கை வரலாற்றில் அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு மூலம் அதிகூடிய பரிசுத்தொகை வெல்லப்பட்டுள்ளது. தேசிய லொத்தர் சபையின் மூலம் சந்தைப்படுத்தப்படும் மெகா பவர் அதிஷ்டச் சீட்டிழுப்பின் வெற்றியாளர் 23 கோடி ரூபாவுக்கு மேலான தொகையை நேற்று முன்தினம் வென்றுள்ளார்.

வெற்றிக்குரிய அதிர்ஷ்ட சீட்டு கண்டி கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த முகவரின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சீட்டிழுப்பு 2016 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது எனத் தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளர் தர்ஷன விஜய சிறிவர்த்தன தெரிவித்தார்.

23 கோடி ரூபா என்பது இலங்கை வரலாற்றில் அதிர்ஷ்ட சீட்டுக்காக வழங்கப்படும் ஆகக்கூடுதலான பரிசுத் தொகையாகும். இதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பின் மூலம் ஒருவர் வென்ற 13 கோடி ரூபாவே ஆகக்கூடுதலான பரிசுத் தொகையாகக் காணப்பட்டது. (ற-இ)

# கருத்தரங்குகள், வகுப்புகளுக்கு ஒக்ரோபர் 6 முதல் தடை

கொழும்பு, செப்.26

க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் மேலதிக வகுப்புகள்·போன்றவற்றை நடத்துவதற்கு எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஒக்ரோபர் 6 ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்தத் தடை விதிக்கப்படவுள்ளது.

அத்துடன், ஒக்ரோபர் 7 ஆம் திகதி நள்ளிரவு முதல் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையுடன் தொடர்புடைய அனைத்து விதமான மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளும் தடை செய்யப்படுகின்றன எனப் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

# புதிய ஆயிரம் ரூபா நாணயத்தாள் அறிமுகம்

கொழும்பு, செப்.26

இலங்கையில் புதிய ஆயிரம் ரூபா நாணயத் தாள் நேற்றுமுன்தினம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த நாணயத்தாள் மத்திய வங்கி ஆளுநர் டபிள்யூ.டி.லக் ஷமனினால், பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவருக்கிடையில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த நாணயத்தாள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# வாகனங்களை ஒழுங்குபடுத்த பொலிஸ் அதிகாரிகள் இல்லை

*போக்குவரத்து டி.ஐ.ஜி கூறுகின்றார்.*

கொழும்பு, செப்.26

நாளாந்தம் கொழும்பு நகருக்குள் 3 இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் உள்நுழைகின்றன. அந்த வாகனங்களை வழிநடத்துவதற்கு போதுமான பொலிஸ் அதிகாரிகள் இல்லை என்று பொலிஸ் போக்குவரத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஷங்க தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்களில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளே அதிகம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். போக்குவரத்து ஒழுங்குச் சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தினால் போக்குவரத்து பொலிஸார் மேலதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய அவசியமில்லை எனவும் குறிப்பிடடுள்ளார். மேல் மாகாணத்தில் வீதி ஒழுங்கு நடைமுறை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# புதையல் அகழ முற்பட்டவர்கள் கைது

முல்லைத்தீவு, செப்.26

முல்லைத்தீவு இரட்டைவாய்க்கால் பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் அகழ முற்பட்ட 6 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர். இவர்களது இரண்டு கார்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இவர்கள் ஆறு பேரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-19)

# ரஷ்ய பயணிகள் தங்கிய இடம் கொரோனா செயலணிக்கு தெரியாது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, செப்.26

ரஷ்யாவிலிருந்து வந்த பயணிகள் எங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்த விவரங்களை கொரோனா தொடர்பான செயலணியின் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை என்று இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலிருந்து வந்த பயணி ஒருவர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் அவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட விடுதிகளில் தங்கவைக்கப்படுவது வழமை. ஆனால் இந்த நபர்கள் எங்கு தங்க வைக்கப்பட்



டனர் என்று கொரோனாச் செயலணிக்கு தெரிவிக்கவில்லை. ஆனால் அவர்கள் மூலம் ஏனையவர்களுக்கு கொரோனா தொற்றுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

இதேவேளை, மாத்தறையிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து நேற்றுக் காலை ரஷ்யாவுக்கு செல்லவிருந்த ரஷ்யப் பிரஜைக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அந்த நபருடன் நெருங்கிப் பழகிய 100 பேர் வரை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ற-இ)

# சொன்னதோ ஏழரை லட்சம்: கிடைத்ததோ ஐந்து லட்சம்

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் அந்தரிப்பு

**யாழ்ப்பாணம், செப். 26**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸாவின் நிதி ஒதுக்கீட்டில் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மக்களுக்கு வழங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு ஐந்து லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதா என்று மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.**

கடன் வாங்கி வீட்டு வேலைகளை முடித்த மற்றும் வேலைகள் நிறைவுறும் நிலையிலுள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு இதுவரை மிகுதிப் பணம் வழங்கப்படாததால் அவர்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 200க்கு மேற்பட்ட குடும்பங்கள், தலா ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான வீட்டை அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் சிலருக்கு முடிந்த வேலைகளுக்காக ஐந்து லட்சம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது.

மிகுதிப் பணத்துக்கு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், பிரதேச செயலர் உள்ளிட்ட பலருக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால், சஜித்தால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கு 5 லட்சம் ரூபா தானா ஒடுக்கப்பட்டுள்ளது என்றும், அப்படியானால், மிகுதி இரண்டரை இலட்சம் ரூபா பணத்தை எவ்வாறு செலுத்தப் போகின்றோம் என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன் பல இடங்களில் கடன் வாங்கி வீட்டு வேலைகளை மேற்கொண்ட பயனாளிகள் செய்வதறியாமல் தவித்து வருகின்றனர்.

கடந்த வருடம் வடக்கு மாகாணத்தில் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்துக்கு பயனாளிகளுக்கு உரிய தொகை வழங்கப்படாததால் பல வீட்டுத் திட்டங்கள் இன்னும் கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## பருத்தித்துறை சபை அமர்வில் பல அபிவிருத்திகள் ஆராய்வு

பருத்தித்துறை,செப்.26

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் பிரதேசத்தின் பல அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஆராயப் பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் அதன் தவிசாளர் ச.அரியகுமார் தலைமையில் காலை 9 மணிக்கு சபை மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

இதில் தற்போது பிரதேச சபை எல்லைக்குள் அனுமதி அற்ற கட்டடங்கள் கட்டப்படுவது அதிகரித்துள்ளதாகவும், இதில் அதிகமாக அரச ஊழியர்களே ஈடுபடுகின்றனர் எனவும், தவிசாளர் தெரிவித்திருந்தார்.

பருத்தித்துறை பிரதேச சபை உப அலுவலகமான மருதங்கேணிக்கு புதிய நிழல் பிரதி இயந்திர கொள்வனவு பற்றியும் ஆராயப்பட்டது.

நாகர்கோவில் வடக்கில் இடம்பெற்ற குடியேற்றத்தில் எந்தவித அபிவிருத்தியும் இதுவரை இடம் பெறவில்லை எனவும் அங்கு அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட நடவடிக்கை எடுக்குமாறு குடத்தனை வட்டார உறுப்பினர் எஸ். தியாகலிங்கத்தை தவிசாளர் கேட்டுக் கொண்டார்.

கட்டைக்காட்டுப் பகுதியில் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் மற்றும் பிரதேசத்தில் பொருத்தப்படவேண்டிய வீதி விளக்குகள் தொடர்பில் ஆராயப்பட்டன. (ஐ-160)

## 14 குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள்

முல்லைத்தீவு,செப்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரத்தில் வீசிய கடும் காற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 14 வீடுகளுக்கான கொடுப்பனவு மாவட்ட தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

காற்றால் புதுக்குடியிருப்பில் 8 வீடுகளும்,ஒட்டுசுட்டான் மற்றும் வெலிஓயா பிரதேசத்தில் தலா 2 வீடுகளும், துணுக்காய் மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேசங்களில் தலா ஒரு வீடும் பாதிக்கப்பட்டன. (ஐ-19)



## விழிப்புணர்வு செயலமர்வு

வவுனியா,செப்.26

சர்வதேச சைகை மொழி தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் விழிப்புணர்வு செயலமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாவட்ட செவிப்புலனற்றோர் சங்கத் தலைவர் நிசாந்த தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கேட்பதில்,பேசுவதில் சிரமமுள்ளவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் உள்ளடங்கிய மகஜர் ஒன்று வவுனியா மாவட்டச் செயலர் சமன் பந்துலசேனவிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-222,110)

## கெற்பேலி பகுதியில் கசிப்பு உற்பத்தி

### அப்பகுதி மக்கள் விசனம்

கொடிகாமம், செப்.26

கெற்பேலிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அமோகமாக இடம்பெற்று வருகிறது என்று அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மலிவு விலையில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதால் அதனை அருந்துவோர் சந்திகளில் நின்று அவ்வழியே, பாடசாலை மாணவிகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் செல்ல முடியாத அளவுக்கு தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனர்.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினால் சிறிது நேரத்தில் முறைப்பாடு வழங்கியவரின் வீட்டுக்கு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோர் வந்து அவர்களை அச்சுறுத்துகின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் பொலிஸ் நிலையத்தில் முறையிட மக்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,செப்.26

இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் அவற்றில் பயணித்த நால்வர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை புத்தூர் சந்தியில் இடம்பெற்றது.

சரசாலை தெற்கு ,மீசாலை கிழக்கு, அல்லாரை வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## மாட்டுவண்டிச் சவாரி

மன்னார்,செப்.26

மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மன்னார் கருக்காய்குளம் சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் கரவெட்டி சோனப்பு சவாரித்திடலிலும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளன அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொதுக் கூட்டம்

அளவெட்டி,செப்.26

தெல்லிப்பழை கலாசார மத்திய நிலைய அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

நிலையப் பொறுப்பதிகாரி சி.மகிந்தன் தலைமையுரை ஆற்றுகையில் "பிரதேச ரீதியாகவுள்ள கலாசார மத்திய நிலையங்களூடாக பிரதேச, மாவட்ட, மாகாண, தேசியமட்டம் என்று சிறந்த கலைஞர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இங்கு நடத்தப்படுகின்ற வயலின், மிருதங்கம், நடனம், ஆகிய பயிற்சிகள் இலவசமாக பயிற்சியளிக்கப்படுகின்றன.

எனவே ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் கலையார்வத்தை இனங்கண்டு ஊக்கிவிக்க வேண்டியது கட்டாயமாகும்"-என்றார். (ஐ-36)

## மாந்தை கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா





முல்லைத்தீவு,செப். 26

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மாந்தை கிழக்கு பிரதேச கலாசார பேரவையால் நிகழ்வு நடத்தப்பட்டது.

பிரதேச செயலரும், பிரதேச கலாசார பேரவையின் தலைவருமான செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலர் ம.ஜெகூ.,முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ந.சுதாகரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலக கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிரதேச பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

புலவர் வள்ளுவதாசன் எழுதிய நாவல் இரண்டும், சொல்லுக்குறுதி நூல் வெளியீடும் இடம்பெற்றன. (ஐ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பார்த்தீபன் கனவு பலிக்கட்டும்

எங்கெல்லாம் அடக்குமுறைகள் நிகழ்கின்றனவோ அங்குதான் புரட்சிகள் வெடிக்கும். அடக்குமுறை நிகழாவிடத்தில் புரட்சிக்கு என்ன அவசியம்? எனவே எல்லாப் புரட்சிகளுக்கும் மூலகாரணம் அடக்குமுறையே. அப்படித்தான் எங்கள் தாயகத்திலும் இன்னொரு அகிம்சை வழி மக்கள் புரட்சிக்கான விதையை அரசு விதைக்கத் தொடங்கியிருக்கிறது.

தனிச்சிங்களச் சட்டம், திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள், நில அபகரிப்பு, மொழிப்புறக்கணிப்பு, இனக்கலவரம் என்று பல வழிகளிலும் பௌத்த சிங்களப் பேரினவாதம் முன்னைய காலங்களில் தமிழினம் மீது கட்டவிழ்ந்த அடக்குமுறைகளே அகிம்சை ரீதியான போராட்டத்துக்கும் பின்னர் ஆயுதப்போரட்டத்துக்கும் வழிகோலின. அடக்குமுறை என்ற தூண்டலின் துலங்கல் எப்போதும் போராட்டங்களாகவே முகிழ்த்திருக்கின்றன. அதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. அப்படி சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்த தமிழர்களின் விடுதலைக்கான ஆயுத போராட்டம் சுமார் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து, இலங்கையை ஒருவழி பண்ணியபின்னரே ஓய்ந்தது.


அதன் பின்னர் போரால் ஏற்பட்ட வலிகளாலும், இழப்புகளாலும் தமிழினம் இன்னொரு போராட்டம் பற்றிய கனவுகளைப் புதைக்கவேண்டிய நிலை. ஏனெனில் இனியுமொரு பேரிழப்பைச் சந்திக்கத் தமிழர்கள் தயாராகவிருக்கவில்லை. கூடவே கண்ணீரும், செந்நீரும் விட்டு வளர்த்த உரிமைப்போராட்டப் பயிரை கண்முன்னர் கருகக் கொடுத்த குற்றவுணர்ச்சி, தமிழர்களின் ஓர்மத்தை தற்காலிகமாக தள்ளிவைத்தது. இறுதிப்போரில் தமிழினம் கொடுத்த பெருவிலைக்கு சர்வதேசம் ஏதேனும் நீதியை வழங்குமென்ற நினைப்பும் பொய்த்துப் போனது. என்றாலும், அரசியல் ரீதியாக ஏதேனும் உரிமைகளைப் பெற்று நிம்மதியாக வாழ வழி கிடைக்காதா என்ற நப்பாசையோடு வாக்களித்தும் எதுவுமே நடக்கவில்லை. குறைந்தபட்ச உரிமைகளை வழங்கிய 13 ஆம் திருத்தத்துக்கும் சாவு மணி அடிக்கும் வேலைகள் தொடங்கிவிட்டன.

இந்தநிலையில் தான் கடந்த சில வருடங்களாகத் தமிழர்களுக்கு, தங்கள் இனத்துக்காக மரணித்த மக்களையும், போராளிகளையும் நினைவுகூர்வதற்கான இறுக்கங்கள் தளர்த்தப்பட்டிருந்தன. இதனால் கடந்த 5 வருடங்களாக மிக அமைதியான வகையில் , எந்தவொரு குழப்பமும் இல்லாதவகையில் நினைவேந்தல்கள் நடந்து முடிந்திருந்தன. ஒரு குண்டூசியளவு கூட அந்த நினைவேந்தல்களில் பிரிவினைக்கான கோஷங்களோ, மக்களின் அமைதியைக் குழப்பும் சம்பவங்களோ இடம் பெற்றிருக்கவுமில்லை.

அப்படியிருந்தும், இம்முறை பயங்கரவாதியை நினைவுகூர அனுமதித்தால், அது மக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்திவிடும் என்று அரசின் ஏவுதலால், பொலிஸ் தரப்பு நீதிமன்றத் தடையுத்தரவை வாங்கியுள்ளது. சரி, நினைவேந்தல் செய்யவில்லை, எங்கள்வழியில் இன்னொரு இடத்தில்-செல்வச்சந்நிதி ஆலயத்தில் உண்ணாவிரதம் இருக்கப் போகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் அறிவித்தன. அதற்கும் இடம்கொடுக்காத வகையில் அந்த ஆலயத்தில் நடைபெறவிருந்த உண்ணாவிரத நிகழ்வுக்கும் உடனடியாகவே தடையுத்தரவை வாங்கிவிட்டது பொலிஸ். செல்வச் சந்நிதியில்தான் உண்ணாவிரதத்தை வைக்கமுடியவில்லை. இன்னொரு இடத்தில் இன்று திட்டமிட்டபடி உண்ணாவிரதம் நடந்தே தீருமென தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று முடிவெடுத்தன. உடனேயே துள்ளிக் கிளம்பிய பொலிஸார், எந்த இடத்தில் உண்ணாவிரதம் நடக்கப் போகின்றது என்பதை ஊகிக்கமுடியாமல், யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல நீதிமன்றங்களிலும் தடையுத்தரவை வாங்கிவிட்டனர் எனச் சொல்லப்படுகின்றது. எப்படியாவது திலீபனை கடைசிநாளிலும் கூட தமிழர்கள் நினைவேந்திவிடக்கூடாது என்பதற்காக அரசு திட்டமிட்டு நடப்பது பகிரங்கமாகவே தெரிகின்றது. ஆனால் இப்படியான நினைவேந்தல்களைத் தடுக்கும் அடக்குமுறைகள், தமிழ் மக்கள் .மத்தியில் உறங்கிக் கொண்டிருக்கும் உரிமைக்கான நெருப்பை மீண்டும் பற்றியெரியச் செய்ய கூடும். அப்போது மீண்டுமொரு மக்கள் புரட்சி வெடிக்கும். பார்த்தீபன் கனவு பலிக்கும்.

# இலங்கையுடனான உறவு மறுஆய்வு

## மோடி அதிரடி ருவிட்! சீனாவுக்கு 'செக்'!!



கொழும்பு, செப். 26

**இலங்கை – இந்தியாவுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை முழுவதுமாக மறு ஆய்வு செய்ய எதிர்பார்க்கிறேன் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிட்டர் பதிவில் நேற்றுமுன்தினம் குறிப்பிட்டார்.**

கடந்த புதன்கிழமை, பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ வெறியிட்ட ருவிட்டர் பதிவில் 'செப்ரெம்பர் 26ஆம் திகதி, திட்டமிடப்பட்ட மெய்நிகர் உச்சி மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடியுடன் உரையாடவுள்ளேன். அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற பகுதிகளிலிருந்து எமது நாடுகளுக்கு இடையிலான பன்முக இருதரப்பு உறவை மறுபரிசீலனை செய்ய எதிர்பார்க்கிறோம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், குறித்த ருவிட்டர் பதிவுக்கு பதிலளிக்கும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிட்டர் பதிவில், 'இருதரப்பு உறவுகளை விரிவாக மறுஆய்வு செய்ய எதிர்பார்க்கின்றேன். கொரோனா வைரஸ் தொற்றுக்கு பிந்தைய காலத்தில், இரு நாடுகளும் தங்கள் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழியை ஆராய வேண்டும்' என்று குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் உரையாடப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியோ அல்லது இலங்கையில் முன்னெடுக்கப்படும் அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை சம்பந்தமாகவோ இதன்போது கலந்துரையாடப்படாது என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## நவம்பர் 15 வரையில் விமான நிலையங்கள் திறக்கப்பட மாட்டா

கொழும்பு, செப். 26

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கைக்கு அமைய நாட்டில் உள்ள அனைத்து சர்வதேச விமான நிலையங்களும் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அதிகார சபை இதற்கு முன்னர் வெளியிட்டிருந்த அறிக்கையில் விமான நிலையங்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை மாத்திரம் மூடப்பட்டிருக்கும் என அறிவித்திருந்தது. எனினும் மீண்டும் நாடு திரும்பிய இலங்கையர்களை அழைத்து வந்த விமானங்கள், இயந்திர கோளாறு காரணமாக தரையிறங்கும் விமானங்கள், எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறங்கும் விமானங்கள், விமான பணியாளர்கள் ஓய்வெடுப்பதற்காக வரும் விமானங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தற்போது நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை இந்தக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## அமைச்சர் கெஹலிய வடக்குக்குப் பயணம்!

### வியாழேந்திரனும் அவருடன் வருகை

கொடிகாமம், செப். 26

வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் தபால் சேவை மற்றும் வெகுஜன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் அடுத்த வாரம் வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். எதிர்வரும் முதலாம் திகதி முதல் மூன்றாம் திகதி வரை அவர்கள் வடக்கில் தங்கியிருப்பர் என்று தெரியவருகின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்களை அமைச்சர்கள் சந்திப்பர் என்றும் அமைச்சர் குழாமை யாழ். மாவட்டச் செயலர் வரவேற்பார் என்றும் தெரியவருகின்றது. (ம-159)

# 2/3 பெரும்பான்மைக்காக பிள்ளையானுக்குப் பதவி!

## பங்காளிகளுக்கும் வலைவீச்சென பதறுகிறது சஜித் அணி

கொழும்பு, செப். 26

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்காகவே 'மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைமை பதவி' எனும் இலஞ்சம் பிள்ளையானுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தற்போது சிறையில் இருக்கின்றார். அவரால் வெளியில் வரமுடியாது. நாடாளுமன்றஉறுப்பினருக்கானசிறப்புரிமையைப் பயன்படுத்தி, சபை அமர்வில் மட்டுமே பங்கேற்கமுடியும். நிலைமை இப்படியிருக்கையில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரால் எப்படி கூட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்ற முடியும். இந்த அரசுக்கு 145 ஆசனங்களே இருக்கின்றன. மூன்றிலிரண்டு பெரும்பான்மை வேண்டுமெனில் பிள்ளையான் போன்றவர்களின் ஆதரவு அவசியம். அதற்கான லஞ்சமாகவே பதவி வழங்கப்பட்டுள்ளது.

இப்பதவியை வைத்து பிள்ளையானுக்குச் சேவையாற்ற முடியுமா? அதேவேளை, அமைச்சரவை எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கையும் இடம்பெற்றுவருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பங்காளிக்கட்சிகளுடன் அரசு பேச்சு நடத்துகின்றது. ஆனாலும் எமது அணியிலிருந்து எவரும் ஆளுங்கட்சிக்குச் சென்று 20ஆவது திருத்தத்தை ஆதரிக்கமாட்டார்கள் என நம்புகின்றோம்' - என்றார். (ம-44)

# சமுர்த்திக் கடன் வட்டி வீதத்தை குறைக்குமாறு அவசர கோரிக்கை

## துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ஜனாதிபதிக்கு கடிதம்

வவுனியா, செப்.26

**விவசாயிகள் மற்றும் வசதியற்ற வறிய மக்களுக்கு அரசால் சமுர்த்தி வங்கிகளூடாக வழங்கப்படும் சமுர்த்திக் கொடுப்பனவுக்கு அதிக வட்டி வீதங்கள் அறிவிடப்பட்டு வருகின்றன. இதனால் அவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**

இவ்வட்டி வீதங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்குமாறு துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.உலகநாதன் பார்த்தீபன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

தற்போது சமுர்த்தி வங்கிகளில் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற சமுர்த்திக் கடன்களுக்கான வட்டி வீதம் ஏனைய தனியார் வங்கிகள், அரச வங்கிகள் அறவிடுகின்ற வட்டி வீதங்களை விட அதிகமாகவுள்ளன.

வறிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக சமுர்த்தி வங்கிகளில் இவ்வாறு வழங்கப்படுகின்ற கடன்களால் மக்கள் சிரமப்பட்டுகின்றனர். ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு இவ்வட்டி வீதங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இதனைப் பரிசீலனை செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் தெரியப்படுத்துகிறேன் - என்றுள்ளது.

(ஐ-110)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கொடிகாமம்,செப்.26

போதைப் பாவனையால் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களை மீட்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி சமூக அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் கை.இராகுலன், கிளிநொச்சி மருத்துவமனை மனநல மருத்துவ அதிகாரி மா.ஜெயராஜ் மற்றும் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலய அதிபர் அ.பங்கயச்செல்வன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (ஐ-159)



## கடலுக்குச் செல்லாததால் முல்லை மீனவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, செப்.26

முல்லைத்தீவு, மாவட்டத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்வதால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம், பிற்பகலில் இருந்து கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது. இதனால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஒரு லட்சம் பயனாளிகளுக்கு பயிற்சி

சாவகச்சேரி. செப். 26

“சௌபாக்கியத்தின் நோக்குகை” என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல நோக்கு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு லட்சம் பயனாளிகள் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றின் ஊடாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

திணைக்களத்தால் இதற்கென தெரிவு செய்யப்பட்ட 34 தொழில்களுக்கான வெளிக்களப் பயிற்சிகள் நான்கரை மாதங்கள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள அரச திணைக்களங்களால் வழங்கக் கூடிய துறைகளைத் தெரிவு செய்து இந்தப் பயிற்சிகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள திணைக்களங்களால் வழங்கக்கூடிய பயிற்சிகள் தொடர்பான துறைகளைத் தெரிவுசெய்து அனுப்புமாறு பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-9)

## நூல் வெளியீடு

புதிய பாடத்திட்டத்தில் அமைந்த தரம் 8ஆம் ஆண்டுக்கான கணித நூலின் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட ஓய்வு பெற்ற முன்னாள் செயலர் நா.வேதநாயகன், சிறப்புவிருந்தினர்களாக தியாகி அறக்கொடை நிலைய நிறுவுநர் வா.தியாகேந்திரன், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் மு.அசோக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## மண்மேடு சரிந்து வீழ்ந்து போக்குவரத்துக்கு தடை

### கௌதாரிமுனை மக்கள் சிரமம்

கிளிநொச்சி, செப்:26

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கௌதாரி முனை சுற்றுலா மையத்தின் மண்மேடு வீதியில் சரிந்து வீழ்ந்ததால், கடந்த மூன்று மாதங்களாக வீதித் தடை ஏற்பட்டுள்ளது என்று கௌதாரிமுனை மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கௌதாரிமுனை பகுதியில் வசிக்கும் மக்கள் பயணிக்கும் முதன்மை பாதையிலேயே மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் கடந்த மூன்று மாதங்களாக அன்றாட தேவைகளை பூர்த்திசெய்ய முடியாது மக்கள் தவிக்கின்றனர். அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்குச் செல்வதென்றால் கூட அந்த வாகனம் குறித்த பாதையினூடாக கிராமத்துக்குள் வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அந்தப் பாதையைச் சீர்செய்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-113)



## விழிப்புணர்வு செயற்றிட்ட நிகழ்வு

மன்னார்,செப்.26

தேர்தல் பரப்புரை நிதி மற்றும் தேர்தல் செயல்முறை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல் திட்ட நிகழ்வு மன்னாரில் நேற்று நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் ‘பவ்ரல்’ அமைப்பும், மன்னார் மாவட்ட தேர்தல் திணைக்களமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

நிகழ்வில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன், ‘பவ்ரல்’அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56)



## தொழில் சார் முயற்சியால் பெண்கள் மீண்டெழலாம்

### கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு



கிளிநொச்சி, செப்.26

நுண் நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் மீண்டெழுவதற்கு பயிற்சிகளுடன் கூடிய தொழில்சார் முயற்சிகள் பெரிதும் துணையாக இருக்கும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தனில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான தொழில்சார் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போ தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெண்களின் முயற்சியும் இந்த நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாக உள்ளது. அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து செயற்படுவதன் மூலம் தான் அபிவிருத்தியை அடையமுடியும். அத்தோடு வருமானத்தை உயர்த்திக்கொள்வதற்கு அது வழிவகுக்கும். எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சனத்தொகை வீதத்தில் அதிகளவானோர் பெண்களாகவே காணப்படுகின்றனர். நாட்டில் பெண்களும் அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் ஈடுபடுவது கட்டாயத் தேவையாக அமைந்துள்ளது. குறிப்பாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்ற அடிப்படையில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான பெண்கள் வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்காக பல்வேறு விதங்களில் போராடிப் பிரச்சினைகளுக்குள் சென்றிருப்பதை நாங்கள் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக நுண்கடன்களால் பாதிக்கப்பட்ட பெண்களே அதிகமாக உள்ளனர். இவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு தொழில்சார் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் இவ்வாறான பயிற்சிகள் முக்கியமானதாக அமையும்- என்றார். (ஐ-222)



# 12 ஆம் நாள்

## தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்

மு.வே.யோ.வாஞ்சிநாதன்

இன்று அதிகாலை 5 மணிக்கு ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்து விட்டது! திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு விட்டது. எங்கும் ஒரே இருள்மயம். காற்றும் பலமாக வீசத் தொடங்கியது.

பல நாள்களாக திலீபனுடன் சேர்ந்து நானும் எனது நண்பர்களும், முழுமையான தூக்கமில்லாமல் இருந்ததால் இன்று மிகுந்த சோர்வுடன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தோம். மாறன், ராஜன், தேவர், இரு நவீனன்கள், மாத்தயா, திலீபனின் அண்ணன் இளங்கோ, எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு தூங்கினோம். பன்னிரண்டு நாள்கள் உடல்களைச் சாறாகப் பிழிந்தெடுத்த அசதித் தூக்கமின்றி, அது வேறொன்றுமில்லை. மேடைக்கு முன்னே அமர்ந்திருந்த ஒருவர் என்னை வந்து தட்டி எழும்பியதும் நான்தான் முதலில் திடுக்கிட்டு எழும்பினேன். கும்மிருட்டில் என்ன செய்வதென்று தெரியாமல். "நவீனன்......" என்று அழைத்தபடி திலீபனின் கட்டிலில் கையை வைத்தேன். அவர் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தார். அதனால் மனம் அமைதியடைந்தது. அவரின் உடல் 'ஜில்' லென்று பனிக்கட்டியைத் தொடுவது போல் குளிர்ந்து காணப்பட்டது.

மனம் 'பட பட' வென்று அடிக்கத் தொடங்கியது... மீண்டும் 'நவீனன்" என்று அழைத்தேன். நவீனன் எழும்பி விட்டான். ஐந்து நிமிடங்களில் மேடையில் ஒரு பெரிய மெழுகுவர்த்தி எரியத் தொடங்கியது... மெழுகுவர்த்தியின் ஒளியிலே திலீபனின் முகம் நன்றாகத் தெரிந்தது... ஒரே வினாடிதான்! அதற்குள் அந்த மெழுகுவர்த்தி காற்றின் வேகத்தினால் அணைந்துவிட்டது. பலத்து வீசிய காற்று அதை மீண்டும் எரிய விடுமா? என்பது சந்தேகமாகத்தான் இருந்தது..... ஆனால், ஐந்து நிமிடங்களில் மின்சாரம் வந்துவிட்டது...

திலீபனின் நிலை எல்லையைக் கடந்துவிட்டது என்பது எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அதனால், என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது... நாடித்துடிப்பைப் பரிசோதிக்கிறேன். கணிக்க முடியவில்லை.... மிகவும் மெல்லியதாக அடிக்கிறது.... உடனே இரத்த அழுத்தத்தைக் கணிக்கின்றேன்... அது மிகவும் குறைவாக இருக்கிறது... 50? என்ற நிலையில் ஒரு நோயாளியால் இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் உயிர் வாழ முடியும் என்பது எனக்குத் தெரியும். உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது.

திலீபன் அடிக்கடி கூறிய வார்த்தைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. 'வாஞ்சி அண்ணை! எனக்கு என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பலவந்தமாகவோ, சுய நினைவற்ற நிலையிலோ தர முயற்சிக்கக்கூடாது... அப்படி என் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் நான் இறக்கும் மட்டும் எனக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக் கூடாது... சுய நினைவோடு என்றாலும் சரி... சுய நினைவில்லை என்றாலும் சரி.... இதுக்குச் சம்மதிக்கிறனெண்டு சத்தியம் செய்து தாருங்கோ..." என்று விடாப்பிடியாக நின்று என்னிடம் சத்தியம் வாங்கிய பிறகுதான் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார் அவர். அப்படியிருக்க, அவர் விருப்பத்துக்கு மாறாக எப்படி அவருக்குச் சிகிச்சையளிப்பேன்? எப்படி அவருக்கு நீர் ஊட்டுவேன்? மனிதநேயத்தையும் - அதன் தாற்பரியங்களையும் மதிக்கும் ஓர் வைத்திய சேவையாளன் என்ற நிலையைத் திலீபன் விஷயத்தில் நிறைவேற்ற விடாமல் என் கைகளைக் கட்டிப் போட்டது எது?....... எது? ஆம் , "சத்தியம்!" என்ற இந்த ஐந்து எழுத்துக்களுக்காகத் தானே திலீபன், " அகிம்சை" என்ற நான்கு எழுத்துக்களைக் கொண்ட போராட்டக் களத்தில் குதித்தான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று உயரிய அம்சங்களினால் வேரூன்றி வளர்த்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதால், 'கட்டுப்பாடு' என்ற நல்வழியிலே கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காகத் திலீபனை என் கண்ணெதிரிலேயே 'பலி' கொடுப்பதைத் தவிர, வேறு வழியொன்றும் எனக்குத் தெரியவில்லை. என் கடமையைச் செய்வதற்காக மேடையின் பின்பக்கம் இறங்கிச் செல்கிறேன். அங்கே பிரதித் தலைவர் மாத்தயா நிற்கிறார். அவரிடம் திலீபனின் உடல் நிலையின் அபாயகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறேன். திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்ட விடயம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவத் தொடங்கியது. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், பொதுமக்களும் மேடையைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். திலீபனுக்கு கடைசி நிமிடம் வரையும் ஒருவித சிகிச்சையும் அளிக்க முடியாமல் எமது கைகள் கட்டப்பட்டிருந்தமைக்கு வேறு முக்கிய காரணமும் ஒன்று இருந்தது. எமது காதில் விழக்கூடிய தாகவே பல எதிரணி உறுப்பினர்களும், எமது இயக்கத்துக்கு எதிரானவர்களும் பேசியமையைக் காதால் கேட்டவர்களில் நானும் ஒருவன்.

"புலிகள் தந்திரமாக மக்கள் மனத்தை மாற்றுவதற்காக உண்ணாவிரதம் என்ற பெயரிலே தண்ணியைக் குடிச்சுக்கொண்டு இருப்பார்கள்... ஆர் இதைக் காணப் போகினம்? கடைசியில் 5 தீர்மானங்களும் நிறைவேறுமட்டும் வைத்தியம் செய்து ஆளைச் சாகவிடமாட்டினம்....இதுதான் இந்த சாகும்வரை நீர் அருந்தாமல் உண்ணாவிரதம் இருப்பதன் உண்மை..." இப்படியான பேச்சுக்களுக்கு உண்மை வடிவம் கொடுத்து, "புலிகள் பொய்யர்கள்" என்ற கெட்ட பெயரை வரவிடாமல் காப்பாற்றுவதற்காகவும் எம் கைகள் கட்டப்பட்டிருந்தனவே தவிர, வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

எம் கைகள் மட்டும் கட்டுப்படாமல் இருந்திருந்தால், எமது உயிரினும் மேலான, தியாக தீபம் திலீபனை எமது உயிர்களைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்போம்.... ஆனால்.... முடியவில்லையே? விதி! தன் வலிய கரங்களை மிக நன்றாகவே திலீபனின் கழுத்தில் இறுக்கிவிட்டான். உயிருடன் அந்த மனிதத் தெய்வம் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருப்பதை என் கண்களால் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டமைக்காக, நான் வெட்கப்பட்டேன். வேதனைப்பட்டேன். ஆனால், என்ன செய்ய முடியும்? 265 மணித்தியாலங்கள் தனது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அந்த தியாகத் திலீபன், இன்று காலை (26.09. 1987) 10.48 மணியளவில், எம்மையெல்லாம் இந்தப் பாழும் உலகில் பரிதவிக்க விட்டுவிட்டுத் தான் மட்டும் போய்விட்டான். ஆம்! தமிழர்தம் விளக்கு அணைந்துவிட்டது! அணைந்தேவிட்டது! டொக்ரர் சிவகுமார் அவர்கள், திலீபன் இறந்த பின் அவரைப் பரிசோதனை செய்து தனது இறுதியான முடிவைச் சொல்லிவிட்டு, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்த போது, மக்கள் கதறி அழத் தொடங்கினர்...

எங்கும் அழுகைச் சத்தம்....

விம்மல் ஒலி...

சோக இசை.... !

வானமே இடிந்து விட்டதைப் போன்ற வேதனை எல்லோரையும் ஆக்கிரமித்திருந்தது. வானத்து நிலவு கீழே விழுந்து விட்டது போன்ற உணர்வு! காலை 11 மணிக்கு 'என்பார்ம்' செய்வதற்காக, அவரது உடலை யாழ். வைத்தியக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றோம். பிற்பகல் 4.15 மணியளவில் திரும்பவும் அதே மேடைக்கு முன்பாக அவரின் புகழுடம்பு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் புள்ளி போட்ட, பச்சையும் - கறுப்பும் கலந்த இர்ாணுவ உடையும், தொப்பியும் திலீபனுக்கு அணியப்பட்டு, 'லெப்டினன்ட் கேணல்' என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் செய்த தியாகத்துக்கு அவருக்கு எந்தப் பட்டமும் தகுதியில்லை, அல்லது ஈடாகாது என்பது எமக்குத் தெரியும்......

ஆனால், என்ன செய்ய முடியும்? அவரைப் படுக்க வைத்திருந்த பேழையை, விடுதலைப்புலிகளின் சிவப்பு நிறத்திலான கொடி அலங்கரித்திருந்தது. தந்தை, சகோதரங்கள், உறவினர்கள் ஆகியோர் உடலை வந்து தரிசித்துச் சென்றனர். பெட்டியைத் திறந்ததுமே அவரது அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான, இராசையா "ஓ..." என்று அலறியவாறு அவர் உடல் மீது விழுந்து புரண்டு அழத் தொடங்கிவிட்டார். அவரின் அழுகையைத் தொடர்ந்து பொதுமக்களும், சிறு பிள்ளைகளைப் போல் குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி நெஞ்சை உருக்கியது. பொதுமக்கள் மணிக்கணக்காகக் காத்திருந்து, நீண்ட வரிசையிலே வந்து தமது இறுதி அஞ்சலியை மண்ணின் மைந்தனுக்குச் செலுத்தினர். ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமார், தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதவாறு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தலைவர் பிரபாகரன், சொர்ணம், மாத்தயா, குமரப்பா, புலேந்திரன், சந்தோசம், ஜொனி, பிரபா, இம்ரான், அன்ரன் மாஸ்ரர், சங்கர் அண்ணா, நடேசன் மற்றும் ஏனைய இயக்க உறுப்பினர்களும் தத்தம் இறுதி அஞ்சலியைத் தமது தோழனுக்குச் செலுத்தினர். சாஜகான், நரேன், அருணா, சிறி, ராஜன், தினேஸ் போன்றோர் தம்மைச் சமாளிக்க முடியாமல் விம்மி விம்மி அழுதனர். திலீபனின் தியாகப் பயணத்தில் 12 நாள்கள் அவரின் கூட இருந்து, அவரின் போராட்டத்தில் பங்குபற்றி, வேதனையின் எல்லைக்கே சென்றுவந்த எனக்கு, இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு இன்னும் எத்தனை நாள்கள் தேவையோ நானறியேன்.



ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்! திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை அதற்குப் பதிலாக அவர் ஒரு படிப்பினையை எமக்குக் கற்பித்து விட்டுப் போயுள்ளார்... அகிம்சைப்போராட்டம் என்பது மனிதநேயமும், உயர் பண்பும் மிக்கவர்களிடம்தான் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்... ஆயுதங்கள் தான் எமது தமிழீழப் போராட்டத்தைப் பொறுத்தவரை சரியான பதில் தரமுடியும் என்பதையும், திலீபன் மறைமுகமாக உணர்த்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதே எமது கணிப்பு... அந்தத் தியாக தீபத்தின் இலட்சியங்கள் நிறைவேற, எம்மை நாம் அர்ப்பணிப்போமாக!



## யாழ்ப்பாணம் - வண்ணை

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்- 26.09.2020

## தேரேறி வரும் நாராயணனின் பாதம் தொழுவோம்

வைணவம் சார்ந்த வைகாசன ஆகம விதிமுறைகளுக்கு இணங்க. யாழ்ப்பாணம் திருநகரிலே ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில். அர சோச்சிய தமிழ் மன்னனாகிய குண பூசண ஆரியன் செகராச சேகரனின் காலத்து சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தே உடைய ஒரு திவ்விய சேத்திரமாக விளங்கத் தொடங்கியது. இத்தகு சிறப்புக்களோடு விளங்கும் திருத்தலத்தில் நடைபெற்று மகோற்சவங்கள் தத்து வார்த்த சிறப்புக்களை உணர்த்துகின்றது.

நாராயணனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம்தொண்மை வரலாற்று சிறப்புத் தத்துவங்களை தன்னுள் அடக்கி மிளிரும் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்களாவர். இவர்களால் அருளப்பட்ட அருட்பாசுரங்களில் திருமாலின் பன்னிரு திருப்பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

கேசவன் நாராயணண் மாதவன் கோவிந்தன் விஸ்ணு மதுசூதனன் திருவிக்கிரமன் வாமனன் கீதரன் இருடிகேசன் பத்மநாதன் தாமோதரன் என்பனவாகும். இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் பெரிய திருமந்திரம் என்ற சிறப்பை உடையது. நாராயணண் என்பது நாரம் அயணன் என்ற இரண்டு சொற்களால் ஆனது.

### ஈழத்து திருப்பதி

யாழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியில் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் என்ற திவ்விய திருநாமத்தோடு பன்னெடுங்காலமாக புராதன சிறப்ப !க்கள் பலவற்றோடு கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார்.

இந்த ஆலயமானது பல குறிச்சிகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் கிழக்கு திசையில் ஆஞ்சநேயர் சந்நிதியும் தேர்முட்டியும் கருடன் ஆலயமும் அமைந்து காட்சி தருகின்றன. ஆலயத்தின் தென்புறத்தே அழகிய பூந்தோட்டமும் சந்திர புஸ்கரணி என்ற திருமஞ்சன தீர்த்த தடாகமும் ஆலயத்தின் வடக்கு பகுதியில் ஸ்ரீலக்சுமி நாராயணன் கல்யாண மண்டபமும் அமைந்து வேங்கடவனின் திருக்கோவிலுக்கு சிறப்புச் சேர்க்கின்றன.

### திருத்தேர்

பெருமாள் பவனி வருகின்ற திருத்தேரில் கூட ஸ்ரீ ராமாயன மகாபாரத இதிகாசங்களையும் ஸ்ரீ கிருஷ்ண லீலைகளையும் அதன் வரலாறுகளையும் சித்தரிக்கின்ற திருக்காட்சிகளை காணலாம்.

ஆலய பிரதான வாயிலில் அழகுடன் ஏழு வாயிலைக் கொண்ட வானளவாக உயர்ந்த இராஜகோபுரம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. தேவியர் சகிதமாக இணைந்த மூலவரும் பரிவார மூர்த்திகளும் நவக்கிரக பீடமும் அமைந்து யாழ் நகரிலே பிரசித்தி பெற்ற வைணவ ஆலயமாக வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் விளங்குகின்றது.

### ஸ்ரீ ரெங்கநாதர் திருக்காட்சி

பெருமாளின் ஆலயத்திலே ஸ்நபன மண்டபத்தில் மணிபூரகம் என்ற பகுதியில் ஸ்ரீரங்கநாதரின் சிவா விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீதேவி பூமிதேவி சமேததரராக ஸ்ரீ அரங்க நாத சுவாமி பிரமனை தாமரை மலரில் தாங்கிய வண்ணம் ஆதி ஷேனாகிய ஐந்து தலைகளுடைய அரவின் மீது சயனித்திருக்கின்ற திருக்காட்சி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

→ தொடர்ச்சி →




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

### அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

## வண்ணை ஸ்ரீ வரதராஜபெருமாள் ஆலய தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 26.09.2020

→ தொடர்ச்சி →

இத்தகு பெருமைகளையும் அற்புதமான வரலாற்றுச் சிறப்புக்களையும் கொண்ட ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் தேர்த்திருவிழா இன்று (26.09.2020) சனிக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது.

பத்து அவதாரங்களை எடுத்த பகவான் திருத்தேரில் ஆரோகணித்து வருகின்ற திருக்காட்சி அற்புதமாக அமைந்து விடுகின்றது. வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தந்தருள காத்தல் கடவுளாக அபயம் செய்து அரவணைத்து நல்வாழ்வு தர நாராயணண் திருத்தேரில் பவனி வருகின்றான்.

நினைத்ததை நிறைவேற்றும் வண்ணனாக வண்ணையம்பதியில் தேரேறும் கண்ணன் தேர்வடம் பற்றுவோம் வாழ்வாங்கு வாழும் வரம் கேட்போம் எல்லா நலங்களையும் அருளும் எழில் வண்ணனின் அருள் நலம் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

















# தேரேறி வரும் நாராயணனின் பாதம் தொழுவோம்



காரை எம்.பி.அருளானந்தன்

யாழ்ப்பாணம் திருநகரில் ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில், தமிழ் மன்னனாகிய குண பூசண ஆரியன் செகராச சேகரனின் காலத்தில், சிறிய உருவில் வைணவ வழிபாட்டுத் தலமாக உருப்பெற்றது வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் ஆலயம்.

ஒல்லாந்தர் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில், பிரசித்தமான நவக்கிரகபீடத்தை தன்னகத்தே உடைய ஒரு திவ்விய சேத்திரமாக விளங்கத் தொடங்கியது.

நாராயணனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம் தொண்மை வரலாற்று சிறப்புத் தத்துவங்களை தன்னுள் அடக்கி மிளிரும் வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்களாவர். இவர்களால் அருளப்பட்ட அருட்பாசுரங்களில் திருமாலின் பன்னிரு திருப்பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் பெரிய திருமந்திரம் என்ற சிறப்பை உடையது. நாராயணண் என்பது நாரம் அயணன் என்ற இரண்டு சொற்களால் ஆனது.

**ஈழத்து திருப்பதி**

யாழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியில் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் என்ற திவ்விய திருநாமத்தோடு பன்னெடுங்காலமாக புராதன சிறப்பங்கள் பலவற்றோடு கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார்.

இந்த ஆலயமானது பல குறிச்சிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கு கின்றது. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் கிழக்குத் திசையில் ஆஞ்சநேயர் சந்நிதியும் தேர்முட்டியும், கருடன் ஆலயமும் அமைந்து காட்சி தருகின்றன.

ஆலயத்தின் தென்புறத்தே அழகிய பூந்தோட்டமும், சந்திர புஸ்கரணி என்ற திருமஞ்சன தீர்த்த தடாகமும், ஆலயத்தின் வடக்குப் பகுதியில் ஸ்ரீலக்சுமி நாராயணன் கல்யாண மண்டபமும் அமைந்து வேங்கடவனின் திருக்கோவிலுக்கு சிறப்புச் சேர்க்கின்றன.

**திருத்தேர்**

பெருமாள் பவனி வருகின்ற திருத்தேரில் கூட ஸ்ரீ ராமாயண மகாபாரத இதிகாசங்களையும் ஸ்ரீ கிருஷ்ண லீலைகளையும் அதன் வரலாறுகளையும் சித்தரிக்கின்ற திருக்காட்சிகளை காணலாம்.

ஆலய பிரதான வாயிலில் அழகுடன் ஏழு வாயிலைக் கொண்ட வானளவாக உயர்ந்த இராஜகோபுரம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. தேவியர் சகிதமாக இணைந்த மூலவரும் பரிவார மூர்த்திகளும், நவக்கிரக பீடமும் அமைந்து யாழ் நகரிலே பிரசித்தி பெற்ற வைணவ ஆலயமாக வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் விளங்குகின்றது.

**ஸ்ரீ ரெங்கநாதர் திருக்காட்சி**

பெருமாளின் ஆலயத்திலே ஸ்நபன மண்டபத்தில் மணிபூரகம் என்ற பகுதியில் ஸ்ரீரங்கநாதரின் சிவா விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீதேவி, பூமிதேவி சமேததரராக ஸ்ரீ அரங்க நாத சுவாமி பிரமனை தாமரை மலரில் தாங்கிய வண்ணம் ஆதிஷேனாகிய ஜந்து தலைகளுடைய அரவின் மீது சயனித்திருக்கின்ற திருக்காட்சி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகு பெருமைகளையும் அற்புதமான வரலாற்றுச் சிறப்புக்களையும் கொண்ட ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாளின் தேர்த்திருவிழா இன்று (26.09.2020) சனிக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது.

# இலங்கைக்கு எதிரான நாடுகளுக்கு பதிலடி

## ஐ.நா.வில் வாக்களிக்க மறுப்பு

கொழும்பு, செப்.26

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு 3 மேற்குலக நாடுகள் வாக்களிப்பை எதிர்பார்த்திருந்தன. அவற்றுக்கு வாக்களிக்க முடியாது என்று இலங்கை தெரிவித்துவிட்டது. அந்த நாடுகள் இலங்கை தொடர்பாகக் கடுமையாகச் செயற்பட்டிருந்தன.

இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க. நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும், நானும் தெளிவாக அறிவித்து விட்டோம். எம்மால் செய்யக் கூடிய விடயங்களை மட்டுமே ஏற்போம் என்பதையும் கூறிவிட்டோம். ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எமது நாட்டின் இந்தக் கொள்கை நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார். தேவையற்ற தலையீடுகளுக்கு அடிபணியமாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். இந்த முடிவு சிறப்பானதாகும். நாடு தொடர்பாகச் சிந்தித்து முடிவெடுக்கும் தைரியம் அவரிடம் உள்ளது. ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அங்கத்துவ நாடுகளைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு அண்மையில் நடைபெற்றது. அங்கத்துவம் பெறுவதற்கு 3 மேற்குலக நாடுகள் முன்னிலையாகின. அந்த மூன்று நாடுகளுக்கும் எமது வாக்கை வழங்க முடியாது என்று எமது நாட்டுப் பிரதிநிதி தெளிவாக அறிவித்து விட்டார். இந்த ஆலோசனையை ஜனாதிபதி வழங்கியிருந்தார். இந்த 3 நாடுகளும் இலங்கை தொடர்பில் கடுமையாகச் செயற்பட்டிருந்தன- என்றார். (எ-44)

## கடற்படைத் தளபதி தூதரக அதிகாரி சந்திப்பு

கொழும்பு, செப்.26

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள கேர்ணல் முஹம்மது சப்தார் கான் நேற்றுக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. பாகிஸ்தான் தூதுரகப் பாதுகாப்பு ஆலோசகருக்கு வாழ்த்துத் தெரிவித்த கடற்படைத் தளபதி, இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவு மற்றும் ஒத்துழைப்புத் தொடர்பான பரஸ்பர நலன்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பை நினைவுகூரும் வகையில் கடற்படைத் தளபதியும், பாகிஸ்தான் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

(எ-இ)

## பொடி லெசியின் மறியல் நீடிப்பு

கொழும்பு, செப்.26

பாதாள உலகக் குழு உறுப்பினரான "பொடி லெசி" என்று அழைக்கப்படும் ஜனித் மதுசங்கவின் விளக்கமறியல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பாதுகாப்புச் செயலர் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் தொடர்பான வழக்கு இன்று காலி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, ஜனித் மதுசங்க நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரது விளக்கமறியலை நீதிமன்றம் நீடித்தது.

(எ-இ)



தென்மராட்சியில்

## இடைவிலகிய மாணவரை மீண்டும் இணைக்க முடிவு

சாவகச்சேரி, செப். 26

பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மற்றும் ஒழுங்கற்ற நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு உடனடியாக அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில். முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா காலத்தில் பாடசாலைகளுக்கு நீண்ட நாள்கள் விடுமுறை வழங்கி தற்போது அவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலைக்கு வராமல் இடை விலகிய மாணவர்கள், மாணவர்களின் பாடசாலை வரவு ஒழுங்கின்மை தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. மாணவர்களின் பெற்றோருடன் தொடர்புகொண்டு, பாடசாலைக்குச் செல்ல மறுப்பதன் காரணத்தைக் கண்டறிந்து, மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு பாடசாலைகளில் மீண்டும் அவர்களை இணைப்பதென முடிவு செய்யப்பட்டது.

(ப-9)

# தமிழ்க் கட்சிகள் ஓரணியாக நிற்கின்றமை நல்ல சகுனமே

## தமிழரசு கட்சியின் இளைஞர் அணி வரவேற்பு

**வவுனியா,செப்.26**

**காலத்தின் தேவை கருதி கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைத்துத் தமிழ்த் தேசியக்கட்சிளும் ஓரணியில் நின்று குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றமை நல்ல சகுனமாகும். இவ்வாறான கருத்தொருமித்த செயற்பாட்டை தமிழ் அரசின் இளைஞர் அணி வரவேற்கின்றதென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித்தலைவர் சி.சிவதர்சன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக காலம் காலமாக அரசியல் கட்சிகள், போராட்ட அமைப்புகள் தொடர்ந்தும் போராடி வந்துள்ளன. நோக்கங்கள் ஒன்றாக இருப்பினும் துரதிஷ்டவசமாகக் கட்சி அரசியலை முன்னிறுத்தி அவ்வப்போது கட்சிகளிடையே முரண்பாடுகள் ஏற்பட்டு தனித்தனியாகப் பிரிந்து நிற்பது தமிழ் மக்களின் அரசியல் இருப்பை மேலும் அதலபாதாளத்தில் தள்ளிவிடும். குறிப்பாக சிறுபான்மை மக்களின் அபிலாசைகளைப் புறந்தள்ளி அறுதிப்பெருமான்மையுடன் ஆட்சிப்பீடமேறியுள்ள இந்த அரசு, தமிழ் மக்களின் எதிர்கால இருப்பைக் கேள்விக்குறியாக்கும் வகையில் செயற்பட்டுவருகின்றது. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையே சட்டச் சவாலுக்குட்படுத்தி மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுவருகின்றது. தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து நின்றால் அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துவிடும். இவ்வாறான சூழ்நிலையில் கருத்து வேறுபாடுகளைப் புறம்தள்ளி தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் நின்று செயற்படுகின்றமை வரவேற்கக்கூடியதொன்றாகும். இந்த ஒற்றுமை தொடரவேண்டுமென்பதே அனைத்துத் தமிழ் மக்களினதும் விருப்பமுமாகும் -என்றுள்ளது

(ப-110)

## பாடசாலை வசமுள்ள கட்டடத்தை மீளக் கையளிக்குமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், செப்.26

கலைமகள் பாடசாலை வசம் உள்ள பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கட்டடத்தை மீளவும் கிராம நிர்வாகத்திடம் வழங்கப்படவேண்டும் என வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் பணித்துள்ளார்.

யாழ் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ் மாவட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு பணித்துள்ளார்.

முன்னாள் மாவட்டச்செயலர் நா. வேதநாயகன் 2001ஆம் ஆண்டு வலி. தென் மேற்குப் பிரதேச செயலாளராக இருந்த போது, ஜிரிசற் நிதியுதவியில் பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் சீரமைப்புச் செய்யப்பட்டு சங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களின் கல்வித் தேவையின் பொருட்டு கலைமகள் பாடசாலையின் முன்னாள் அதிபர் கி. கிருஷ்ணானந்தத்தின் கோரிக்கைக்கமைய தொடர்ந்து முறைப்படி கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடம் பாடசாலை அதிபரிடம் வழங்கப்பட்டது. இதன் பின்னர் பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் எஸ். மணிவண்ணன் ஒகஸ்ட் 2018 இல் பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் மீளவழங்கப்படும் என எழுத்து மூலம் தெரிவித்த போதும் இது வரை கட்டடம் சங்கத்திடம் வழங்கப்படவில்லை என அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்தே வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ. பத்திநாதன் மேற்கண்டவாறு பணித்துள்ளார். அது தொடர்பில் தமக்கு அறிக்கையிடுமாறும் அவர் கோரியுள்ளார்.

(ப-50)

## மாணவரின் போசாக்கு நிலை; புதிய செயற்றிட்டம் ஆரம்பம்

சாவகச்சேரி, செப். 26

யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாணவர்களின் போசாக்கு மற்றும் போசாக்கு நிலைமை தொடர்பான புதிய செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான முதற்கட்ட ஆயத்தப் பணிகள் நேற்று நாவற்குழி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன.

ஆய்வில் மாகாண சமுதாய மருத்துவ நிபுணர், மாவட்ட தாய் சேய் நல மருத்துவ அதிகாரி, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி, நாவற்குழி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ,தென்மராட்சி. கல்வி வலய போசாக்குத் தொடர்பான பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வில் மாணவர்களின் உடற்பயிற்சி, தொழில்பாடு, உணவுப் பழக்க வழக்கம், தரமான போசாக்கு உணவுகளைப் பெற்றுக் கொள்ளல், வீட்டுத் தோட்டம், பாடசாலைத் தோட்டம் தனியாள் சுகாதாரம். போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டன. பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களின் போசாக்கு நிலைமை, உளநலம் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ப-9)

குளத்தில் மண்நிரவி சுற்றுலாமையம்;

## நகரசபைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

வவுனியா,செப்.26

வவுனியா குளத்தில் மண் நிரவி சுற்றுலா மையம் அமைக்கப்பட்டு வருவதற்கு எதிராக குடியிருப்புக் கமக்காரர் அமைப்பால் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா குளத்தில் நகர சபையால், மண் நிரவப்பட்டு சுற்றுலா மையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்து இந்தக் குளத்தின் கமக்காரர் அமைப்பால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கடந்த 18 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கை முதற்தோற்றத்திலேயே தள்ளுபடி செய்யுமாறு நகரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள வழக்கறிஞர்களால் இரண்டு ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் ஓர் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.

மற்றைய ஆட்சேபனை தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி (நேற்று) தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு நீதிபதியால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு ,தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(ப-110)

## குளவிகள் தாக்கு; ஒருவர் உயிரிழப்பு

பதுளை, செப்.26

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகி பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தோட்டத் தொழிலாளியொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

ஹப்புத்தளைப் பகுதியின் தம்பேதன்னைப் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த பொன்னையா ராஜ்குமார் (வயது 46) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

(ப-இ)

## 33 சுகாதார பரிசோதகர்களுக்கு பதவி உயர்வு

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தில் பணியாற்றும் 33 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தரம் 11க்குப் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் கடந்த 2010 - 2012 காலப்பகுதியில் பயிற்சிகள் பெற்று கடந்த 2013ஆம் ஆண்டில் தரம் 111 க்கு நியமனம் பெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர்களே பதவியுயர்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கான பதவியுயர்வுக் கடிதங்கள் மாகாண சுகாதார, சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தை சிறுவர். பராமரிப்பு அமைச்சின் செயலாளர் பா. செந்தில்நந்தனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ப-9)



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சுயேச்சைக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் தேர்தல் செலவுகளை மட்டுப்படுத்துதல் என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று மன்னாரில், மன்னார் மாவட்டச் செயலகத்தின் பழைய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

(ப-213)

# சொதப்பியது சென்னை



பந்து வீச்சு, துடுப்பாட்டம் என்று சகலதுறைகளிலும் சொதப்பிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, டில்லி கப்பிடல்ஸ் அணியிடம் முறையாக வாங்கிக் கட்டி 44 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது.
சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும், டில்லி கப்பிடல்ஸ்க்கும் இடையிலான ஆட்டம் டுபாயில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.




பிரித்திவி சா, சிகர் தவான் ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக சிறப்பான ஆட்டத்தை வழங்கியது. பவர் பிளேயில் ஓட்டங்களைக் குவிக்கவில்லையாயினும், பியுஸ் சாவ்லா, ஜடேஜா ஆகியோரின் சுழற்பந்து வீச்சை வெளுத்து வாங்கி ஓட்டங்களைக் குவித்தது. அந்த வேகத்திலேயே விக்கெட்டுக்களும் சரிந்தன. 10.4 பந்து பரிமாற்றங்களில் அணி 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தவான் 35 ஓட்டங்களுடனும், 43 பந்துகளில் 64 ஓட்டங்களை விளாசிய பிரித்திவி சாவும் அடுத்தடுத்து பியுஸ் சர்லாவின் பந்து வீச்சில் வெளியேறினர். தொடர்ந்து ரிசப் பந்த் மற்றும் அணித் தலைவர் ஸ்ரேஸ் ஐய்யர் சிறப்பான அதிரடி ஆட்டத்தை வழங்கினார். இறுதியில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.
கடந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியின் இமாலய இலக்கை விரட்டி 200 ஓட்டங்களை விளாசிய சென்னை அணி, இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் என்று நம்பப்பட்ட நிலையில், அந்த அணி ஆரம்பத்திலிருந்து சொதப்பியது. முரளி விஜய், வொட்சன் இணையின் சொதப்பலுடன் ஆரம்பமான ஆட்டம் இறுதி வரை அவ்வாறே நகர்ந்தது. டு பிளஸிஸ் 35 பந்துகளில் 43 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தார். ஏனையோர் கைகொடுக்காத நிலையில் 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ரபடா 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ஒ.5)

# புற்றுநோய் மருத்துவமனையை அமைச்சு நிர்வகிப்பது தொடர்பில் ஆராய்வு


யாழ்ப்பாணம், செப். 26
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவை மத்திய சுகாதார அமைச்சின் நேரடிக் கண்காணிப்புக்குள் மாற்றுவது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் அவருடைய செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதில் புற்றுநோய் பிரிவு தலைமைப் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை துறைசார் அதிகாரிகள் மற்றும் யாழ்.போதனா மருத்துவமனையின் துறைசார் மருத்துவநிபுணர்கள் கலந்துகொண்டனர்.
புற்றுநோய் பிரிவு மற்றும் உளநல சிகிச்சைப் பிரிவை மத்திய அமைச்சுக்கு மாற்றுவது தொடர்பில் ஏற்படக்கூடிய சாதக, பாதக தன்மைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.
அதில் கருத்துரைத்த ஆளுநர், இந்தப்பிரிவுகள் தனியே செயற்பட்டு வருகின்றமையால் மத்திய அமைச்சுக்கு பெரும் நிதிச்செலவுகள் ஏற்படுகின்றன. வடக்கு மாகாணத்தை தவிர ஏனைய மாகாண மருத்துவமனைகளில் பல்வேறுபட்ட நிதிப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே குறிப்பிட்ட ஒரு தரப்பினரின் கருத்துக்களை மட்டும் செவிமடுக்காது நோயாளர்கள் தொடர்பில் அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டும். எந்த விதத்திலும் நோயாளர்கள் பாதிக்கப்படக்கூடாது. இது ஒவ்வொரு நோயாளரினதும் உரிமை. இதற்கு முன்னர் அமைச்சுகளுடன் கலந்துரையாடினேன். ஒவ்வொருவரும் நோயாளர் தொடர்பில் அர்ப்பணிப்புடனும் அவர்கள் நலன் தொடர்பில் கரிசனையுடனும் செயற்படவேண்டும்.
சுகாதாரத் திணைக்களத்துக்கு ஒவ்வொரு மாதமும் ஏறத்தாள 10 பில்லியன் ரூபா செலவு ஏற்படுகின்றது. எனவே இவற்றுக்குரிய முதன்மைத் திட்டங்களை சமர்ப்பிக்கவும். அவற்றை அமைச்சரவையுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும். வடக்கு மாகாணத்துக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரண வசதிகள் காணப்படுகின்றன. அவற்றை வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தி நோயாளர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வேண்டும்.
இவைமட்டுமன்றி, மருத்துவர்கள் பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை, என்பனவற்றை தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (த)

# 20க்கு எதிரான மனுக்கள் 29ஆம் திகதி விசாரணை

*ஐவர் கொண்ட நீதியரசர் குழாமும் நியமனம்*

கொழும்பு, செப். 26
நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்த வரைபுக்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் செப்ரெம்பர் 29 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதேவேளை, இந்த மனுமீதான பரிசீலனைகளை மேற்கொள்ள உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஐவர் கொண்ட குழாமும் நியமிக்கப்பட்டுள்ளது.
நீதிபதி ஜெயந்த ஜெயசூரிய தலைமையிலான இந்தக் குழாமில் புவனேக அலுவிஹார, ஜெயந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் சிசிர டி ஆப்ரூ ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவின் சில அத்தியாயங்கள், தற்போது நடை முறையில் உள்ள இலங்கையின் அரசமைப்புக்கு
முற்றிலும் முரணானவை. அவற்றை நிறைவேற்ற வேண்டுமானால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விஷேட பெரும்பான்மைக்கு மேலதிகமாக பொது மக்கள் வாக்கெடுப்பும் நடத்தப்படல் வேண்டும் என்று தீர்ப்பொன்றை வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றில் நேற்று வரை 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (த)


## மரண அறிவித்தல்



**செல்லத்துரை திரவியராஜா**

**பிறப்பு** 1951.03.20 **இறப்பு** 2020.09.25

இணுவில் மேற்கு கந்தசுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திரவியராஜா (ஓய்வு பெற்ற சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்) நேற்று (25.09.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னபூரணம் தம்பதியரின் மருமகனும், அருணாகாந்தியின் (அருணா) பாசமிகு கணவரும், வாஹினி (ஆசிரியை யா/கலட்டி றோ.க.த பாடசாலை), உமாஷங்கர் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் கரைதுறைப் பற்று பிரதேச சபை- முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இ.மணிவண்ணன் (ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மாமனாரும், ஹரிசன், கவீசன், ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பூலோகராணி, சோதியம்மா, திருச்செந்தூர் தேவன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**077 402 4320**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## விபத்தில்......

த்தனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம் ஏ 9 வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தவர்மீது நேற்றுமுன்தினம் இரவு மோதியது. அவர் காயமடைந்து மாங்குளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

செட்டிகுளத்தைச் சேர்ந்த சந்தனகுமார (வயது 41) என்பவரே சாவடைந்தார். (ஓ.5,110)

## யாழ். பல்கலை.....

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் தியாக தீபம் திலீபனின் அஞ்சலி நிகழ்வை மேற்கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பில் பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் பல்கலைக்கழக நுழைவாயிலில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பகல் பல்கலைக்கழக நுழைவாயிலில் பிறந்த நாள் நிகழ்வொன்றிற்காக ஒன்றுகூடியிருந்தனர்.

இதன்போது அங்கு நின்ற பொலிஸார் 'இங்கு குழுமியிருக்க முடியாது கலைந்து செல்லுமாறு' அதட்டல் தொனியில் கூறினர். எனினும், மாணவர்கள் அதை மறுத்தபோது, பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதன் போது அவ்விடத்துக்கு வந்த இராணுவத்தினர் துப்பாக்கிகளை மாணவர்கள் பக்கம் திருப்பி துப்பாகிகளை லோட் செய்து மிரட்டியுள்ளனர். அத்துடன் பல்கலைக்கழக முன்றலில் குழுமியிருந்த மாணவர்களைப் பார்த்து இங்கு நிற்பவர் கள்விடுதலைப்புலிகள் என்று இராணுவ சிப்பாய் கூறினார். மேலும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சபைக்கு ஒவ்வாத வார்த்தைகளால் பேசியுள்ளார். இதனால் மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. இதனால் பேருந்துகளில் பொலிஸார் வரவழைக்கப்பட்டு பல்கலைக்கழக சூழலில் குவிக்கப்பட்டனர். பொலிஸார் பல்கலைக்கழக முன்றலில் இருந்து விலக வேண்டும் என மாணவர்கள் கூறினர். நீண்டநேரமாக பேசுக்கள் இடம்பெற்ற போதும் பதற்ற நிலை தணியவில்லை. பல மணி நேரத்தின் பின்னர் பொலிஸாரும் அவ்விடத்தில் இருந்து விலகுவதாக இணக்கம் தெரிவித்தனர். இதனையடுத்து பதற்றநிலை தணிந்தது. எனினும் பல்கலைக்கழக சூழலில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. (ஓ.5.26)

வேலை ஆட்கள் தேவை
எமது ஸ்தாபனத்துக்கு பின்வரும் பணிநிலைகளுக்கு வேலை ஆட்கள் தேவை.
காசாளர்
கணினி அறிவுடையவர்.வயதெல்லை 18-30. பெண்
பொதியிடுவர்
Packing வயதெல்லை 30-50. பெண்
* நேரில் சமூகம்தரவும்.
NORTHWAY FAMILLY MART 021 222 6002 021 493 0160
NO.184, PALALY ROAD, THIRUNELVELY.

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
1. மேசன்- 1500 - 1700 ரூபா
2. அலுமினியம் பிற்றிங்- 1300-1600 ரூபா
3. தச்சு வேலை- 1300- 1600 ரூபா
4. லேபர் - 1200 -1300 ரூபா
(வேலை தொடங்கும் நேரம் 8.00 am-5.45 pm)
தேவைப்படின் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
074 002 9658 (Dialog)
திங்கள்-சனி வரை 8.30 am-5.00 pm வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

வேலையாள்கள் தேவை
கோண்டாவிலில் இயங்கிவரும் நிறுவனத்திற்கு விற்பனை முகவர் (Sales Rep) தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
077 077 8102, 070 336 5655

## வவுனியாவுக்கு வந்த விழிப்புணர்வுப் பயணம்

வவுனியா, செப். 26

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி காலியிலிருந்து யாழ். நோக்கிய விழிப்புணர்வு துவிச்சக்கர வண்டிப்பயணம்நேற்று வவுனியாவை வந்தடைந்தது.

காலியை சேர்ந்த பர்நாந்து (வயது 73) என்பவரே விழிப்புணர்வுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளார். வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்த அவரை சமூகசேவைகள் அலுவலர் சிறீநிவாசன் தலைமையில், முதியோர் சங்க பிரதிநிதிகள் வரவேற்றிருந்தனர். மாவட்ட அரசஅதிபர் சமனபந்துலசேனவுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

தனது உணவுப்பழக்க வழக்கம் மற்றும் போதைப் பாவனையற்ற வாழ்க்கை முறையால் தான் ஆரோக்கியமான உடல்நிலையை கொண்டிருக்கின்றேன் என்றும் இதனாலேயே நீண்ட தூரம் துவிச்சக்கரவண்டிப்பயணத்தை மேற்கொள்ள முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். ஆரோக்கியமான நல்ல பழக்கவளக்கங்களை கொண்டிருந்தால் 70 வயதிலும் மகிழ்ச்சியாக வாழமுடியும் என்று கூறும் அவர், தனது வாழ்க்கையின் அனுபவங்களை அனைவருக்கும் தெரிவிக்கும் நோக்குடன் குறித்த பயணத்தை மேற்கொண்டுள்ளேன் என்றும் தெரிவித்தார். (த-110)

4SIGHT OPTICALS
உங்கள் பார்வையின் ஓர் புதிய பயணம்
08B, 1ஆம் மாடி கார்கில்ஸ் சதுக்கம், யாழ்ப்பாணம்
021 222 3038 / 077 700 2411

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 02 ஆம் நாள் (18.09.2020) அதிகாலை வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

**அமரர் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் குமாரசாமி சர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

- 26.09.2020 — சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு தசாகம்
- 27.09.2020 — ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு ஏகோதிஷ்டம் மாசியம்
- 28.09.2020 — திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு சபிண்டீகரணம்
- 29.09.2020 — செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிரஹயக்ஞம்

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் (மதியபோசனம்), குடும்பசமேதராகக் கலந்து சபையை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்)

முகவரி: 15A, 01/01, ஸ்ரீபால வீதி, கல்கிசை.

குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
Best Wishes
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உப செயலாளர்
இரத்தினசபாபதி சுரேஸ் அவர்கள்
(உரிமையாளர் ஸ்ரீராம் சில்க்- சாவகச்சேரி நகர்)
24.09.2020 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதி பாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவா னாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு பாராட்டுவதுடன், சேவைகள் பல மேற்கொண்டு மேலும் பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
Best Wishes
சாவகச்சேரி நகர் வர்த்தக நண்பர்கள்.



## அகில இலங்கை இந்துமாமன்றம் நடத்தும் வேதாகம பாடசாலையின் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

அகில இலங்கை இந்துமாமன்றம், சைவத் திருக்கோயிற் பூசகர் களுக்கான ஒரு வருட வேதாகம கற்கை நெறி யொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இக் கற்கைநெறி **வித்யாபூசணம் விஸ்வநாத நாராயணக் குருக்கள் (நாராயண வாத்தியார்)** அவர்களின் தலைமையில் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 02.00 மணி வரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தப்படும். இக்கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தங்களின் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை **"பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம், 91, 5/1, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02."** என்ற முகவரிக்கு 15-10-2020ந் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் (தங்களின் தொலை பேசி இலக்கத்தையும் தவறாது குறிப்பிடவும்). இக்கற்கை நெறிக்கு எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதையும் கற்கைநெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

வே.கந்தசாமி
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை இந்துமாமன்றம்

தொடர்புகளுக்கு:
011 243 4990

இணையவழி கருத்தரங்கு
ECONOMICS
For 2020 A/L TAMIL MEDIUM
க.பொ.த உயர்தர 2020 பொருளியல் பாடத்திற்கான மாபெரும் நிகழ்நிலை கருத்தரங்கில் பங்கு கொள்வதற்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.
www.myclasses.lk
V. PARAMESHWARAN
B.BA (Hon's) MA (Econ)
எதிர்பார்க்கை MCQ, கட்டுரை வினாக்களுடன் விளக்கங்கள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு
A .Sujeepan : 075 578 3728

உடனடி வேலைவாய்ப்பு
ஆயுள் காப்புறுதி துறையில் இலங்கையின் முதல்தர நிறுவனமானது தனது கிளையை தென்மராட்சி பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்க உள்ளதால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.
✓ விற்பனை ஆலோசகர்கள்
(சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ளவர்கள்)
✓ விற்பனை மேற்பார்வையாளர்கள்
(ஆயுள் காப்புறுதி துறை மற்றும் மேற்பார்வைத் துறையில் அனுபவமுள்ளவர்கள்)
குறிப்பு:-
★வயதெல்லை 25 - 60இற்கு உட்பட்டவர்கள்
★கல்வித்தகைமை க.பொ.த. சாதாரணம் கணிதம் உட்பட 3C சித்திகளுடன் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு பெயர் மற்றும் முகவரியை SMS செய்யவும்.
074 013 7115

## உணவு தவிர்ப்பு.....

நீதிமன்ற தடைக்கட்டளை நேற்றுப் பிறப்பிக்கப்பட்ட பின்னர் உடனடியாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் உடனடியாகக் கூடி கலந்துரையாடல் நடத்தினர். நீதிமன்ற தடையை தொடர்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தனர்.

கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சிறீகாந்தா, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கான உரிமை ஆகியவற்றை வலியுறுத்தி தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் கூடி நாளை (இன்று) காலை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்திருந்தோம். ஆனாலும் இன்று (நேற்று) மதியம் வல்வெட்டித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து தடைக் கட்டளையைப் பெற்றிருக்கின்றார்கள்.

கொரோனா ஆபத்தை சுட்டிக்காட்டி பொலிஸார் வழங்கிய விண்ணப்பத்தை ஏற்று நீதிமன்றம் இந்தக் கட்டளையை வழங்கியிருக்கின்றது. இந்த தடை கட்டளையில் பிரதிவாதிகளாக எவருடைய பெயரும் குறிப்பிடப்படாதபோதும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கே தடைக்கட்டளை வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை உரிய மரியாதையுடன் கவனத்தில் கொள்கிறோம்.

இந்தப் பின்னணியில் திட்டமிட்டபடி போராட்டத்தை எங்கு நடத்துவதென்பது தொடர்பில் ஒரு திட்டவட்டமான தீர்மானத்தை எடுத்துள்ளோம். நீதிமன்ற கட்டளையை மீறாத வகையில் அதற்கான மரியாதைகளுடன் திட்டமிட்டபடி இன்று போராட்டம் நடத்தப்படும். சுகாதார நடைமுறைகள் மிக இறுக்கமாக பின்பற்றப்பட்டு எமது அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்படும். அதேவேளை முன்னர் அறிவித்ததை போல் 28ஆம் திகதி (நாளை மறுதினம் திங்கட் கிழமை) தமிழர் தாயகமான வடகிழக்கு தழுவிய முழுஅடைப்புக்கு (ஹர்த்தாலுக்கு) பொதுமக்களுடைய ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம், என்றார். (ஒ,5,26)

## தியாகம்......

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டம் ஆரம்பமாகி 12 நாள்கள் நீடித்து செப்ரெம்பர் 26ஆம் திகதி திலீபனின் வீரச் சாவுடன் முடிந்தது. ஒரு சொட்டு நீரும் அருந்தாமல் அஹிம்சை வழியில் போராடிய திலீபன் இலங்கை மற்றும் இந்திய அரசுகளால் சாகடிக்கப்பட்டான். அவன் வீரச் சாவை அணைத்து 33ஆண்டுகள் இன்றுடன் பூர்த்தியாகின்றன. (ஒ,5)

## தமிழர்களைச்......

வீண்விளைவுகளை ராஜபக்ச அரசு சந்திக்க வேண்டி வரும். இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இன்று நடைபெறவிருந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு நீதிமன்றம் ஊடாகத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் 'உதயன் பத்திரிகை' தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸாரைக் கொண்டு நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலைத் தடுத்த ராஜபக்ச அரசு, தற்போது நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்னெடுக்கத்தீர்மானித்துள்ள அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கும் தடையுத்தரவைப் பெற்றுள்ளது. தமிழர்களின் அடிப்படை உரிமைகளை நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாகத் தட்டிப் பறிக்கும் ராஜபக்ச அரசின் மோசமான செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எத்தனை தடைகளை இலங்கை அரசு போட்டாலும் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்து தமது உறவுகளைத் தமிழர்கள் நினைவுகூர்ந்த வரலாறையும், அறவழியில் உரிமைக்காகப் போராடிய காலத்தையும் இந்த அரசு மறக்கக்கூடாது.

பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதைத் தமிழர்கள் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசுக்குப் புரியவைத்துள்ளார்கள். எனவே, தமிழர்களின் அடிப்படை உரிமைகளில் கைவைப்பதை ராஜபக்ச அரசு உடன் நிறுத்த வேண்டும், என்றார். (ஒ,5,22)

## இந்திய.....

வதால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான காணொலி மூலமான இன்றைய கலந்துரையாடலின் போது நேரடியாக முன்வைக்கவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்த வட மாகாண மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடலின் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட்19 தொற்று இந்தியாவில் அதிகரித்துள்ள நிலையில் இந்திய இழுவை படகுகளை கைது செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால், இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய இழுவை படகுகளின் வருகையும், அத்துமீறிய சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளதாக மேற்படி சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலைமை காரணமாக மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும், தமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் நெருக்கடி நிலைகளை எதிர்நோக்கி உள்ளதாகவும் வட மாகாண மீனவ சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தவர்கள் பிரதமருக்கு எடுத்துரைத்தனர்.

சட்டவிரோதமாக இலங்கையின் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அத்துமீறி சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களை கைது செய்யும் வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறு பிரதமர் இலங்கை கடற்படையினருக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை, கிளிநொச்சி இரணைமடு குளத்தை அண்மித்த பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் இதன்போது பிரதமர் பொலிஸாருக்கு அறிவித்தார். (ஒ,இ)

## மறைந்தது......

அவருக்கு வயது 74.

தமிழ், தெலுங்கு, கன்னடம் என்று அனைத்து மொழிகளிலும் முன்னணிப் பாடகராக வலம் வந்தவர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி எஸ்.பி.பிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தனக்கு இலேசான கொரோனா தொற்றுதான் என்று தனது அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வீடியோ ஒன்றை எஸ்.பி.பி வெளியிட்டார்.

அதற்குப் பிறகு சிகிச்சைக்கு ஒத்துழைத்து வந்த அவருடைய உடல்நிலை ஓகஸ்ட் 14ஆம் திகதி மோசமடைந்தது. எஸ்.பி.பிக்குத் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அவருடைய உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்கு வந்தது. வாய் வழியே சாப்பிடும் அளவுக்கு அவருடைய உடல்நிலை தேறியது.

இதனிடையே திடீரென்று நேற்றுமுன்தினம் அவருடைய உடல்நிலை மீண்டும் மோசமடைந்தது. அவருக்கு ஏற்கனவே இருந்த நுரையீரல் தொற்று திடீரென்று அதிகரிக்க உடல்நிலை மேலும் மோசமடைந்தது. மூளையிலும் குருதிக்கசிவு ஏற்பட்டது. அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் அவருடைய உயிர் நேற்று மதியம் சுமார் 1 மணிக்குப் பிரிந்தது.

எஸ்.பி.பியின் மறைவு இந்தியத் திரையுலகினரைக் கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பலரும் அவருடைய மறைவுச் செய்தி வெளியானவுடன் கண்ணீர் மல்க தங்களுடைய இரங்கலைத் தெரிவித்து வருகிறார்கள். (ஒ,ம,இ)

## நினைவேந்தலையும்......

தமது உரிமைகளை வலியுறுத்தி அறவழியில் போராட இந்த நாட்டின் சட்டத்தில் இடம் உண்டு. அதையும் எவரும் தடுக்கவே முடியாது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

ராஜபக்ச அரசு கொடூர அரசு என்பது உலகறிந்த உண்மை. இந்த அரசின் அடாவடிகள் நாளுக்குநாள் அதிகரிக்கின்றன. அதிலும் தமிழர்களை இந்த அரசு மேலும் வதைக்கின்றது.

தமிழ் மக்களின் ஆணையுடன் நாடாளுமன்றத்துக்கு வந்துள்ள தமிழ்த் தலைவர்கள் தங்கள் இனத்தின் உரிமை சார்ந்த விடயங்களை நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாடாளுமன்றத்திலும் எமது கண்டனங்களை நேரில் தெரிவித்துள்ளோம்.

ஆயுதப் போரில், அறவழிப் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரவும், அந்த உரிமை மறுக்கப்படுகின்றபோது அதற்கு எதிராக அறவழியில் போராடவும் தமிழர்களுக்கு உரிமையுண்டு. அதை இராணுவத்தைக்கொண்டு அல்லது பொலிஸாரைக் கொண்டு அல்லது நீதிமன்றத்தைக் கொண்டு தடுத்து நிறுத்தும் ஈனத்தனமான செயலை இந்த அரசு உடன் கைவிட வேண்டும், என்றார்கள். (ஒ,5,22)

## வெடுக்குநாறியில்......

இலிங்கேஸ்வரரின் வருடாந்த பொங்கல் விழா நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது நாள்கள் இடம்பெற்றன. இன்று 26ஆம் திகதியுடன் நிறைவுபெறவுள்ளது.

இறுதி நாளான இன்று விசேடமாக 108 பானைகள் வைத்து பொங்குவதற்கான ஏற்பாடுகள் ஆலய பரிபாலனசபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காலை11 மணிக்கு ஆரம்பமாகும் பொங்கல் நிகழ்வுகளில் அனைத்து மக்களும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி ஆலயத்தில் வழிபாடுகள் முன்னெடுக்க தொல்பொருள் திணைக்களம், பொலிஸார் எனப் பல தரப்புக்களும் முட்டுக்கட்டைமேல் முட்டுக்கட்டைகளைப் போட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,110)

## உணவு தவிர்ப்பு.......

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இன்று முன்னெடுக்கத் திட்டமிட்ட அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கும், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவு விதித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை மல்லாகம் நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படலாம் என்ற அச்சத்தில் அங்கும் தடை உத்தரவை பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் முன்னெடுக்கத் திட்டமிட்ட அடையாள உணவு் தவிர்ப்புப் போராட்டத்துக்கு தடை கோரி பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் எந்தவொரு தமிழ் தேசிய சட்டத்தரணியும் முன்னிலையாகவில்லை.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது. எனினும் பொலிஸார் தியாக தீபம் திலீபன் நினைவேந்தலை முன்னிட்டு உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விண்ணப்பம் செய்து தடை உத்தரவைப் பெற்றனர். தமிழ் தேசிய பற்றுள்ள சட்டத்தரணிகள் எவரும் பொலிஸாரின் இந்த வழக்கில் முன்னிலையாகி சமர்ப்பணத்தை முன்வைக்காத நிலையில் நீதிமன்றம் பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு தடை உத்தரவை வழங்கியது.


தடை உத்தரவின் விவரம் வருமாறு:

1987.09.15ஆம் திகதியன்று உணவொறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்து உயிர் நீத்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவரை நினைவுகூரும் விதமாக 2020.9.26ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வச்சந்நிதி கோவிலுக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தவிருப்பது தொடர்பாக நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் கேரத் என்பவருக்கு தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இந் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் நீதிமன்றின் கட்டளையின் பிரகாரம் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 106ஆம் பிரிவின் பிரகாரம் இந் நீதிமன்ற நியாதிக்கத்தின் எல்லைக்குட்பட்ட இடங்களில் மேற்குறிப்பிட்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தவோ, பொதுமக்கள் ஒன்று கூடுவதோ கலந்துகொள்வதோ இன்றிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது, என்றுள்ளது. (ஒ,5,26)

# தியாகிகளுக்கு அஞ்சலிக்கும் உரிமையை மறுப்பது கொடுமையிலும் கொடுமை

## சபையில் விக்னேஸ்வரன் வேதனை



**கொழும்பு, செப்.26**

**எமது மக்களின் உரிமைகளுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான உரிமை மறுக்கப்பட்டிருப்பது கொடுமையிலும் கொடுமையாகும் எனத் தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது மக்களின் உரிமைகளுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான உரிமை மறுக்கப்பட்டிருப்பது கொடுமையிலும் கொடுமையாகும். சென்ற அரசாங்கம் இவ்வாறான அஞ்சலிகளைக் கண்டும் காணாதது போல் இருந்த தால்தான் இம்முறை மத்தியில் இருக்கும் ஒரு தேசியக் கட்சிக்கு மக்களின் வாக்குகள் கிடைத்தன. அடுத்த முறை மத்திய தேசியக் கட்சிகளை மக்கள் வெறுத்தொதுக்குவதற்காகத்தான் இவ்வாறு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றதோ நான் அறியேன். அடுத்த முறை கையூட்டுகள் இரட்டிப்பாகக் கிடைத்தாலும் மக்கள் மத்திய தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள். எமது மக்களின் நியாயமான உரிமைகளை வலியுறுத்தியே தியாகி திலீபன் 30 ஆண்டுகளுக்கு முன்னர் உண்ணாவிரதம் இருந்தார். உண்ணாவிரதம் இருந்து மடிந்த ஒருவரைக் கூட நினைத்து அஞ்சலி செலுத்தக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருக்கின்றது என்றால் ஆயுதமேந்தி மடிந்தவர்களை நினைத்து அஞ்சலி செலுத்தலாம் என்று நினைக்கின்றதா? இரண்டுமே வேண்டாமென்றால் அரசாங்கம் கூறவருவது எதனை? வடக்கு கிழக்கில் திட்டமிட்ட அரச குடியேற்றங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. தமிழ் அரசியற் கைதிகளுக்கு இன்றும் விமோசனம் கிடைக்காதிருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நடைமுறையில் உள்ளது. தமிழர் பிரதேசங்களில் புதிய பொலிஸ் நிலையங்களைத் திறந்து அங்கு தமிழ் பேசாதவர்களைப் பதவியில் இருத்துவது இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. அரசாங்கம் தொடர்ந்தும் எம் மக்களைப் பயங்கரவாதிகளாகவே சித்திரிக்கப் பார்க்கின்றார்கள். ஆனால் நாம் செய்யும் அனைத்துச் செயல்களும் உலக அரசாங்கங்களினாலும் ஐ.நா. சபையாலும் கவனமாக உற்று நோக்கப்பட்டே வருகின்றன என்பதை அரசாங்கம் மறக்கக் கூடாது-என்றார். (ப-22)

# ரணிலுக்கு இன்றும் 200 பாதுகாவலர்கள்

## கூறுகிறார் இந்துனில் எம்.பி

கொழும்பு, செப்.26

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது 200 பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: எதிர்க்கட்சித் தலைவராக உள்ள சஜித் பிரேமதாஸவுக்கு 70 பாதுகாவலர்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளனர். அவர்களில் மேலும் சிலரைக் குறைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் நியாயமற்ற செயற்பாடு-என்றார். (ப-இ)

# அரசுக்காக கூலிக்கு மாரடிப்பவரே டக்ளஸ்

## நாடாளுமன்றில் விக்கி சாடல்

கொழும்பு, செப். 26

திலீபன் தொடர்பாக எமது மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துக்களைத் தெரிவிக்காது இருத்தல் நலமென்றே நினைக்கின்றேன். என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், . கூலிக்கு மாரடிப்பவர்களுக்கு எமது மக்களுக்கான உரிமைகள் பற்றியோ, தேவையான அதிகாரங்கள் பற்றியோ என்னதான் விளங்கப்போகின்றது என்றும் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தமிழ் மக்களின் போராட்டமும் வரலாறும் தமிழர்களினாலேயே கொச்சைப்படுத்தப்படும் புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாவிக்கப்படுகின்றார் என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். எதற்காக திலீபன் சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் முறையற்ற விமர்சனங்களில் ஈடுபட்டு வருகின்றார் என்பது எமக்குப் புரியவில்லை. மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பில் பொருத்தம் அற்றதும் விளக்கமற்றதுமான கருத்துக்களைக் கூறுவதையும் அமைச்சர் டக்ளஸ் அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கூலிக்கு மாரடிப்பவர்களுக்கு எமது மக்களுக்கான உரிமைகள் பற்றியோ, தேவையான அதிகாரங்கள் பற்றியோ என்ன விளங்கப் போகின்றது? கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை-என்றார். (ப-22)

# அலங்கரிக்கப்பட்ட 'கேக்' போன்றதே புதிய அரசு

## எந்தப் பயனும் இல்லை என்கிறார் ஹிருணிக்கா

கொழும்பு, செப்.26

ஊடகங்களால் அலங்கரிக்கப்பட்ட கேக்கைப்போன்று உருவாக்கப்பட்டுள்ளதே இந்தப் புதிய அரசாங்கம். இதனால் நாட்டுக்குப் பயனளிக்கும் வகையில் எந்தத் திட்டமும் கொண்டுவரப்படவில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி ஒவ்வொரு காலத்துக்கும் ஏற்ப ஊடகக் கண்காட்சிகளைக் காண்பித்து வருகின்றார். அதற்கமைய அண்மையில் வீடமைப்பு அதிகார சபைக்குச் சென்றிருந்தார். இவ்வாறு செல்வதால் எந்த மாற்றத்தை அவர் ஏற்படுத்தியுள்ளார். தற்போது 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு முயற்சித்து வருகின்றார். எல்லோரும் எண்ணினார்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் போன்றே செயற்படுவார் என்று. ஆனால் அவர் எதிர்க்கட்சிக்குரிய அனைத்துப் பொறுப்புகளையும் உரிய முறையிலேயே செய்து வருகின்றார் -என்றார். (ப)



டெங்கைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிரமதானப் பணி ஒன்று இடம் பெற்றது. மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலையின் சுகாதார மேம்பாட்டுக் குழுவினரால் இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. (ப-159)

## இலங்கையிலிருந்த

# 174 இந்தியர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, செப்.26

இலங்கையிலிருந்த 174 இந்தியப் பிரஜைகள் விசேட விமானம் மூலம் நேற்று முன்தினம் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

இலங்கையில் சிக்கியிருந்த 174 இந்தியப் பிரஜைகள் விசேட ஏர் இந்தியா விமானம் மூலமாக கொழும்பிலிருந்து மும்பை மற்றும் டில்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கொவிட் 19 காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் உலகளவில் சிக்கியிருக்கும் இந்தியப் பிரஜைகளை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான, இந்திய அரசின் வந்தே பாரத் மிஷன் திட்டத்தினுடைய ஓர் அங்கமாக இந்த விமானப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொவிட் 19 காரணமாக சர்வதேச பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் நாடு திரும்ப முடியாமல் இலங்கையில் சிக்கியிருந்த இந்தியப் பிரஜைகள், சொந்த நாடு நோக்கிய தமது பயணம் குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர் -என்றுள்ளது. (ப-இ)

# புத்தளத்துக்கு விஜயம் அமைச்சர் நாமல்

புத்தளம், செப்.26

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச புத்தளம் மதுரங்குளி நகரிலுள்ள முன்மாதிரிப் பாடசாலைக்கு நேற்றுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கடந்த சனிக்கிழமை மதுரங்குளிப் பகுதிக்கு கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது, குறித்த பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை சீரமைத்துத்தருமாறு மாணவர்கள் அவரிடம் கோரிக்கை விடுத்தனர். மாணவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை உடனடியாகச் சீரமைத்துக் கொடுக்குமாறு, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவைப் பணித்தார். இதற்கமைய விளையாட்டு மைதானத்தின் சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தப் பணிகளைப் பார்வையிடவே நாமல் ராஜபக்ச அங்கு சென்றார். (ப-இ)

# டோனி விஸ்வரூபம் எடுப்பார் ஸ்டீபன் பிளமிங் நம்பிக்கை




புதுடில்லி, செப்.26

ஐ.பி.எல் தொடர் செல்லச் செல்ல எம்.எஸ்.டோனிவிஸ்வரூபம் எடுப்பார் என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஐ.பி.எல் 2020 சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் இரண்டு போட்டிகளில் விளையாடியுள்ளது. முதல் போட்டியில் வெற்றி பெற்று, 2 ஆவது போட்டியில் தோல்வியடைந்தது. இரண்டு போட்டிகளிலும் எம்.எஸ்.டோனி பின் கள வரிசையில் தான் களம் இறங்கினார். அவர் முன்னதாகவே களம் இறங்கவேண்டும் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதற்கு கூடுதலான தனிமைப்படுத்தலும், நீண்ட காலமாக கிரிக்கெட் விளையாடாது இருந்தது தான் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையிலேயேஐ.பி.எல்தொடர்செல்லசெல்ல டோனி விஸ்வரூபம் எடுப்பார் என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்டீவன் பிளமிங் தெரிவித்துள்ளார். (ற)

## இன்றைய ஆட்டம்

யாழப்பாணம், செப்.26

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் "யாழின்நாயகன்" கால்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பைவ்ஸ்ரார் அணியை எதிர்த்து, விளான் சென் அன்ரனிஸ் அணியும், 4.30 மணிக்கு திருமகள் அணியை எதிர்த்து அராலி ஐக்கியம் அணியும் மோதவுள்ளன. (ற-422)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 உத்தரட்டாதி, உயரம் 5'5", தனியார்துறையில் தொழில், உயர்பதவி, கணினி பொறியியலாளர், கொழும்பு இவருக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். எதிர்பார்ப்பு - பட்டதாரி, கணக்காளர் (யாழ்)

011 701 1414, 077 412 2710

## தடகள தொடரின் இறுதிநாள் நிகழ்வு நாளை

கரவெட்டி, செப்.26

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரின் இறுதிநாள் நிகழ்வு நாளை இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பா.முகுந்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி திணைக்களத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. இராஜசீலன், கௌரவ விருந்தினராக இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் இ.சிவ சங்கர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-422)

## ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் திடீர் மரணம்

புதுடில்லி, செப்.26

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும் பிரபல கிரிக்கெட் வர்ணனையாளருமான டீன் ஜோன்ஸ் (வயது59) உயிரிழந்துள்ளார். திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக டீன் ஜோன்ஸ் மும்பையில் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தூதரகம் ஆஸ்திரேலிய அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளின் வர்ணனை கடமைகளை நிறைவேற்ற இந்தியாவில் தங்கியிருந்த ஜோன்ஸ் திடீரென மாரடைப்பால் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

டீன் ஜோன்ஸ் ஒருநாள் போட்டிகளில் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவராக இருந்துள்ளதுடன், ஆஸ்திரேலிய அணிக்காக 164 ஒருநாள் போட்டிகளில் விளையாடி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது மரணம் கிரிக்கெட் உலகத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ற)



Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை

மலை :33 வள்ளுவர் ஆண்டு : 2051 புரட்டாதி 10 சனிக்கிழமை (26.09.2020) சிகரம் : 15



## திலீபனின் கனவு

05

## திலீபனுக்குள் ஒரு பார்த்தீபம்

04

## திலீபனின் நாளில் சிந்திக்க வேண்டியவை

02

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# திலீபனின் நாளில் சிந்திக்க வேண்டியவை



○ நிலாந்தன்

நினைவுகூருதல் ஒரு சட்டப் பிரச்சினை அல்ல. அது ஒரு அரசியல் விவகாரம். அது ஒரு பண்பாட்டு உரிமை. எனவே கூட்டுரிமை. ஒரு கூட்டு உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம் அரசியல் போராட்டம் தான். அதை அரசியல் ரீதியாகத்தான் போராட வேண்டும். அதை ஒரு சட்டப் பிரச்சினையாக குறுக்கக் கூடாது. ஆனால் தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் பலர் சட்டவாளர்களாக இருப்பதால் அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்கி விட்டார்களா ? அல்லது அதையோர் அரசியல் போராட்டமாக முன்னெடுப்பதற்கு தேவையான அறவழிப் போராட்ட ஒழுக்கம் அல்லது அகிம்சா தரிசனம் அவர்களிடம் இல்லையா?

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு மூத்த அரசியல் ஆய்வாளரைச் சந்தித்தார். அப்பொழுது அரசியல் ஆய்வாளர் சொல்லியிருக்கிறார் "நீங்கள் நாடாளுமன்றத்தில் எவ்வளவு வீரமாக உரையாற்றினாலும் ஒன்றும் நடக்கப் போவதில்லை. அதற்கும் அப்பால் நீங்கள் போராட வேண்டியிருக்கிறது" என்று. அப்போது அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பின்வரும் தொனிப்படச் சொல்லியிருக்கிறார் "நாங்கள் சட்டப்படிதான் போராடலாம். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தை மீறிச் செயற்பட முடியாது" என்று. இந்தப் பதிலால் ஆத்திரமடைந்த அந்த மூத்த ஆய்வாளர் பின்வரும் தொனிப்பட கூறியிருக்கிறார் "சட்டப்படிதான் போராடலாம் என்றால் இந்த பூமியில் எந்த ஒரு போராட்டமும் நடந்திருக்காது. எல்லாப் போராட்டங்களுமே சட்டமறுப்புத்தான். இந்தியாவில் நடந்த காந்தியின் அகிம்சைப் போராட்டங்கள் எல்லாமே சட்டமறுப்புத்தான்" என்று. அதன் பின் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட ஆய்வாளரைச் சந்திக்கச் செல்வது இல்லையாம்.

இதுதான் பிரதான பிரச்சினை. தமிழ் அரசியல்வாதிகளிடமும் கட்சித் தலைவர்களிடமும் ஓர் அறவழிப் போராட்டத்துக்கான பொருத்தமான தரிசனங்கள் கிடையாது. அதற்கு வேண்டிய வாழ்க்கை ஒழுக்கமும் கிடையாது. இப்போது இருக்கும் கட்சித் தலைவர்கள் யாருமே சட்டமறுப்பு போராட்டங்களை, சிறை நிரப்பும் போராட்டங்களை முன்னெடுக்கத் திராணி அற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். அவ்வாறான ஒரு வெற்றிடத்தில்தான் நினைவுகூருதலை ஒரு சட்டப் பிரச்சினையாக அவர்கள் குறுக்கப் பார்க்கிறார்கள். அல்லது அப்படியான ஒரு வெற்றிடத்தில்தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் கடந்த 1300 நாட்களுக்கும் மேலாக இழுபட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களுக்கு இப்பொழுது தேவையாக இருப்பது ஒரு புதிய அறவழிப் போராட்டம்தான். நிச்சயமாக அது காந்தியின் காலத்தில் இருந்தது போல இருக்க முடியாது. காந்தியின் காலம் வேறு ; சிறீ ராமுலுவின் காலம் வேறு ; திலீபனின் காலம் வேறு ; அன்னை பூபதியின் காலம் வேறு, மண்டேலாவின் காலம் வேறு.

எனவே 'செல்பி' யுகத்தின் நிலைமைகளுக்குப் பொருத்தமான ஒரு புதிய அறவழிப் போராட்டப் பாதையை தமிழ் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

காந்தியின் அஹிம்சை குறித்து ஒரு விளக்கம் கூறப்படுவதுண்டு. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகத் தான் அப்படி ஒரு போராட்டம் சாத்தியமாகியது என்று. காந்தி கொல்லப்பட்ட போது அப்போதிருந்த பிரிட்டிஷ் பிரதானி நேருவிடம் பின்வருமாறு கூறியிருக்கிறார் "மகாத்மாவை நாங்கள் பல ஆண்டுகளாகப் பாதுகாத்தோம். ஆனால் உங்களால் சில ஆண்டுகள் கூட பாதுகாக்க முடியவில்லையே?" என்று. இக் கூற்றினை வேறுவிதமாக வியாக்கியானம் செய்பவர்கள் உண்டு. அதாவது பிரித்தானியாவின் ஜனநாயகம் காந்தியை பாதுகாத்தது. அது காந்தியைப் போன்ற ஒரு அறவழிப் போராட்ட தலைவரை வளர்த்தெடுக்க விரும்பியது. மாறாக ஓர் ஆயுதப் போராளியாகிய நேதாஜியை வளர்த்தெடுக்க விரும்பவில்லை. எனவே மேற்கத்திய ஜனநாயகம் காந்தியை விரும்பித் தெரிந்தெடுத்துப் பாதுகாத்தது என்று. எதுவாயினும் காந்தியின் அகிம்சை பிரிட்டிஷாரைப் பணிய வைத்தது. ஆனால் திலீபனின் அகிம்சை காந்தி தேசத்தைப் பணிய வைக்கவில்லை. திலீபன் உண்ணாவிரதம் இருக்க முடிவெடுத்த பொழுது அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு அதைச் சுட்டிக் காட்டினார்.

"திலீபனின் உண்ணாவிரதத்துக்கு இந்தியாவும் இலங்கையும் இறங்கிவரும் வாய்ப்புக்கள் குறைவு. திலீபனைப் பின்பற்றி மகா சங்கத்தைச் சேர்ந்த பிக்குகள் ஆயிரக்கணக்கில் உண்ணாவிரதத்தில் இறங்குவார்கள். அப்படி அவர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினால் அதை இலங்கையாலும் தாங்க முடியாது ,இந்தியாவாலும் தாங்க முடியாது. எனவே திலீபனைப் போல வேறு யாரும் போராடக் கூடாது என்றால் அவரைச் சாகவிடும் முடிவையே இரண்டு நாடுகளும் எடுக்கும்"என்று. அதாவது திலீபனின் காலமும் காந்தியின் காலமும் ஒன்றல்ல.பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்திய ,இலங்கை அரசாங்கங்களும் ஒன்றல்ல. காந்திக்குப் பின் அவருடைய அறவழிப் போராட்டத்தை வேறு வடிவங்களில் முன்னெடுத்தவர்கள் என்று சிலரைச் சுட்டிக்காட்டுவது உண்டு. கெடுபிடிப் போர் காலத்தில் போலந்தில் கம்யூனிசத்துக்கு எதிராக போராடிய தொழிற்சங்கவாதி லெட் வலேசா ,பர்மாவில் இராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிராக வீட்டுக் காவலில் இருந்தபடி போராடிய ஆங்சாங் சூகி,தென்னாபிரிக்காவில் சிறையில் இருந்தபடி போராட்டத்தை வழி நடத்திய மண்டேலா ஆகிய மூவரையும் அவ்வாறு காந்தியத்தின் அடுத்தடுத்த தசாப்த கால வளர்ச்சிகளாக சுட்டிக்காட்டுவது உண்டு. லெட் வலேசாசா கம்யூனிசத்துக்கு எதிராகப் போராடியதால் முதலாளித்துவ ஊடகங்கள் அவருக்கு முக்கியத்துவம் கொடுத்தன.அவர் சோவியத் சாம்ராஜ்யத்தில் இருந்து போலந்தை விடுதலை செய்தார். அதனால் மேற்கத்திய அரசுகளும் ஊடகங்களும் அவரைப் போற்றின.

அடுத்தவர் ஆங்சாங் சூகி. அவரும் மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளைதான். கெடுபிடிப் போர் காலகட்டத்தில் வீட்டுக்காவலில் இருந்தபடி சீன சார்பு பர்மிய சர்வாதிகாரிக்கு எதிராகப் போராடினார். எனவே மேற்கத்திய அரசுகளும் ஊடகங்களும் அவரைக் கொண்டாடின. ஆனால் கடந்த நூற்றாண்டில் அவருக்கு இருந்த முக்கியத்துவம் இந்த நூற்றாண்டில் தலைகீழாகி விட்டது. ரோகியங்கா முஸ்லிம்கள் தொடர்பில் அவர் எடுத்த நிலைப்பாடு காரணமாக அவரைச் சுற்றி வரையப்பட்டிருந்த ஒளிவட்டம் மங்கிப் போய் விட்டது. இப்பொழுது ஆங்சாங் சுகியை காந்தியின் 21ஆம் நூற்றாண்டின் வளர்ச்சியாக யாரும் பார்ப்பதில்லை.

மண்டேலாவைப் பொறுத்தவரை அவர் சிறையிலேயே அதிக காலம் இருந்தவர். கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு. அவர் போராடியதால் தென்னாபிரிக்கா விடுதலை பெற்றது என்பதை விடவும் கெடுபிடிப் போரின் முடிவுக் காலகட்டத்தில் உலக ஒழுங்கு மாறிய பொழுது தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்கு விடுதலை கிடைத்தது என்பதே பெருமளவுக்குச் சரி. எனினும் வெற்றி பெற்ற கறுப்பினத்தவர்கள் பழி வாங்கவில்லை. கறுப்பினத்தின் மன்னிப்பை அவர்கள் உலகத்துக்கு கற்பித்தார்கள்.அதற்கு மண்டேலாதான் தலைமை தாங்கினார்.ஆயுதப் போராளியாக சிறைக்குச் சென்ற மண்டேலா சிறையிலிருந்து வெளிவரும் பொழுது அகிம்சை ஒழுக்கத்துக்கு உரியவராக காட்சி தந்தார். அதுவொரு அரசியல் ஆளுமைக் கூர்ப்பே. இப்படிப்பட்டதோர் உலக அனுபவத்தின் பின்னணியில்தான் புதிய அறவழிப் போராட்டப் பாதை ஒன்றை குறித்து தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டி இருக்கிறது.இதில் ஆகப் பிந்திய உதாரணங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் மணிப்பூரில் பதினாறு ஆண்டுகளாக உணவைத் தவிர்த்துப் போராடியிருக்கிறோம் சர்மிளாவுக்கு என்ன நடந்தது? எந்த மக்களுக்காக அவர் போராடினாரோ அந்த மக்களே அவரைத் தேர்தலில் குரூரமாகத் தோற்கடித்தார்கள்.

மேலும் ஒரு ஆகப் பிந்திய உதாரணத்தை இங்கு காட்டலாம்.கடந்த ஆண்டு கொவிட்-19 தாக்கத்துக்கு முன் கொங்கொங்கில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச்சி கொவிட்19 சூழலுக்குள் கொதிப்படங்கிப் போய் விட்டதா? கொவிட்19 ஒரு மக்கள் எழுச்சியை வீரியம் இழக்க செய்திருக்கிறதா?

எனவே ஒரு புதிய அறவழிப் போராட்டப் பாதை குறித்து சிந்திக்கும் எவரும் மேற்கண்ட உதாரணங்களை கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. ஐரிஷ் போராளி பொபி சாண்டைப் போல, ஆந்திராவைப் பிரிக்கக் கோரிப் போராடிய சிறீ ராமுலுவைப் போல ,திலீபனைப் போல,அன்னை பூபதியைப் போல உயிரைத் துறக்கச் சித்தமாக இருந்தால் மட்டும் போதாது. அதற்கும் அப்பால் அந்தத் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் ஓர்மத்தையும் மக்கள்மயப்படுத்த வேண்டும்.

அகிம்சை எனப்படுவது எதிரியை வதைப்பது அல்ல. எதிரிக்கு வலியுண்டாகச் செய்வதும் அல்ல. மாறாக அது ஒரு சுய சித்திரவதை, சுய தியாகம்,தன்னைத்தானே வருத்துவதன் மூலம் எதிரியைப் பணிய வைப்பது.

ரிச்சர்ட் ஆட்டென் போறோ தயாரித்த காந்தி திரைப்படத்தில் காந்தி தென்னாப்பிரிக்காவில் போராட்டத்தை தொடங்கிய பொழுது ஆற்றும் உரையில் அது அற்புதமாக வெளிப்படுகின்றது....."நாங்கள் தாக்க மாட்டோம். ஆனால் அவர்களை ஏற்றுக் கொள்வோம்.எங்களுடைய வேதனையின் மூலம் அவர்களுடைய அநீதியை அவர்களுக்கு உணர்த்துவோம், அது அவர்களைத் துன்புறுத்தும்.நாங்கள் போராட்டத்தைக் கைவிட முடியாது. முடியவே முடியாது. அவர்கள் எனது உடலை சித்திரவதை செய்யலாம். எனது எலும்புகளையும் முறிக்கலாம்.என்னைக் கொல்லக்கூட முடியும்.ஆனால் அதன் மூலம் அவர்கள் எனது இறந்த உடலை அடையலாம். எனது கீழ்ப்படிவை அல்ல"

ஆனால் அவ்வாறு தம்மை வருத்திய திலீபனோ அல்லது அன்னை பூபதியோ அல்லது பொபி சாண்டோ அல்லது சிறீ ராமுலுவோ தமது இலக்குகளை வெற்றிபெற முடியவில்லை. எனினும் தமது மக்களை அவர்கள் கொதிக்கச் செய்தார்கள்; திரளச் செய்தார்கள்.

இவை மட்டுமல்ல இவற்றைவிடக் விட குரூரமான உதாரணத்தைச் இங்கு சுட்டிக் காட்டலாம். தீபெத்தை சீனாவிடமிருந்து விடுவிக்கப் போராடும் இயக்கத்தில் உள்ள சிலர் சிலசமயம் தங்களைத் தாங்களே தீ மூட்டிக் கொள்வதும் உண்டு. இவ்வாறு இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு தங்களைத் தாங்களே நூற்றுக்கணக்கானவர்கள் சாம்பலாக்கிய பிறகும் கூட சீனா அவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை; உலக ஊடகங்களும் அவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை.

எனவே எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்கிறோம் என்பது இங்கு முக்கியம் அல்ல. தியாகத்தை எப்படி மக்கள் மயப்படுத்தப் போகிறோம் ; உலகத்தின் கவனத்தை எப்படி எங்களை நோக்கி ஈர்க்கப் போகிறோம் ; உலக அபிப்பிராயத்தை எப்படி எங்களுக்கு சாதகமாகக் கனிய வைக்கப் போகிறோம் என்பவற்றில் தான் ஒரு அறவழிப் போராட்டத்தின் வெற்றி தங்கியிருக்கிறது.

எனவே 2009 க்கு பின்னரான தமிழ் அரசியலை ஒரு புதிய அறவழிப் போராட்ட பாதையில் செலுத்துவதாக இருந்தால் அதற்கு முதலில் மேற்கண்ட உலக அனுபவங்களில் இருந்து கற்றுக் கொண்ட தலைவர்களும் செயற்பாட்டாளர்களும் அறவழிப் போராட்ட இயக்கங்களும் வேண்டும். இவை எவையும் இல்லாத ஒரு வெற்றிடத்தில் தான் கடந்த 11 ஆண்டுகளாக தமிழ்க் கட்சித் தலைவர்கள் போராட்டம் வெடிக்கும் புரட்சி வெடிக்கும் என்று தமிழ் வாக்காளர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களா ?



**உண்மையென்னவெனில் தமிழர்களிடம் இருந்து தானாகவே அந்நியப்பட்டு நிற்கிறது சிங்களம். நியாயம்,தர்மம் மட்டுமல்ல சட்டமும் அதற்குப் பொருட்டல்ல. இதற்கு ஆயிரம் உதாரணங்களை சுட்டிக்காட்டலாம்.**

# ஏமாற்றப்பட்ட துட்டகைமுனு

○ தயாளன்

தேசிய விடுதலைப் போராட்டத்தை அது ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலைகள், நியாயங்கள் தொடர்ச்சியான ஏமாற்றுகள் எல்லாவற்றையும் மறைக்கும் விதமாக தமிழர்களின் பிரிவினைக் கோரிக்கை என்றும் குறிப்பாக வடக்குத் தமிழர்களின் போராட்டம் எனவும் கபடத்தனமாக கொச்சைப்படுத்தி வருகிறது சிங்களம்.

உண்மையென்னவெனில் தமிழர்களிடம் இருந்து தானாகவே அந்நியப்பட்டு நிற்கிறது சிங்களம். நியாயம்,தர்மம் மட்டுமல்ல சட்டமும் அதற்குப் பொருட்டல்ல. இதற்கு ஆயிரம் உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம். மட்டக்களப்பில் பிக்கு ஒருவர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மூவரை தனது கட்டுப்பாட்டில் சிறை போன்று தடுத்து வைத்தமையையும் அவர்களை தாக்கியுள்



ளார் . இவர் குழப்பம் விளைவிக்க முயலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸார் பிக்குவைச் சாந்தப்படுத்த முயல்கின்றனரேயொழிய சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முயல்வதில்லை.

இதே தவறை ஒரு ஐயரோ,போதகரோ செய்திருந்தால் கடுகதி வேகத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பது மட்டும் நிச்சயம். மேலும் சில உதாரணங்களை சுட்டிக்காட்டலாம்.

தற்போது திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கும் விதத்தில் யாழ்.கிளி.முல்லை, மன்னார், வவுனியா,மட்டு மாவட்டங்களில் தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்ப்ட்டுள்ளன.

1987 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் நாள் பலாலி இராணுவ முகாமில் ஆயுதக் கையளிப்பு நிகழ்ந்தது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் புலிகள் விரும்பாமலே அந்த முடிவுக்குத் தள்ளப்பட்டனர்.புலிகள் சார்பில் யோகரத்தினம் யோகி ஒரு பிஸ்டலை வைக்க (குறியீடாக)இலங்கை அரசின் பாதுகப்புச் செயலர் சேலாவ ஆட்டிக்கல, அதனை எடுத்துக்கு கொண்டார். தொடர்ந்து அவர் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதான அறிவிப்பை இலங்கை ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான ஜே.ஆரின் சார்பில் வெளியிட்டார்.

அந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்தினுள்தான் திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இலங்கை-இந்தியா அரசுகள் சமாதானத்தையும் அரசியற்தீர்வையும் மனப்பூர்வமாக மேற்கொள்ளத் தீர்மானித்திருந்ததால் இந்தக் கோரிக்கைகளை நிச்சயம் சாத்தியமாக்கியிருப்பார்கள்.ஆனால் புலிகளை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அழிப்பது என்ற முடிவுக்கே அவர்கள் வந்திருந்தார்கள்.எனவே புலிகளை சாகடிப்பது என்ற அவர்களின் முன்னைய தீர்மானப்படி காந்தி தேசம் திலீபனைச் சாகவிட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஜே.வி.பி.இயக்கமும் எதிர்த்தது. புலிகளைப் போலல்லாது படையினரின் குடும்ப அங்கத்தவர்களையும் கூடக் கொன்றார்கள். சிங்கள சினிமாத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய சினிமா ஸ் லிமிட்டெட் அதிபர் ஜே.ஜி.குணரட்ணம், பிரபல சீனி வர்த்தகர் சண்முகம் என சில தமிழரைக்கொன்றார்கள். ஒப்பந்தத்தை ஆதரித்தற்காக சந்திரிகாவின் கணவர் விஜேகுமாரணதுங்காவையும் கொன்றார்கள். 1989 நவம்பர் 13 ஆம் நாள் தனது 56 ஆவது வயதில் ஜே.வி.பி தலைவரான ரோஹணவிஜேவீர கொல்லப்பட்டார். இவரை தேசிய வீரர் என அரசு கூறவில்லை. பயங்கரவாதி என்றே குறிப்பிட்டது.

பொது மன்னிப்பு அளிக்கப்பட்ட காலத்தில் உயர்நீத்த திலீபனை நினைவுகூர முடியாது. ஆனால் பயங்கரவாதி என அறிவிக்கப்பட்ட ரோஹண விஜேவீரவை நினைவு கூரத் தடையில்லை .அவரைப் பற்றி சினிமாப்படம் எடுக்கலாம். பாடல்கள் பாடலாம். உரையாற்றலாம். ரோஹண விஜேவீர தங்கியிருந்த இல்லம் அவரை நினைவு கூரும் விதமாக தொழிற்பயிற்சி நிலையமாக விளங்குகிறது. ஆனால் பிரபாகரனின் இல்லத்துக்கு நடந்தது என்ன என்பதை இந்த நாடு மட்டுமல்ல உலகமே அறியும்.

ஜே.வி.யின் எஞ்சிய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க 2001 நவம்பர் 22 அன்று இங்கிலாந்திலிருந்து இலங்கை திரும்பினார். சட்டவிரோதமாக நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றமைக்காகவேனும் அவர் மீது அரசு வழக்குத் தொடரவில்லை.

ஒரு சில நாள்களின் பின் அவர் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றினார்."இந்தியா விமானங்கள் இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறிப் புகுந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டன. அதை இலங்கை விமானப்படையால் தடுக்க முடியவில்லை. அதனாலேயே நாம் விமானப்படை முகாம் மீது (இரத்மலானை)தாக்குதல் நடத்தினோம் "எனப் பெருமையாகக் கூறினார். இது ஒரு ஒப்புதல் வாக்குமூலம்தான். இன்று திலீபனின் நிகழ்வை தடைசெய்ய காரணத்தை தேடி பூதக் கண்ணாடியுடன் திரியும் பாதுகாப்புத் தரப்பு அன்று விமானப்படை மீது தாக்குதல் நடத்தியதாக பகிரங்கமாகக் கூறிய சோமவன்ஸ மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேவேளை பிரதிக் கல்வி அமைச்சராக விளங்கிய விஜயகலா மகேஸ்வரன் ஏதோ சட்டென்று புலிகளைப் பற்றிச் சொல்லிவிட்டார் என்பதற்காக அவரது அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது. இன்னும் அது சம்பந்தமான விசாரணை முடியவில்லை. அனந்திக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும் என்று கூறியவர்கள் இன்று சுமணதேரருக்கு புனர்வாழ்வளிக்க வேண்டுமென மட்டு.எம்.பி.சாணக்கியன் விடுத்த வேண்டுகோள் பற்றி மௌனமாக உள்ளனர். இந்த சுமணதேரர் மீது ஏற்கனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. நீதிமன்ற அவமதிப்புக்காக தண்டனை விதிக்கப்பட்ட ஞானசாரதேரர் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டார். அவர் நீராவியடி பிள்ளை



யார் ஆலய வளாகத்தினுள் தடையை மீறி பிக்குவின் உடலை எரித்தார். இன்று நாடாளுமன்றம் செல்லத் தயாராகி விட்டார். ஆனால் ரகுபதி சர்மா 290 வருட தண்டனை பெற்று சிறையில் வாடுகிறார். சண்டித்தனம் புரித்து. தனிச்சிறையில் அரச அலுவலர்களை அடைத்த சுமணதேரரை சமாதானப்படுத்த முனையும் பொலிஸார் தான், திலீபனை நினைவு கூர தடை விதிக்கின்றனர். அதுமட்டுமல்லாமல், நீதிமன்றத் தீர்ப்பை மீறி பிக்குவின் உடலை எரித்த ஞானசாரதேரருக்கு சிவப்புக் கம்பளம் விரிக்க நாடாளுமன்றமும் தயாராகி வருகிறது.

மிருசுவிலில் ரசித்து ருசித்து சிறுவர்கள் உட்பட அறுவரை கொலை செய்த இராணுவ அதிகாரிக்கு பொதுமன்னிப்பு , ஆனால் இரு தசாப்தங்களுக்கு மேலும் பல தமிழர்கள் குற்றமே செய்யாமல் இன்னும் சிறையில்.

ஆக, சிங்களம் தமிழிலில் இருந்து அந்நியப்பட்டுப் போகின்றது என்பது உண்மைதானே.

இந்நிலையில் யாழ்.மாவட்ட அரசியற் துற்றைப் பொறுப்பாளாராக விளங்கிய ராஜன் (12நாளும் 24 மணி நேரமும் தொடர்ந்து திலீபனுடன் இருந்தவர்) சொன்ன வார்த்தைகள் இப்போதும் பொருத்தமானவை.

"ராஜீவ் காந்தி, மகாத்மாகாந்தி போல நடந்திருந்தால் திலீபன் காப்பாற்றப்பட்டிருப்பான். ஜே.ஆர். உண்மையான பௌத்தராக நடந்திருந்தாலும் திலீபன் காப்பாற்றப்பட்டிருப்பான்."

தற்போதைய ஜனாதிபதி , துட்டகைமுனு மன்னன் பிறந்த நாளில் தான் தனது பதவியேற்பு நிகழ்வை நடத்தினார். மன்னன் துட்ட கைமுனுவின் வழியைப் பின்பற்றுவராகில், எல்லாளனுக்கு எப்படி துட்டகைமுனு இறந்தபின் அவனுக்கு மரியாதை வழங்கினானோ, அதேபோன்று கோத்தாபயவும் திலீபனின் நினைவேந்தலை நடத்த அனுமதித்திருக்க வேண்டும். கடைசியில் புத்தரையும் பேய்க் காட்டி, துட்டகைமுனுவுக்கும் அல்வா கொடுத்து விட்டார்கள் ஆட்சியாளர்கள்.



# திலீபனுக்குள் ஒரு பார்த்தீபம்

**எவராலும் நினைத்தே பார்க்க முடியாத, ஒரு துளி நீர் கூட அருந்தாது தம்மை வருத்தி, அகிம்சைப் போரை முன்னெடுத்து ஆகுதியான திலீபனை எல்லோருக்கும் ஒரு போராளியாகவே தெரியும். ஆனால் திலீபனுடன் நெருங்கிப் பழகிய மூத்த ஊடகவியலாளர் ஒருவர், அதே திலீபனுக்குள் ஒளிந்திருந்த பார்த்தீபன் என்ற சிறுவனை வெளிக்கொணர்கின்றார்.**

○ அனஜித்

அது அறிமுகமற்ற ஒருவருடனான புதியதும், முதலாவதுமான சந்திப்பாக இருக்கவில்லை என்பது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. வீணான கதைகளோ, விமர்சனங்களோ, எதுவுமன்றி ஒரு அதீத தேடல் உணர்வுடன் பல விடயங்களையும் அறிந்துகொள்ள விரையும் ஆர்வம் அவனிடம் இருந்தது.

பல விடயங்கள் பற்றியும் பேசினான்.

"அண்ணா உங்களைச் சந்தித்தது சந்தோஷம்... அடிக்கடி வந்து தொந்தரவு செய்வேன்" என்று சிரித்தபடியே கூறியவன். "தேவையில்லாமல் வந்து கரைச்சல் தரமாட்டேன்" என்றான். மேசையில் கிடந்த புத்தகக் குவியலைப் பார்த்துவிட்டு "புத்தகங்களைப் பார்க்கலாமா?"என்றான். நான் தலையாட்டினேன். அவன் புத்தங்களுடன் உறவாட ஆரம்பித்து விட்டான்.

புறப்படும் போது கேட்டான் "அண்ணா உங்களிடம் ராணி கொமிக்ஸ் இல்லையா?"என்று.

அந்தக் கணத்தில் தீலிபனுள் மறைந்திருந்த "பார்த்தீபன்"என்ற சிறுவனை நான் இனம் கண்டு கொண்டேன்.

★★★★

அதன்பிறகு எத்தனை சந்திப்புக்கள் ,எவ்வளவு உடையாடல்கள், எத்தனை பிரச்சினைகள்.

திலீபனுக்கும் எனக்குமான உணர்வுபூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் மரியாதையுடன் கூடிய முதல் அறிமுகம், உரிமையுடன் கூடிய ஒரு உறவாக இறுதிவரை தொடர்ந்தது. பல தடவைகள் திலீபனாகவும் சில தடவைகள் பார்த்தீபனாகவும் அவன் எனக்குத் தன்னை அடையாளப்படுத்தியே வந்துள்ளான்.

'ராணி' கொமிக்ஸ் படிப்பதில் பெருவிருப்புடன் இருந்தவன் பார்த்தீபன். ஆனால் திலீபன் அதற்கு நேர்மாறான இன்னொரு வடிவமாக இருந்தான். போராட்டம் அரசியல், விடுதலை, சுதந்திரம் என்ற விடயங்கள் குறித்த அனைத்து நூல்களையும் துழாவுவான். அதற்குள் ஊடுருவுவான். அவை தொடர்பான அவன் கேட்கும் கேள்விகள் அவனது சுய தேடலை இனங்காட்டின. இது அவனுக்கும் எனக்குமான ஒரு உரையாடல்.. "திலீபன்... நீ ராணி கொமிக்ஸையும் விழுந்து விழுந்து படிக்கிறாய், சேகுவேராவையும் படிக்கிறாய்.. இது பெரிய முரணாக இருக்கவில்லையா?" "ஏன் அண்ணா.... ராணி கொமிக்ஸ் சிறுவர் புத்தகம் என்று பார்க்கிறீர்களா? அதைப் படிக்கேக்கை மனம் உற்சாகமாகிறது. சோம்பல் பறந்து போகிறது. ஏதாவது புத்திசாலித்தனமாகச் சாதிக்கத் தோன்றுகிறது. மற்றவை ஆழமாக சிந்திக்க வைக்கின்றன."

★★★★

திலீபத் தீபம் சுடர்விடத் தொடங்கி மூன்று தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது. அது அணையாத, எவராலும் என்றைக்குமே அணைக்க முடியாத, எவராலும் அருகே அணுகவும் முடியாத தமிழினத்தின் ஆத்ம தீபம் என்பதை அறிவிலிகளும் உணர்விலிகளும் உணரார்.

அது தன்னைத் தானே சுயம்புவாக, எரியூட்டி ஒளிரச் செய்துகொண்ட தீபம். அது தமிழினத்தின் அடிமை இருள் விலகும்வரை, சுதந்திர ஒளி பரவும் வரை ஒளிர்ந்துகொண்டே இருக்கும். அதனை அதிகார வெறித்தனத்தால் மறைக்க முற்படுவது சூரியஒளியை கைகளால் மறைக்க நினைக்கும் செயற்பாடாகவே அமையும்.

'திலீபன்', சகாப்தத்தில் அதிகார வெறிகொண்டு பதவிக் கதிரைகளில் அமர்ந்தபடி, ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்து கொண்டிருந்த உள்நாட்டவரும் சரி, அயலகத்தவர்களும் சரி முகவரி இழந்தவர்களாக மறக்கப்பட்டு தேடுவாரற்றும் போய் விட்ட நிலையில் திலீப தீபம் மட்டும் திக்கெட்டும் ஒளிர்கின்றதே...!

சட்டத்தாலும், அதிகார ஆணைகளாலும், திலீபன் நினைவுகளுடன் தீபமேற்றி அஞ்சலிப்போரை மட்டுமே மிரட்டவும் தடுக்கவும் முடியலாம். ஆனால் தன்னைத்தானே விடுதலைக்கான வழி காட்டும் தீபமாக ஒளிவிட்டுக்கொண்டு , அணையா விளக்காக சுடரும் 'பார்த்தீபம்'வல்லாதிக்க மேலாதிக்க சக்திகளுக்கு ஒரு போதுமே கட்டுப்படாது.

ஒவ்வொரு மனிதநேயனும், சுதந்திரப்பிரியரும் ,விடுதலைப் பயணியும் தமிழ் உணர்வாளனும் கண்களை மூடினால் அவனுள்ளே திலீபச் சுடர் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

ஒரு சில அதிகார சக்திகளால் ஒரு தனிமனிதனின் ஆன்ம பலத்தை அடக்கி விடமுடியவே முடியாது. அது 'பாரொடு விண்ணாக'பரந்த சோதிப்பிழம்பைப் போன்றது.

அது தமிழினத்துக்கு காலம் கையளித்த அணையா ஒளி விளக்கு.....

அந்த மகத்தான சக்தியை - திலீப தீபத்தை நினைக்கும் போதெல்லாம் அவன் குறித்த 'பார்த்தீப' பதிவுகள் மனதில் எழவே செய்கின்றன.

அந்த மகா ஆத்மாவுள் மறைந்திருந்த. மனித ஆத்மா பதிந்து விட்டுச் சென்ற எவ்வளவோ செய்திகள் மேலெழும்போது, திலீபனை நினைவில் வைத்துவிட்டு பார்த்தீபனை மறந்துவிட்டீர்களா என்று அவன் கேட்பது போலிருக்கிறது.

அவனோடு பார்த்து ,பேசி ,பணியாற்றி ,பழகிய நாள்கள் வெறுமனே மூன்றாண்டு காலப்பகுதிக்குள்ளே அடங்கும். அந்தக் காலப்பகுதியானது எவ்வளவு வேகமாகவும், இலக்கு நோக்கியும் , அதே சமயம் அர்த்தமுள்ளதாகவும், மறக்கவே முடியாததாகவும் அமைந்திருந்தது என்பதை இப்போது நினைக்கப் பிரமிப்பாக இருக்கிறது.

★★★★

*1985 களின் நடுப்பகுதி .*

ஒருநாள் எனக்குத் தெரிந்த ஒரு இளைஞர் , ஒழுங்காகச் சீவி விடப்படாத அடர்ந்த தலைமுடி, அகன்ற 'பிரேமுடன்'கண்ணாடி அணிந்த, முகம், மெலிந்து உயர்ந்த தோற்றம், தொளதொளப்பாக அரைக்கை வரையும் மடித்திருந்த சட்டை, எதனையோ தீவிரமாகத் தேடும் கண்கள் போன்ற அம்சங்களுடன் தோன்றிய இன்னொரு இளைஞனை அழைந்து வந்து "அண்ணா இவர்தான் நான் சொன்ன திலீபன்"என எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு, " அண்ணாவுடன் கதைச்சுக்கொண்டிருங்கள் அரை மணித்தியாலயத்தில் வந்து விடுகிறேன்"என்று விட்டுவிட்டுப் போய்விட்டார்.

எனக்கு அருகில் வந்த அந்த இளைஞர் "ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்...நாங்கள் குழப்பிவிட்டோமா தெரியவில்லை. மன்னிக்கவும்"என்றார்.

".... இல்லை .... நீங்கள் செல்லுங்கோ தம்பி"என்றேன்.

அவர் உடனே...."நான் திலீபன்.,"என்றே தன்னை அறிமுகப்படுத்திவிட்டு, என் மூலமான தங்கள் தேவைகளையும் விபரித்தான். நான் மௌனமாக அவன் செல்வதைக் கேட்டுவிட்டு " திலீபன் என்பது தான் உங்கள் சொந்தப் பெயரா?"என்றேன்.

"இல்லை அண்ணா, எனது சொந்தப் பெயர் பார்த்தீபன்..ஏன் திலீபன் நல்ல பெயரில்லையா?" என்றான் சிரித்தபடி. "இல்லை எனக்கு பிடித்த பெயர்..குமுதத்தில் வெளி வந்த ஜாவர் சீத்தா ராமனின் தொடர்கதையான 'உடல் பொருள் ஆனந்தி ' என்ற கதையின் நாயகன் பெயர் திலீபன். அதைவிடவும் நம் நாட்டுக் கவிஞர் சில்லையூர் செல்வராசன் எழுத்தாளர்-மல்லிகை டொம்னிக் ஜீவா ஆகியோரின் பிள்ளைகளுக்கும் பெயர் திலீபன் தான்.."என்றேன்.

அவன் சிரித்துக்கொண்டே "எல்லாத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களே...!" என்றவன் தொடர்ந்து பல விடயங்களைப் பற்றி பேசினான். தர்க்கித்தான். விளக்கம் கேட்டான். அவை குறித்த தனது எண்ணங்களையும் பரிமாறினான்.

"கொமிக்ஸ் உடலைப் பலப்படுத்துகிறது. பெரிய புத்தகங்கள் அறிவை பலப்படுத்துகின்றன என்று தான் நான் நினைக்கிறேன்..." என்று தன் விளக்கத்தையும் சொன்னான் திலீபன்.

எப்படி ஒருவனால் பார்த்தீபனாகவும் அதே சமயம் திலீபனாகவும் இயங்க முடிகிறது என்பதை அவன் சுலபமாக இனங்காட்டிய சம்பவம் இது.

★★★

மருத்துவமனையில் ஒரு சிறு சத்திர சிகிச்சைக் குள்ளாகியிருந்த சமயம் அவனைப் பார்க்கச் சென்றிருந்தேன். கையில் பழவகைகள் அடங்கிய ஒரு பை. கட்டிலில் படுத்திருந்தான் . என்னைக் கண்டதும் வழமையான அதே சிரிப்புடன் வரவேற்றான் ... பையை அருகே வைத்தேன்.

"என்னண்ணா கொண்டு வந்திருக்கிறாய்?"

"கொஞ்சம் பழங்கள் இருக்கு"

"சீ!விசரே எனக்கேன் பழங்கள்? கொஞ்சம் கண்டொஸ்... கொண்டுவந்திருக்கலாமே...."

நான் அதிர்ந்து போனேன்..

நான் திலீபனைத் தான் பார்க்கச் சென்றேன். ஆனால் அங்கு என்னோடு பேசியது..ராணி கொமிக்ஸ் வாசகனான சிறுவன் பார்த்தீபன்தான். புரிந்து கொண்டேன். உடனே வெளியே போய், "கண்டொஸ்'களுடன் திரும்பினேன்.

★★★★

ஒரு சமயம் என் வீட்டுக்கு, ஏதையோ பற்றிக் கதைக்க வந்திருந்தான் . வாசலில் எனது பிள்ளைகள் இருவரும் விளையாடிக்கொண்டிருந்தனர். வந்திறங்கியவன் வாசலில் இருந்த அவர்களுடன் தானும் ஒருவனாக அமர்ந்து விளையாட ஆரம்பித்து விட்டான்.

எனது மகன் கீழே கிடந்த விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து திலீபனிடம் கொடுத்து அங்கே கிடந்த 'நாய் பொம்மை ஒன்றைக்காட்டி"மாமா.. அதைச் சுடு"என்றான்.

உடனே திலீபன் "நாய்க்குட்டி பாவம் .அதைச் சுடக்கூடாது.."என்ற படி துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு நாய்க்குட்டிப் பொம்மையை தடவிக்காட்டினான்.

அந்தச் சமயத்தில் தீலிபனை அங்கு நான் காணவில்லை பார்த்தீபனையே என்னால் தரிசிக்க முடிந்தது. ■



# திலீபனின் கனவு காத்திருக்கிறது

○ ராஜன்



அவரை முதன் முதலில் சந்தித்து உரையாடியது சுபாஸ் வீட்டில் தான்.

அன்று திலீபன் என்னை அழைத்து சென்று சுபாஸ் வீட்டு தலைவாசலில் இருந்த சாய்மனைக் கதிரையில் இருந்து கொண்டு, செய்யப் படவேண்டிய வேலைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லித் தந்ததும், பின்னர், நண்பர்கள் சுபாஸ், நவம், சுகு, விக்கினா, நகுலேஸ், அஜித், குட்டி சிறி என்று எங்கள் நண்பர்கள் வட்டம் பெரிதாகி திலீபனுடன் வேலை செய்யத் தொடங்கியதுமாக நாட்கள் நகர்ந்தன.

திலீபன் எப்போ எங்களை இந்தியா பயிற்சிக்கு அனுப்புவார் என்ற எண்ணத்துடன் திலீபன் வரவை எதிர்பார்த்து மேஜர் சுபாஸ் வீட்டு தலைவாசலில் எல்லோரும் காத்திருப்போம். தலைமறைவாக அரசியல் பணி செய்த காலம் அது. திலீபன் நினைத்த நேரம் தான் சந்திப்பு நிகழும்.

அமைப்பில் இணையும் தவிப்பில் இருந்த நண்பர்களாக எங்களுக்குள் சில விடயங்களைக் கதைப்போம். அவற்றில் ஒன்று இந்தியா சென்று பயிற்சி பெற்று, செல்லக்கிளி அம்மான் வீரமரணத்தின் பின் ஒட்டிய போஸ்டரில் நின்றது போல் எஸ்.எம்.ஜி துப்பாக்கியுடன் நின்று நாங்களும் படம் எடுக்க வேண்டும், மற்றது மானிப்பாயில் ஜூலை மாதத்தில் திருப்பதி புத்தக சாலையின் வாசலில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும், எங்கள் நண்பர்களுக்காகவும் அதே இராணுவத்தை திருப்பி அடிக்க வேணும். இவையே அப்போதைய எங்களின் உள்ளக்கிடக்கைகளாக இருந்தன.

திலீபன் "இந்தியாவுக்கு இந்தக் கிழமை அனுப்புகிறேன்" என்று கூறி பல மாதங்கள் கடந்து விட்டன. ஒரு நாள் அவர் வரவை எதிர்பார்த்து சுபாஸ் வீட்டில் எல்லோரும் காத்திருந்தோம் . வழமை போல் அன்றும் வந்து சாய்மனைக் கதிரையில் அமர்ந்த திலீபனை நோக்கி, "எப்போ என்னை அனுப்ப போகிறியள்?" என்று அஜித் கேட்டான். கேட்ட கையோடு மேசையில் இருந்த கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டு சாய்மனை கதிரையில் படுத்திருந்த திலீபனை பார்த்து "இந்தமுறை பேய்க்காட்டினால் குத்துவன்" என்று கோபமாக கிட்ட வந்தான். நாங்கள் எல்லோரும் பாய்ந்து அவனைப் பிடித்து கத்தரிக்கோலைப் பறித்துக் கொண்டோம். அடுத்து என்ன நடக்குமோ என்று தெரியாத மயான அமைதி தலைவாசலில் குடி கொண்டது.

அமைதியாக அஜித்தை அழைத்து புத்திமதி கூறிவிட்டு "அடுத்தமுறை கட்டாயம் அனுப்புவேன். யோசிக்க வேண்டாம். உங்கள் உணர்வு எனக்குப் புரிகிறது" என்று ஆறுதல் கூறி விடை பெற்றார் திலீபன் . அதன் பின் நாங்கள் அஜித்தை "நீ மொக்கு வேலை பார்த்து விட்டாய் "என்று வாய்க்கு வந்தபடி ஏசினோம். ஆனால் அடுத்த முறை தலைவாசல் சந்திப்பில் அஜித்தை காணவில்லை. திலீபன் எங்கள் குழுவில் அவனை மாத்திரம் இந்தியா அனுப்பி விட்டார்.

எங்கள் குழுவுடன் கருத்து முரண்பட்டுக் கொண்ட நண்பன் விக்கினா ரெலி என்ற இயக்கத்தில் இணைந்து விட்டான். சுகு அதிரடிப் படை என்று ஒரு இயக்கத்தை ஆரம்பித்து விட்டான். குட்டிச்சிறி, நான் ,சுபாஸ் ஆகியோரே திலீபன் பின்னால் நம்பிக்கையோடு திரிந்தோம். நவம் ரெலோ இயக்கத்துக்குச் சென்று விட்டார். எங்கள் நண்பர்கள் வட்டம் சுருங்கத் தொடங்கியது நகுலேஸ் வெளிநாடு சென்று விட்டான். அந்த நாட்களில் நவாலியில் களையோடை அம்மன் கோவிலில் இருந்த ஐயாவுடன் கதைத்து விட்டு சாப்பாடும் வேண்டி சாப்பிடுவதும் வழக்கம். இப்படி ஒரு நாள் அங்கிருந்து சைக்கிளில் வெளிக்கிட்டு ,சிறு கறுப்பு சூட்கேஸ் ஒன்றுடன் வட்டுக்கோட்டை வீதியில் ஏறி நவாலி சேர்ச்சடி என்ற இடத்துக்கு நான், சுபாஸ், நவம், மற்றும் திலீபனும் அங்குள்ள நண்பர்களான செல்லக்கிளி, மற்றும் ரவியை சந்திப்பதற்காகச் சென்றோம். சேர்ச் வாசலில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து அவர்களுடன் திலீபன் கதைத்துக் கொண்டு நின்றார். எதிர்பாராமல் அந்த இடத்துக்குச் சமீபமாக வந்தது ஒரு பொலிஸ் ஜீப் . ஜீப்பைத் தூரத்தில் கண்டதுமே மெதுவாகக் கலைந்து செல்லுமாறு எங்களுக்குக் கூறிவிட்டு தான் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிமாதிரி நின்று கொண்டார் திலீபன் . நானும் சுபாசும் எதிரில் உள்ள ஒழுங்கை ஒன்றில் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஜீப் வண்டி சொல்லி வைத்தமாதிரி பஸ் தரிப்பிடத்தின் அருகில் வந்து நின்றது. பொலிஸார் இறங்கி வந்து திலீபனுடன் கதைத்துக் கொண்டு நின்றார்கள். திடீர் என்று தீலிபன் தனது கையிலிருந்த சூட்கேஸால் சுழற்றி அடிப்பது தெரிந்தது. தொடர்ந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

நாங்கள் இருவரும் ஒழுங்கையால் ஓடி விட்டோம். அன்று கண்முன்னால் அந்த அமைதியான திலீபனின் துணிவையும், தந்திரத்தையும் கண்டோம். பொறுமை, செயல்திறன், வீரம், சமயோசித புத்தி என பல திறன்களை ஒருங்கே கொண்ட திலீபன், தன் இனத்தின் உறுதியை உணர்த்த உண்ணாநோன்பிருந்து,உயிர் துறந்தான்.

திலீபனின் வழங்கிய பயிற்சி மற்றும் வழிகாட்டலுடன் வளர்ந்த பலர், 33 ஆண்டுகளின் பின்னரும் உலகெங்கும் சிதறிக் கிடக்க திலீபனின் கனவும், சொந்த மண்ணும் இன்னமும் அந்த மக்கள் புரட்சிக்காகக் காத்திருக்கிறது!

## வயிற்றில் தீ வளர்த்த வலியனே...

விடுதலைக்காய் நாம் கொடுத்த விலை அதிகம்
தியாகத்தின் உயரத்தில் நீ இமயம்
அஞ்சாமல் நல்லூரில் பசித்தீ வளர்த்தாய் அன்று நீ
எங்கள் விடுதலைக்காய் வீசி நின்ற புயல் காற்று

வைகறை எழுந்தாய்
குளித்தாய்.
குறிப்பெழுதினாய்

சாவுக்கு தானா?
அண்ணா அன்று நீ
சண்டையிட்டாய்

நல்லூரின் வெள்ளை மணல்வீதியிலே
கூட்டி வந்தோர் உன்னை கொலுவிருத்தினர்

புல்லரித்துப்போனதெம்பூமி

நீ படுத்தாய்
எழுந்தாய்
பக்கத்திருந்தோரைபார்த்து -ஏதோ
சொல்லிச்சரிந்தாய்.

வயிற்றில் தீ வளர்த்த வலியனே...
அன்று கயிற்றுக்கொடிபோல
கருகிக்கிடந்தாயே
மறப்போமா அந்த நாட்களை அண்ணா...
ஆ..வென்று வந்துன்னை சாவு
விழுங்கியபோது இந்தபாவிகளும்பார்த்துக்கொண்டிருந்தன

உந்தன் "நாவு" அன்னத்தில் ஒட்டிய போது
வெள்ளை மணல் வீதி விம்மியது
சூழ்ந்திருந்த சுற்றம் தேம்பியது


இமயத்தின் மாயவலை நீ
கிழித்தாய்
எங்கள் இதயங்கள் மீது தடம் நீ பதித்தாய்
இளஞ்சந்ததிக்கு உணர்வேற்றி
அன்று நீ சரிந்தாய்
தமிழ் உணர்வுடன் இருக்கும்வரை நீ உயிர்ப்பாவாய்..

யோ.சாதுரியன்



# சொற்சிலம்பம் போட்டி

14




அனுப்புபவர் பெயர்:......................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.......................................................

கையொப்பம்:...........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. நிசப்தம் 4. திதிகளில் ஒன்று. விரதமாகவும் கொள்ளப்படும். 7. இலங்கையின் 7ஆவது ஜனாதிபதி 9. தொழில்பெயர் விகுதி 10. பிரி 11. இயற்கை வளம் 13. இன்றைய உலகில் அவசியமான ஒன்று. 14. தொலைவு 15. குடியேற்ற நாடுகளின் ஆட்சி முறைமை (ஈற்றெழுத்தை இழந்துள்ளது) 17. மொழி 18. தவறிழைப்பவரைத் திருத்தி சமூகத்துடன் இணைப்பது.

## மேலிருந்து கீழ்

1. உருவாக்கு 2 . மனைவியின் சகோதரி 3. இறந்தவர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கும் நாள். 4.தொடர்பாடல் முறைமையொன்று 5.குறைந்த எண்ணிக்கை 6.பெருமளவு 8. ஒரு ஒழுங்கு முறையில் நிகழ்வது 10. உயிரற்ற உடல்
11. துன்பங்கள் நிறைந்த யுகம் 12. இதுவும் ஒருவகை அகிம்சை தண்டனை தான்
13.விரிவடைதல் (இறுதி எழுத்து இல்லை) 14. செய்திகளைப் பரிமாற்றுபவர்
16. காற்றால் ஏற்படுத்தப்படுவது (சலனம் என்றும் சொல்லலாம்) 17. வீண்

### சொற்சிலம்பம் போட்டி 12 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.யோகர்சுவாமி 7.சிலை 8.கடைச்சன் 10.வாதம் 12.சம்பா 13.மணலை 14.வெம்பல் 15.துர்க்குறி 17.கட 20.கவனம் 22.வரகு 24.விடம் 25.தலைவிதி

**மேலிருந்து கீழ்**

1.யோசி 2.கலைவாணர் 3.சுகம் 4.வாடை 5.மிச்சம் 6.அன்பால் 9.சம்பல் 11.தலைக்கனம் 13.மதுரகவி 14.வெறி 16.குடம் 18.சிவலை 19.தொகுதி 21.வட 23.ரவி

**சொற்சிலம்பம் போட்டி இல.14**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**02.10.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக** தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=. ரூபா 250/=. ரூபா 200=. ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 12இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
திருமதி சிவராஜமலர் சூரியகுமாரன்
சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

**2 ஆம் பரிசு**
.சி.பரராசசிங்கம்
புலோலி தென்மேற்கு, புலோலி

**3 ஆம் பரிசு**
க.சாந்தலிங்கம்
கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

**4 ஆம் பரிசு**
து. மாணிக்கவாசகர்
வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்

**5 ஆம் பரிசு**
திருமதி.ப.சிவநேசன்
தேவாலய வீதி, சங்கானை

# அர்த்தமற்ற தடைகள்



○ யாழன்

தமிழ் மக்களின் என்றும் அணையாத தியாகத்தின் தீபமாக பூசிக்கப்படும் திலீபனின் நினைவேந்தல் கடந்த 32 ஆண்டுகள் காலமாக தமிழர் பகுதிகளில் உணர்வுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. கடந்தகாலங்களில் நினைவேந்தல்களை குழப்புவதற்கான அடக்குமுறைகள் இருந்தாலும் அரச எந்திரத்தால் அந்த முயற்சியில் வெல்லமுடியாமல் போயிருந்தது. போர்க் காலத்தில் கூட நினைவேந்தல்களை தடுக்க முடியாத நிலையில் நினைவுத் தூபிகளை அழித்தொழித்து இன்பம் கண்டிருந்தனர்.
ஆனால் இம்முறை நினைவேந்தல் அனுஷ்டிப்புக்கு கொரோனா (கொவிட் 19) நிலைமையை பயன்படுத்தி தனிமைப்படுத்தல் சட்டத்தின் துணையுடன் வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்களின் ஊடாக பொலிஸாரால் தடை பெறப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளது.
எமக்குரிய சமஷ்டி அரசியல் அந்தஸ்தை தரமறுத்து வரும் சிங்களப் பெரும்பான்மை அரசுகள் இப்போது எமக்கிருக்கும் நினைவு கூரல் உரிமைகளைக் கூட பறித்தெடுத்துவிட கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படத் தொடங்கியிருக்கின்றன. தமிழ் மக்கள் தமக்காக போராடி மடிந்த மாவீரர்களை (தத்தமது பிள்ளைகளை) நெஞ்சில் நிறுத்தி நினைவு கூருவதை பயங்கரவாதச் செயலென சித்திரித்து கொரோனா பரவலுக்கான வாய்ப்புள்ளது என்றும் நீதிமன்றங்களில் மனுத்தாக்கல் செய்து நீதிமன்றத் தடை ஊடாக தடுத்து நிறுத்த முயல்வதானது ஒரு இனத்துக்கு எதிரான அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.
இப்போது ஆட்சியில் இருக்கும் அரசு தம்மை "ஒரு நாடு ஒரு சட்டம்" என்ற கொள்கையின் பால் செயற்படும் அரசாக காட்டிக் கொண்டு தனது நாட்டின் இன்னொரு தேசிய இனத்தின் உயிரிழந்தோரை நினைவு கூர்ந்து அஞ்சலிக்கும் உரிமையை தடை செய்யத் துணிந்திருக்கின்றது. அதற்கு அரசு கையிலெடுத்துள்ள ஆயுதமே கொரோனா தனிமைப்படுத்தல் சட்டமாகும். நாட்டில் கொரோனா சமூகத் தொற்று இல்லாத நிலையில் பல்வேறு பொது நிகழ்வுகள், விருது வழங்கல் நிகழ்வுகள், பெரும் விழாக்களும் நடைபெற்று வருகின்றன. அரசின் புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு கூட மிகக் கோலாகலமாக நடைபெற்றது. இவ்வாறான நிலைமையில் தான் தமிழ் மக்கள் நினைவேந்தலை அனுஷ்டித்தால் மாத்திரம் கொரோனா தொற்றுப் பரவல் ஏற்பட்டுவிடும் என்று பொலிஸார் பிதற்றிக்கொள்கின்றனர்.
திரைமறைவில் இருந்து அரச உயர் மட்டம் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொரோனா நிலைமையை மையப்படுத்தி கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தின் சட்டவிதிகளினால் இம்முறை திலீபனின் நினைவேந்தல் அனுஷ்டிப்பது தடுக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள நீதிமன்றங்களின் ஊடாக பொலிஸாரின் துணையுடன் அரசின் விருப்பம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.
குறிப்பாக நீதிமன்றங்களில் தடை கோரல் மனுவை தாக்கல் செய்யும் பொலிஸார் "திலீபனின் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டால் பயங்கரவாதம் மீளுருவாக்கம் பெறும், எதிர்ப்பாளர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவார்கள், கொரோனா பரவலுக்கான வாய்ப்பு ஏற்படும்" என்று மூன்று விடயங்களை பிரதானமாக குறிப்பிட்டு தமது வாதத்தை முன்வைத்து தடையை பெற்றுக் கொள்கின்றனர். கடந்த காலங்களிலும் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரிய யாழ்ப்பாண மாவட்ட பொலிஸார், அப்போதும் பயங்கரவாதம் மீளுருவாக்கம் பெறும் என்ற வாதங்களை முன்வைத்த போதிலும் நினைவேந்தலை முன்னெடுப்போர் தரப்பு வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டிருந்தது.
ஆக விடுதலைப் போராளியை நினைவேந்தினால் புலிகள் மீள உருவாக்கம் பெறுவார்கள் என்ற புனைவுகளை கடந்த காலத்தில் நீதிமன்றங்கள் கூட ஏற்றுக் கொள்ளவில்லை.
ஏனெனில் சாவடைந்த ஒருவரை நினைவேந்துதல் மனித உரிமை என்பதை நீதிமன்றங்கள் கூட புரிந்து கொண்டிருந்தன. ஆனால் இம்முறை கொரோனா சட்ட விதிகள் அரச தரப்பினருக்கு சாதகமானதாக இருப்பதால் தொற்று நோய் பரவலுக்கான ஏதுநிலைகள் ஏற்படுவதை தடுக்க வேண்டிய பொறுப்புணர்வுடன் பொலிஸ் தரப்பு வாதங்களை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்கின்றன. அதனால் நினைவேந்தல் தடுக்கப்பட்டிருக்கின்றது.
தியாக தீபம் திலீபன் போன்ற, விடுதலைக்காக போராடி வீரச்சாவடைந்த போராளிகளை நினைவேந்துவதன் மூலம் புலிகள் மீளுருவாக்கம் பெறுவார்கள் என்று காலம்காலமாக அர்த்தமற்று பேசிக் கொண்டிருப்பதில் இருந்து அரசு விடுபட்டு எமக்கான உரிமையை வழங்க வேண்டும். . ஆயுதத்தை மௌனிக்க செய்து உண்ணா நோன்பிருந்து தனது உடலை உருக்கி மரணத்தைத் தழுவிக் கொண்ட திலீபனின் அகிம்சை வழியில் பயணித்து எமது குரல்களை எழுப்பி உரிமைகளை கோரவும், நீதியை பெறவுமே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.
இதனை அரசு புரிந்து கொள்ளவில்லை அல்லது புரிந்தும் புரிந்து கொள்ளாதது போன்று நடித்து எமது உரிமையை பறிக்க முனைகின்றது. குறைந்த பட்சம் சிங்கள மக்களாவது இவற்றைப் புரிந்து கொள்வதே அவர்களுக்கும் எமக்குமான நல்லுறவை பேணுவதற்கான வழியாக இருக்கும். ■


முன்னொரு காலத்தில் யுத்தமொன்று நடந்தது;
அது பல லட்சம் மக்களைக் காவு கொண்டது.

முன்னொரு காலத்தில் காட்டுத் தீயொன்று பரவியது;
அது பல அதிசய மரங்கள் ,அழகிய பறவைகள் ,
வன விலங்குகளை போன்றவற்றை அடியோடழித்தது.

முன்னொரு காலத்தில் பூகம்பமொன்று நிகழ்ந்தது;
அது பல கலைக்கூடங்களையும் நகரங்களையும்
மக்களையும் மண்ணுள் புதைத்தது.

முன்னொரு காலத்தில் சுனாமியொன்று வந்தது;
அது பல தீவுகளையும்
நகர்களையும் கடலுக்குள் கொண்டு சென்றது.

முன்னொரு காலத்தில் கொரோனா என்றொரு கொள்ளைநோய் வந்தது;
அது எஸ்.பி.பி. என்ற மகத்தான எங்கள் பாடகனையும் கூட்டி சென்றது.



# பாடி மறைந்த நிலாப்பூ

○ ஆரதி



பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மறைந்த செய்தியைக் கேட்ட போது இப்படித் தன்னுடைய முகநூலில் எழுதியிருக்கிறார் எழுத்தாளர் விமல் குழந்தைவேல். எஸ்.பி.பி.யின் மறைவுச் செய்தி வந்ததிலிருந்து சமூக ஊடகங்கள், வலைத்தளங்கள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் என ஊடகப் பெருவெளியெங்கும் எஸ்.பி.பி. மயமாகவே உள்ளது. இது தமிழில் மட்டுமல்ல, தெலுங்கு, கன்டனம், மலையாளம், ஹிந்தி எனப் பல மொழிப் பரப்பிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு முக்கிய நிகழ்வு. அந்தளவுக்கு எஸ்.பி.பி. எல்லாப் பரப்பிலும் கொண்டாடப்படுகின்ற, நினைக்கப்படுகின்ற, அஞ்சலிக்கப்படுகின்ற ஒருவராகி உள்ளார். தன்னுடைய குரலினால், பாடல்களால், பண்பாகப் பழகும் விதத்தினால் உலகெங்கும் வாழ்கின்ற பல கோடிப் பேரிடம் தன்னைப் பகிர்ந்து விட்டுச் சென்றிருக்கிறார்.

ஒரு பெருந்துயரம் இன்று நம்மைச் சூழ்ந்துள்ளது. பேரிழப்பு உண்டாக்கிய துயரம் இது. நம்மை மட்டுமல்ல, எல்லோரையும் இந்தத் துயரம் சூழ்ந்திருக்கிறது. தங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரின் இழப்பாகவே எஸ்.பி.பி. யின் இழப்பை ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறார்கள். என்பதால்தான் எல்லோருடைய கண்களிலிருந்தும் எஸ்.பி.பி.க்கான கண்ணீர் வடிகிறது. எல்லோருடைய மனதிலிருந்தும் எஸ்.பி.பி. என்ற சொல்லும் அந்த மாபெரும் இசைக்கலைஞரின் நினைவுகளும் மேலெழுந்து வருகின்றன. இது தனியே ஒரு குடும்ப உறுப்பினரின் இழப்புப்போன்றதற்கும் அப்பால், எவராலும் எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகியிருக்கிறது. மகத்தான இசைக்கலைஞர் ஒருவருடைய இழப்பின் பெறுமதி இது.


மொழி, பிரதேசம், வயது, பால், சமூக நிலை, படித்தவர், படிக்காதவர், தலைவர்கள், சாமானியர்கள் என்ற வேறுபாடுகள் ஏதுமில்லாமல் இன்று எஸ்.பி.பி. என்றே உச்சரிக்கிறார்கள். அந்தளவுக்கு கடந்த ஐம்பது ஆண்டுகாலம் எல்லோருடைய வாழ்க்கையிலும் எஸ்.பி.பி. கலந்திருக்கிறார். எஸ்.பி.பி. யின் பாடல்களில்லாத வாழ்க்கையை இந்த ஐம்பது ஆண்டுகாலத்தில் யாருமே கொண்டிருக்க முடியாது. இதை இன்னொரு எழுத்தாளரான தமிழ்நதி இப்படிச் சொல்கிறார், "நம் ஒவ்வொருவரதும் காதலின், மகிழ்ச்சியின், சோகத்தின், ஆற்றாமையின் குரலாக ஒலித்தவர் எஸ்.பி.பி. அந்தத் தளும்பும் சிரிப்பை, வார்த்தைகளை இசைகலந்து ஏந்திச் செல்லும் இலாவகத்தை, உச்சரிப்புச் சுத்தத்தை வேறெவரிடத்திலும் கண்டதில்லை. அல்லது, வேறெவரையும் நான் அந்தளவு கவனித்துக் கேட்டதில்லை. நாம் காதலித்த காலங்களை இன்றுவரையிலும் தன் குரலால் மீட்டெடுத்துத் தந்துகொண்டிருப்பவர் எஸ்.பி.பி. அரசியல் தலைவர்களுடைய இழப்பு என்றால் அது அந்த நாட்டுக்குள் அல்லது அவர்களுடைய அரசியல் செல்வாக்கு வலயத்துக்குள்ளேயே உணரப்படும். மிகச் சிலருடைய இழப்பே எல்லை கடந்து உலகளாவிய தாக இருப்பதுண்டு.

அப்படி எல்லை கடந்து எட்டுத்திக்கிலும் அந்த இழப்பு உணரப்படுமாக இருந்தால் அந்த இழப்பு பேராளுமை ஒருவருடையதோகவே இருக்கும் எஸ்.பி.பி. யின் இழப்பு ஒரு பேராளுமையின், பேராற்றலின் இழப்பாகவே இன்றிருக்கிறது. அதானால்தான் எல்லைகளைக் கடந்து எல்லோராலும் எஸ்.பி.பி. நினைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக்குறிப்பை எழுதும் நான் உட்பட பல கோடி பேர் இன்றிரவு தூங்கப்போவதில்லை. இன்று யாருக்கும் பசியிருக்காது. மனதில் அமைதியிருக்காது. எல்லோரையும் துயரமே மூடி யிருக்கும். ஆனால், கண்களைத் திறந்தாலென்ன, கண்களை மூடினாலென்ன ஒரு மந்திரக் குரல் மட்டும் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆம் எந்தப் பக்கம் திரும்பினாலும் அவருடைய குரலே கேட்கிறது. அது அந்தள வுக்கு விதவிதமான பாடல்கள். வெவ்வேறு கோலங்களாக. வானம் முழுவதும் நட்சத்திரங்கள் நிரம்பியிருப்பதைப்போல எங்கள் திசையெங்கும் எஸ்.பி.பி. யின் பாடல்களால் நிரம்பியிருக்கிறது. வானத்தில் நிறைந்து ஒளிர்ந்து கொண்டிருக்கும் நட்சத்திரங்களின் நடுவே சந்திரன் ஒளிவீசுவதைப்போல தன்னுடைய ஆயிரக்கணக்கான பாடல்களின் நடுவே S.P.B. புன்னகைத்துக் கொண்டு, பாடிக்கொண்டு இருக்கிறார். எந்தப் பக்கம் திரும்பினாலும் எல்லோரும் எஸ்.பி.பி. யைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் அளவுக்கு ஏராளமாக அள்ளிக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார் இந்தக் கொடையாளி.

யாருக்கும் எந்த விதமான இழப்பையும் பாதிப்பையும் கொடுக்காதவர்கள் கலைஞர்கள். அரசியல்தலைவர்கள், மதத்தலைவர்கள் கூடச் சில சந்தர்ப்பங்களில் சமூகப் பதற்றத்தையும் பாதிப்புகளையும் உண்டாக்கி விடுவார்கள். ஆனால், கலைஞர்கள் அப்படியானவர்களில்லை. அவர்கள் எப்போதும் எல்லோரையும் மகிழ்விக்கிறார்கள். துயரத்திலும் ஆறுதலாக இருக்கிறார்கள். ஒரு மயிலிறகைப்போல காயங்களை வருடி ஆற்றி விடுகிறார்கள். எஸ்.பி.பி. எத்தனை கோடிப்பேருக்கு அப்படியான ஒரு மருத்துவராக இருந்திருக்கிறார். இந்த உலகத்தில் பல்லாயிரக்கணக்கான காதலர்களுக்குப் பாடகராக இருந்திருக்கிறார். பல கோடி இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஏற்ற மாதிரி அள்ளி அள்ளிக் கொடுக்கக் கூடிய அதியற்புதனாக. ஏறக்குறைய ஒரு கடவுளின் அத்தனை வல்லமைகளோடு. இது யாருக்கும் வாய்க்காத ஒன்று. அவதார புருஸர்களுக்கே சித்திக்கும் ஒன்று. அப்படியொரு அவதார நாயகன் நம் காலத்தில் நமக்குக் கிடைத்தது அதிசயம். அற்புதமே. அதை இன்று இழந்து நிற்பதுதான் நம் விதியின் கொடுமை.

ஐம்பது ஆண்டுகளில் 42 ஆயிரம் பாடல்கள். பல நூறு கவிஞர்களின் பாடல்களுக்கு உயிரூட்டியிருக்கிறார். கே.வி. மகாதேவன், எம்.எஸ்.வி, சங்கர் கணேஸ், சியாம், வி.குமார், இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் என்று பல இசையமைப்பாளர்களின் இசையில் பாடியிருக்கிறார். எம்.ஜி.ஆர். சிவாஜி, கமல், ரஜனி, மோகன் தொடக்கம் அஜித், விக்ரம், தனுஷ் விஜய் என இன்றைய நடிகர்கள் வரையில் பல நூறு நடிகர்களுக்கு - பாத்திரங்களுக்கு பாவங்களோடு பாடியிருக்கிறார். தமிழில் மட்டுமல்ல, பிற மொழிகளிலும் இந்தப் பங்களிப்பை, இந்தச் சாதனையை எஸ்.பி.பி.நிகழ்த்தியிருக்கிறார். என்பதால்தான் அவர் எல்லாவகையிலும் நம்மில் நிறைந்தவராக மாறக்கூடியதாக இருக்கிறது. எப்படி இந்த இழப்பை ஏற்பது? எப்படி இதற்கு அஞ்சலி செலுத்துவது? எப்படி இதைக் கடந்து செல்வது? இந்த மனிதரை எப்படி நாங்கள் எங்களோடு வைத்துக் கொள்ளப்போகிறோம்? என்ற கேள்விகள் இந்தக் கணத்தில் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. வேறு வழியில்லை. அவர்களுடைய பாடல்களே நமக்கு ஆறுதல். அதையும் அவர் நமக்காகத் தந்து விட்டுச் சென்றிருக்கிறார். ஆம் அதுதான் இந்தத் தேவனின் வரம். இசையாலான வரம்.

அஞ்சலிகள் இசைத்தேவனே! ■





# 14 இற்கான கவிதைகள்

தமிழ் அன்னைக் குரலாம்
தாயகம் எங்கும் ஒலித்திட
தியாகச் சுடரொளிக்கு
தியானித்தீரோ உம் உயிரை!

விதையதுவாய் மண்ணில் வீழ்ந்து
விருட்சமாய் மீண்டும் எழுவீரோ!
திசை தெரியாக் காட்டில்
தமிழனாக நாமும்...!

*சி.சுதர்மிகா,*
கல்வயல் சாவகச்சேரி.

திலீபா நீ எம் இதயக்கோயிலடா
உனை இடித்தழிப்பவர் யாரடா
ஒலி வாங்கியைப் பிடித்து நீ
இடித்துரைத்தாய் அன்றொருநாள்
வெடிக்கட்டும் புரட்சியென
வடித்த கண்ணீர் வீணாகா
வடிவங்கள் தான் மாறிடலாம்
இலட்சியமோ மாறாதென்றும்

**சி.பாவரசன்,**
யா/வட்டு. இந்துக் கல்லூரி.

**ஆர்ப்பரித்த ஆயுதங்களும்**
**சீறிய இரத்தமும் அடங்கின**
**பன்னிரு நாள்கள்**
**பதறின பன்னாடுகள்**
**குமுறின தமிழ் நெஞ்சங்கள்**
**ஆன போதும்**
**அடக்கி விடும் அரசுகளால்**
**அடக்கப்பட்ட அகிம்சையின் மூச்சு**
**இன்றுவரை பெருமூச்சாய்.**

க.தில்லை,
மட்டுவில்.

**திலீபா நீ தியாகியடா**
**போருக்கும் நீ தீயடா – இப்ப**
**பாருக்கும் நீ நீதியடா**
**பாரதத்தின் அநீதியால்**
**பார்த்தீபம் அணைந்திட்டாலும்**
**நீதி என்றுமே அணையாதடா**
**எரியும் அது எரிக்கும் – ஒருநாள்**
**மக்கள் புரட்சியதாய்...**

**இ.சிவசிறிதரன்**
அல்பா மிக்சர் கடை,சங்கானை.

தர்மம் போதித்த நாட்டுக்கு
அகிம்சை புரியாமல் போனதோ
நாளொன்று தவறிட
நம்பிக்கை குன்றிட
பன்னிரு நாள்களில்
அடங்கியது குரல்
உயிர் பெற்றது வரலாறு.

*தி.புவனேஸ்,*சாவகச்சேரி.

சூழ்கலி நீங்க
அன்னை மொழி ஓங்க
சுடரொளியாய்
ஆனீரோ!
விதையாய் நீரும்
வீழ்ந்தீரோ மண்ணில்
உம் வருகையோடு
விடிவுக்காய் நாம்!

**கி.சர்மிஜா,**
கல்வயல்,சாவகச்சேரி.

தண்ணீரில்லாமல்
பன்னிருநாள் பட்டினி கிடந்து
தமிழினத்துக்காய் உயிரீந்த
தன்னலமற்ற திலீபனை
நினைவு கூர முடியாமல்
நிற்கின்றான் தமிழன்

*செ.அபிராம்,*நாவற்காடு வரணி.

தீந்தமிழ் நீருக்காய்
உன் தாகந் தீருமுன்
தியாகமெனுந் தீபத்திற்குள்
திரிந்து விட்டீரே?

முடிவற்ற திட்டாந்தமாய்
மூச்சினை நிறுத்திடினும்
உன் மனத் திண்ணம்
தீயாய் திதைகிறதின்றும்...

**ச.நிரோஜனி,**பளை.

உன் இனத்தின் உரிமைக்காய்
உருகியுருகி ஆகுதியான
மகா ஆத்மாவை
அஞ்சலிக்கக் கூட
அருகதையற்ற அப்பாவிகளானோம்
இத் துர்ப்பாக்கிய நிலையிதனால்
துவண்டு போய் துடிக்கின்றோம்

**V.P.சிவேஸ்,**
தண்ணீரூற்று,முள்ளியவளை.

**கல்லறை உடைக்கலாம்**
**கொடிகள் கிழிக்கலாம் - உன்**
**சிலைகளை தகர்க்கலாம்**
**நினைவேந்தலை நிறுத்தலாம் - ஆனால்**
**உன்னையுன் நினைவை**
**எம்மிடமிருந்து யாராலும்**
**பிரிக்க முடியாது ஏனெனில்**
**நீ எம் இதயத்தில் வாழ்வதால்**

**இ.சி. தரன்.**
அராலி மத்தி.வட்டுக்கோட்டை

பாரதத்தின் போலி காட்ட
தன் வயிற்றில் போர் தொடுத்து
கொட்டும் மழையிலும் உதட்டில்
சொட்டும் நீர் பட்டிடாமல்
பொங்கி நின்றவன் பேச்சடங்கி
பட்டினியாய் கிடக்கின்றான்
பார்த்தீபன் பசி இன்னும்
பாதியும் தான் தீரவில்லை.

**ஜெ.மதுராங்கி,**
இணுவில்.

**பரிசு பெறும் கவிதை**

தமிழினம் நிலைத்திட உறவுகள் தமை மறந்து
ஆயுதவழி பலனேதும் தராதென்றறிந்தே
காந்தி மகான் வழித்தடத்தில் அகிம்சை வழிநாடி
நல்லைக்கந்தன் வீதியதில் நீராகாரமேதுமின்றி
உயிர்நீத்தும் உடற்தானம் செய்தவன் பசிதீரும்
என்றுரைத்தோர் தம் பசி தீர்க்க சிதறியவேளை
ஒன்றாகினர் எனும் செய்தித்தேனாய் பாய்வதால்
வெற்றி நிச்சயம் நம்புவோம் தமிழ் மகனே!

ந.தனுபதன்.வணிகர் கழகம்.
யாழ்ப்பாணம்.

பார்த்தீபா
பார்த்தாயா
நீ மூட்டிய தீ
எமைப்பகைத்த
பாரெங்கும்
பாரதத்திலும்
எரிந்து கொண்டிருக்கிறது
வடிவங்கள் மட்டும்
மாறி இப்போது.

சி. பாவனா,
பூங்கனிச்சோலை,
சங்கானை

திலகமிட்டே தமிழ்த் தாயொருவர்
திலீபா உனை வாழ்த்தி நிற்க
திணிக்காத ஊண் மறுப்பை
திடமாய் நீ கொண்ட நாட்களிலே
திரளாய் மக்கள் அணிதிரண்டே
தினமும் மலர்தூவி விளக்கேற்றி
திண்ணமாய் உரைத்த வழமைதனை
திரண்டே தடுத்து நிற்கிறது பகை!

*துறையூர் பகீன்.*

## மௌன மொழி

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

0773165555


இதுவரை பரிசுக்குரிய கவிதைகளை எழுதியோருக்கு பரிசில்கள் விரைவில்... உங்கள் பரிசை உறுதிப்படுத்த எமது தொலைபேசி எண்ணோடு தொடர்பு கொள்ளவும்.



கவிதைக்கு பரிசு 1000/=

15

உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:
**02.10.2020**



# தற்கொலை செய்யும் கிணறுகள்!

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

கிணற்றுக்குள்ளிருந்து தண்ணீர் எடுப்பது ஒன்றும் புதினமில்லை. ஆனால், கிணறுகளுக்குள் தண்ணீர் நிரப்புவது புதினம். இதை நீங்கள் நம்ப மறுக்கலாம். ஆனால், அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது.

இதென்ன முட்டாள் தனமான வேலையாக இருக்கே! என்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். இது வேறு எங்கும் இல்லை, கிளிநொச்சியில்தான் நடக்கிறது.

கிளிநொச்சி நகருக்கு அண்மையாக உள்ள அம்பாள்குளத்தில் உள்ள சுலோசனாவின் வீட்டில் மூன்று லட்சம் ரூபா செலவழித்துக் கட்டப்பட்ட கிணற்றில் நீரில்லை. இவ்வளவுக்கும் இந்தக் கிணற்றுக்கும் அம்பாள்குளத்துக்குமிடையிலான தூரம் 300 மீற்றர்தான். இவ்வளவு அண்மையில் குளம் இருக்கும்போது எப்படிக் கிணற்றுக்குள் தண்ணீரில்லாமல் போனது என்ற குழப்பம் உங்களுக்கு வரலாம். சுலோசனாவின் வீட்டில் மட்டுமல்ல, வசந்தராஜாவின் வீட்டுக் கிணற்றிலும் நீரில்லை. அப்படியே ரகுநாதன், மாயழகு, கணேசு, நீக்கிலஸ்பிள்ளை, போலம்மா, மாயாண்டி எல்லோருடைய கிணறுகளும் வறண்டு காய்ந்தே கிடக்கின்றன.

என்ன செய்வது? குளத்து நீரைத் தேக்கி வைக்க வேண்டிய அளவை விடக் குறைவாக வைத்திருக்க முற்பட்டதன் விளைவே இது. அதாவது, நீர் முகாமைத்துவத்தில் உள்ள தவறே இதற்குக் காரணம். இந்த மாதிரியான செயற்பாடுகளால்



தான் கிளிநொச்சியில் உள்ள பல கிணறுகள் இந்தக் கோடையில் காய்ந்து போய்க்கிடக்கின்றன. விவேகானந்தநகர், உதயநகர், செல்வாநகர், மலையாளபுரம், செல்வபுரம், முறிப்பு, சாந்தபுரம், பொன்னகர், அறிவியல்நகர், அம்பாள்குளம், ஆனந்தநகர், கனகபுரம் என்று பல கிராமங்கள் இன்று வரட்சியில் துவண்டு போய்க்கிடக்கின்றன. இங்கே உள்ள தென்னை, மா, பலா போன்ற வான்பயிர்கள் கூட வாடிச் சாகின்றன. பூங்கன்றுகளின் கதையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பக்குவம் பார்த்து கஷ்டப்பட்டு வளர்த்த தென்னைகள் எல்லாம் வட்டுச் சரிந்து பட்டுப்போகின்றன.

வேறு வழியில்லாமல் சனங்கள் காசு கொடுத்துத் தங்கள் கிணறுகளுக்குத் தண்ணீரை நிரப்புகிறார்கள். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்த காலம் போய் இப்பொழுது கிணற்றுக்குத் தண்ணீரை நிரப்பும் விசித்திரமான காலம் வந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கிளிநொச்சி சிந்தனைக் குழாத்தின் சந்திப்பொன்றின்போது நீர்ப்பாசனப் பொறியியலாளரும் கிளிநொச்சி பொறியியற் பீடத்தின் விரிவுரையாளருமான சிவகுமாரிடம் கேட்டோம். "சரியான நீர்க்கொள்கையும், நீர்முகாமைத்துவமும் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம்" என்று. "பயிர்ச்செய்கைக்கான நீர், குடிநீர்த் தேவைக்கான நீர், பிற தொழிற்துறைகளுக்கான நீர் என நீர் முகாமைத்துவம் திட்டமிடப் பட்டு வரையறுக்கப்பட வேண்டும். முக்கியமாக நிலத்தடி நீர்ச் சேகரிப்பைப் பற்றிய கவனமிருக்க வேண்டும். இதில் நீர்ப்பாசனத்திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, நீர் முகாமைத்து வத்திணைக்களம், விவசாயத்திணைக்க ளம், கமநல சேவைகள் திணைக்களம் எனச் சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனங்கள் ஒருங்கிணைந்து இந்த நீர்ப்பங்கீட்டுக் கொள்கையை வகுப்பது அவசியம். முக்கியமாக பொருத்தமான நீர்க்கொள்கை உருவாக்கப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

உண்மைதான். கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் ஒன்பதுக்கு மேற்பட்ட நீர்ப்பாசனக்குளங்கள் உண்டு. வன்னிமுழுவதிலும் நாற்பதுக்கும் அதிகமான குளங்கள் உள்ளன. கனகராயன் ஆறு, கலவரப்பாறு, மண்டக்கண்ணாறு, குடமுருட்டியாறு, பாலியாறு, பறங்கியாறு, பேராறு, பிரமந்தனாறு, நெத்தலியாறு என்று ஏராளம் ஆறுகள் வேறு அங்குள்ளன. மாரியில் வெள்ளம் குளங்களை நிரப்பியபிறகு, வான்பாய்ந்து புரண்டோடி, ஊர்களை மேவி, வயல்களை மேவிக் கடலில் போய்ச் சேருகிறது பெருமளவு தண்ணீர். இதில் வெள்ள அனர்த்தம் வேறு ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ந்து அதற்கான இழப்பீடும் (நிவாரணம்) வழங்கப்படுகிறது. ஆனால், கோடையில் சனங்கள் குடிநீருக்கே ஆலாய்ப்பறக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் இதுதான் கதை, மாரியில் வெள்ளத்தில் மூழ்குவதும் பெருமளவு நீரைக் கடலுக்கு விடுவதும், கோடையில் தண்ணீருக்குத் தவிப்பதுமாக. ஒரு அறிவார்ந்த சமூகத்தில் இந்த மாதிரியான அவல நிலை நீடிக்குமா?

இவற்றின் மத்தியில்தான், அபிவிருத்தியைப் பற்றிப் பெருமெடுப்பில் பேசப்படுகிறது. ஆயிரமாயிரம் அபிவிருத்தித்திட்டங்கள் வந்து போகின்றன. இந்த அபிவிருத்திப் பேச்சுகளோடும் அதியற்புதமான திட்டங்களோடும் அமைச்சர்கள் வருகிறார்கள்; போகிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் என்ற பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என்று வேறு ஏராளம் பேர் பெருங்கதையாடல்களோடு உள்ளனர்.

ஆனால், ஊருக்குள் கிணறுகளில் தண்ணீரில்லை. பல இடங்களிலும் குடிநீர்ப்பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. கிளிநொச்சியில் மட்டுமல்ல, தீவுப்பகுதியில், வடமராட்சியில், வலிகாமம் மேற்கில், முத்தையன்கட்டில், மல்லாவியில், வலையன்கட்டில், மன்னாரில், வவுனியாவின் சில கிராமங்களில் எனப் பல இடங்களிலும் தண்ணீர்ப் பிரச்சினை உள்ளது. இதைப் பற்றிப் பேசினால், உடனடித்தீர்வாக தண்ணீரை பவுசரில் கொண்டு வந்து கிணற்றை நிரப்பலாம் என்ற மகத்தான ஆலோசனை வழங்கப்படுகிறது. அப்படித்தான் நடந்து கொண்டுமிருக்கிறது.

இந்தத் தீராத தண்ணீர்ப்பிரச்சினையால் சனங்கள் வேறுவழியில்லாமல் குழாய்க்கிணறுகளையே அமைக்க வேண்டியுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் குழாய்க்கிணறுகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. குழாய்க்கிணறு களை அமைக்கும்போது அக்கம் பக்கத்தில் உள்ள சாதாரண கிணறுகளில் நீர் வற்றிப் போகிறது. இது அந்தக் கிணறுகளைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளுகின்றது. ஆகவே இதற்குரிய தீர்வு குழாய்க்கிணறுகளை அமைப்பதல்ல. ஏனெனில், குழாய்க்கிணறுகள் நிலத்தின், நீரின் புதைகுழிகளே. அப்படியென்றால் நாங்கள் இந்த நீர்ப்புதைகுழிகளைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறோமா? அபிவிருத்தி என்பது நீர்ப்புதைகுழி களை அமைப்பதையும் உள்ளடக்குகிறதா?

(மறுபக்கம் பார்க்க)



சஞ்சீவி
26 செப்ரெம்பர் 2020

# செல்லரம்மான் திரைச்சேலை


ச.வே.பஞ்சாட்சரம்

○ ம.பா.மகாலிங்கசிவம்

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் ஈழத்தில் புகழ் பெற்ற கவிஞர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். சிறு வயதிலேயே 'எழிலி'என்ற கவிதை நூலுக்காகச் சாகித்ய மண்டலப் பரிசு பெற்றவர். சிறந்த தமிழாசிரியர்.
சின்னஞ் சிறுகதைகள், பிள்ளைத் தமிழ் கவிதை, பா நாடகம் முதலிய பலவகையான இலக்கிய வடிவங்களில் தனது ஆற்றலை வெளிக்காட்டியவர். அவரது 'இலக்கணப்பூங்கா' என்னும் இலக்கண நூல் இது வரை ஏழு பதிப்புக்களைக் கண்டுள்ளது. (ஒவ்வொரு பதிப்பிலும் ஆயிரம் நூல்கள் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது)
பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'பஞ்சாட்சரம் கவிதைகள் என்ற நூலில் இடம்பெற்றுள்ள "செல்லரம்மான் திரைச்சேலை"என்ற கவிதை இன்றைய தேன் கூட்டை அலங்கரிக்கின்றது.

*தெருக்கோவில் அம்மனது*
*சிலை மறைக்க ஒரு யாரில்*
*திரைச்சேலை தைப்பித்துக்*
*கொடுத்தீர்கள் செல்லரம்மான்!*
*திரைச்சேலை யிற் பெரிதாய்ச்*
*செல்லர் உப யம் எழுதி*
*இருக்கின்றீர் அழகாக!*
*இதை வாழ்த்தவே வந்தேன்*
*நேர்த்தி நிறை வேற்றுதலும்*
*நிகழ்வதுடன் உங்களுயர்*
*பேர்க்கும் அதில் விளம்பரமும்*
*பெரிதன்றோ கோவிலிலே*
*எல்லாரும் என்னம்மாள்*
*ஆச்சி என்றா ஏத்திடுவர்?*
*செல்லர் எனும் திருநாமம்*
*செப்பியன்றோ கும்பிடுவர்*
*செல்லரம்மான் பக்தர்களால்*
*தெய்வம் போல் தொழப்படுதல்*
*எல்லாந்தான் சும்மாவா*
*இத்துணியை வாங்குதற்கே*
*ஐந்து ரூபாய் -அப்பாடா*
*ஐந்நூறு சதமன்றோ*
*வந்திருக்கும் செலவாக*
*வழிப்பிச்சைக் காரருக்குத்*
*தலைக்கைந்து சதமாகத்*
*தந்திடினும் நூறவர்கள்*
*தலைக்கைந்து தரமேனும்*
*சாமி என்று போற்றாரோ*
*அப்படியேல் ஐந்நூறு*
*தரம் கடவுள் அம்மானும்*
*அப்பாரி வள்ளலுக்கும்*
*அம்மான் நீர் உயர்ந்தவரே அதுவன்றித்*
*திரைச்சேலை லஞ்சத்தைச்*
*சிந்தையிலே நினைந்தன்றோ*
*ஒருக்கால் உன் உயிர்காத்தாள்*
*ஒட்டாண்டி பெண்டாட்டி*
*அவளை நாம் கும்பிடவா*
*அசல்வேலை அவள் சிலையைச்*
*கவராகத் திரை மறத்தல்*
*சொல்லி உங்கள் திருப்பெயரே*
*எல்லாரும் வழிபடுவோம்*
*எம்முயிர்க்கும் மோட்சத்தைச்*
*செல்லரம்மான் தந்தருள்வீர்*
*சிவபெருமான் இனிநீர் தான்*

இக்கவிதை நாம் ஏற்கனவே இப்பகுதியில் பார்த்த மகாகவியின் 'தொண்டு'என்ற கவிதையுடன் ஒரு வகையிலே தொடர்புடையது. 'தொண்டு' கவிதை, தொண்டு என்ற பொது நலப் போர்வையில் எமது குரூரமான சுயநலத் தேவைகளை நிறைவு செய்தோரைத் தோலுரித்துக் காட்டியது.
ஆனால் பஞ்சாட்சரத்தின் "செல்லரம்மான் திரைச்சேலை"என்ற கவிதை, மிகச்சிறிய அற்ப உதவியை, தினைத்துணை உதவியைச் செய்து விட்டு, அதன் பயனான விளம்பரத்தை பனைத் துணையாக எதிர்பார்க்கும் மனித இயல்பை நாடகச்சுவையுடன் சித்திரிக்கிறது.
செல்லரம்மானுக்கு ஏதோ ஒரு நோய் வந்திருக்க வேண்டும். நோய் மாறினால் திரைச் சேலை வாங்கித்தருகிறேன் என்று அம்பாளுடன் 'டீல்' பேசியிருக்க வேண்டும். (நேர்த்திக் கடன் செலுத்துதல்) அம்பாளும் அவரை நம்பி நோயை மாற்றி விடுகிறார்.

*"திரைச்சேலை லஞ்சத்தைச்*
*சிந்தையிலே நினைத்தன்றோ*
*ஒருக்கால் உன் உயிர்காத்தாள்.*
*ஒட்டாண்டி பெண்டாட்டி"*

என இந்நிலையைக் கவிஞர் சித்திரிக்கிறார். சாதாரணமான பெண்கள் எனின் ஒரு யார் துணிக்காக உதவி செய்யச் சம்மதித்திருக்கமாட்டார்கள். ஆனால் அம்பாளோ மண்டை ஓட்டில் பிச்சை ஏற்றுண்ணும் வறிய ஓட்டாண்டியான பரமசிவனின் மனைவி என்பதால்தான் ஏற்றுக்கொண்டாள். 'ஓட்டாண்டி பெண்டாட்டி"என்னும் தொடர் மூலமாகக் கவிஞர் சுட்டுகின்றார். மிகப் பெரிய உதவி நோயைத் தீர்க்கும் உதவி. காணிக்கைசெலுத்தப்பட்டதோ மிகச் சிறிய பொருள். அதனோடு செல்லரம்மான் விடவில்லை.
"திரைச் சேலையிற் பெரிதாய்ச்
'செல்லர் உபயம்'என்றும் எழுதிவிட்டார். இதுவே பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது. இங்கு செல்லர் அம்மானின் ஒரே கல்லில் இரு மாங்காய் விழுத்தும் சாமர்த்தியத்தைக் கவிஞர்,

*நேர்த்தி நிறைவேற்று தலும்*
*நிகழ்வதுடன் உங்களுயர்*
*பேர்க்கும் அதில் விளம்பரமும்*
*பெரிதன்றோ?"*

என்ற வினா மூலம் வெளிப்படுத்துகின்றார். திரைச்சேலை வாங்குவதற்காகச் செலவு செய்த ஐந்து ரூபாவை ஐந்தைந்து சதங்களாகப் பிரித்து (அன்றைய காலச் சூழலில்) நூறு பேருக்குக் கொடுத்திருந்தால், அவ்வளவு பேரும் அவரை வாழ்த்தியிருப்பார்களே என்ற சிந்தை கவிஞரிடம் மேலோங்குகிறது. அவ்வாறு செயற்பட்டிருந்தால் பாரிவள்ளலை விடச் செல்லரம்மான் உயர்ந்தவராகக் கருதப்பட்டிருப்பார்.




இங்கு ஆலயங்களுக்குச் செய்கின்ற திருப்பணிகளை விட, அடியவர்கள் பசி தீர்க்கும் அறப் பணிகள் மேலானவை என்ற கருத்து குறிப்பாக முன்வைக்கப்படுகின்றது. கவிதையின் நிறைவில் கவிஞர் செல்லரம்மானைக் கடவுளின் நிலைக்கே உயர்த்தி விடுகின்றார்.
அடியவர்கள் அம்பாளை வழிபடவெனக் கோவிலுக்குச் செல்கின்றனர். எனினும் செல்லரம்மானின் திரைச்சேலை சுவராக நின்று அம்பாளின் உருவத்தை மறைத்துவிடுகிறது. திரைச் சேலையில் 'செல்லர் உபயம்'என்ற சொற்களே அடியவர்களது கண்களுக்குப் பெரிதாகத் தெரிகின்றன. எனவே அம்பாளை வழிபட வேண்டியவர்கள் செல்லரின் 'திருநாமத்தை' உச்சரிப்பதால் எல்லோருக்கும் மோட்சத்தை அளிக்கக் கூடியவராக செல்லரே காட்சியளிக்கின்றார். இதனால் அவர் சிவபெருமானாகவே உயர்ந்துவிடும் விபரீத நிலையைக் கவிதை படம்பிடிக்கிறது.


*'சொல்லி உங்கள் திருப்பெயரே*
*எல்லோரும் வழிபடுவோம்.*
*எம்முயிர்க்கும் மோட்சத்தைச்*
*செல்லரம்மான் தந்தருள்வீர்!*
*சிவபெருமான் இனிநீர்தான்*

தொகுத்துநோக்கினால், இக்கவிதை மனிதனின் விளம்பரமோகத்தை அழகுறச் சித்தரிக்கிறது எனலாம். விளம்பரம் முதலிய எந்தப் பயனையும் எதிர்பார்க்காத உதவியே, சேவையே, தூய்மையானதாக எல்லோராலும் விரும்பப் படுவது. ■

(தொடர்ச்சி)

# தற்கொலை செய்யும்...

இந்தப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தத்தைச் சாட்டாகச் சொல்லிச் சமாளிக்க முடியாது. அல்லது இப்பொழுது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் 20 ஐச் சொல்லித் தப்பிக்கவும் முடியாது.
இது மிக இலகுவாகத் தீர்க்கக்கூடிய ஒரு விசயம். மிக அவசியமாகவும், மிக வேகமாகவும் தீர்க்கப்பட வேண்டியதொரு பிரச்சினை. இதற்கு உள்ளூர் மட்டத்திலேயே தீர்வைக்காண முடியும். விரிவுரையாளர் சிவகுமார் சொன்னதைப்போல சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமாக இதற்குத் தீர்வைக் காண முடியும். மாவட்ட மட்டத்திலும் மாகாண நிலையிலும் ஒருங்கிணைந்த நடவடிக்கைளை மேற்கொண்டால் போதும். இதற்குரிய ஏற்பாடுகளை - தூண்டல்களை செய்து இந்தப் பணியை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்குரியது. முக்கியமாகச் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்குரியது.
ஆனால், இதை இவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா என்பதே மக்களுடைய கேள்வி. ஏனென்றால், ஏற்கனவே யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான குடிநீரை கிளிநொச்சியில் இருந்து கூடப் பெற முடியாதிருக்கிறது. இதற்கான ஒருமைப்பாட்டைக் காணமுடியாதுள்ளது. இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுவித்திட்டத்தின் கீழ் இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது. இருந்தும் நீர்ப்பங்கீடு நடைமுறைக்கு வரவில்லை.
இதற்குச் சொல்லப்படும் காரணம், ஏற்கனவே பலரும் அறிந்ததே. அப்படி இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நீர் வழங்கப்படுமாக இருந்தால் கிளிநொச்சியின் விவசாயச் செய்கை பாதிக்கப்படும். அதுவும் நெல் விவசாயத்தில் தங்கியிருக்கும் விவசாயிகளைப் பாதிக்கும் என்பதாகும்.
இதற்கு மாற்றுத்திட்டத்தை - மாற்றுப் பொறிமுறையையும் அறிமுகமாக்குவதாக தெரிவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதை உத்தரவாதப்படுத்தியுமிருந்தன. நெல் விவசாயத்தில் மட்டும் தங்கியிருக்காமல் குறைந்தளவு நீர்ப்பயன்பாட்டில் கூடுதலான மாற்றுப் பயிர்ச்செய்கை முறையைப் பின்பற்றுமாறு. ஆனால், இதை மேற்கொள்வதற்கு பெரும்பாலான விவசாயிகள் தயாரில்லை. அப்படி விவசாயிகள் தயாராக இருந்தாலும் அதற்கு இடமளிக்காத வகையிலேயே அரசியல்வாதிகள் நடந்து கொள்கிறார்கள். நீர்ப்பிரச்சினை, மாற்றுப் பயிர்ச்செய்கை, புதிய அணுகுமுறை போன்றவற்றுக்கு சமூகத்தை முன்னகர்த்தத் தடையாக இருப்பதே இன்று எம்முடைய தமிழ் அரசியல்வாதிகள்தான். தங்களுடைய அரசியல் நலன்களுக்காக இதை அவர்கள் செய்கிறார்கள். அதாவது சமூகத் தேவைகள், நிலைமைகள், பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பொருத்தமான தீர்வைக் காண்பதற்குப் பதிலாக, பிரச்சினைகளை மேலும் மேலும் உருவாக்கி வளர்ப்பதையே இவர்கள் தங்களுடைய அரசியல் வழிமுறையாகப் பின்பற்றுகிறார்கள்.
இதுவரையிலும் காலபோகம், சிறுபோகம் என்று இரண்டு போகச் செய்கை செய்யப்பட்டு வந்த நெற்செய்கையை, இந்த ஆண்டு மூன்று போகமாக மாறுவதற்கான முன்னோட்டம் நடந்துள்ளது. இது இடைப்போகமாகும். வன்னேரிக்குளத்தில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இனி இது அடுத்த ஆண்டுகளில் ஏனைய குளங்களின் கீழும் நடக்கக்கூடிய ஏதுநிலைகளே காணப்படுகின்றன. வன்னேரிக்குளத்தின் பாசனத்தில் மூன்று போகச் செய்கையைச் செய்ய முடியும் என்றால், முறிப்புக்குளத்தின் கீழ் ஏன் அப்படிச் செய்ய முடியாது என்று இப்போது பல விவசாயிகளும் கேட்கத் தொடங்கி விட்டார்கள். இரணைமடுவில் இரண்டு போக அறுவடையும் முடிந்த பிறகு இந்த ஆண்டு வரையறுக்கப்பட்ட அளவில் சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கான நீர் வழங்கப்பட்டது.
இதெல்லாம் குளத்தில் அடிப்படையாகச் சேகரித்து வைத்திருக்க வேண்டிய நீரின் அளவு மட்டத்தைக் குறைப்பதாகவே அமையும். அடியொட்ட இறைப்பது என்று சொல்வார்களே, அப்படி குளத்தில் இருக்கும் நீரை அடியொட்ட எடுப்பதே இப்போது நடந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் மேலதிகமாக இருந்தால் அதை யாழ்ப்பாணத்துக்குக் கொடுக்க வேண்டி வரும் என்ற உள்நோக்கமும் இதற்குள் செயற்படுகிறது. யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீரைக் கொடுப்பதா இல்லையா என்பது தனியான பிரச்சினை. ஆனால், அதற்காகக் குளத்தில் நீரை முழுவதுமாக எடுக்கக் கூடாது. அது நிலத்தடி நீர்ச் சேகரிப்பில் பாதிப்பை உண்டாக்கும். குளத்தின் நிலப்படுகையையும் சிதைத்து விடும். சூழலில் உள்ள மரங்கள், காடு, கால்நடைகள், பறவைகள் போன்ற உயிரினங்கள் போன்ற அனைத்தையும் அழித்து விடும். ஆகவே இது ஒரு முட்டாள்தனமான அழிவு வேலையாகவே போய் முடியும். எனவே உடனடியாக இதற்குப்பொருத்தமான தீர்வைக் காண வேண்டும். ■



○ சிவலிங்கம் அனுஷா



# பான்ஷு

## இதுவே எங்களின் கதையும் கூட....

சில திரைப்படங்களைப் பார்த்த பின்பு அத் திரைப்படங்கள் தொடர்பான எண்ணங்கள் அடிக்கடி மனதைத் தொட்டு சென்று விடுவது வழக்கம். சில நேரங்களில் எங்களை அறியாமலேயே வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருக்கும். ஆனால் மனதை அமைதியாக்கவும், வார்த்தைகள் தேடி மனதை அலைமோத வைக்கவும் தக்க திரைப்படைப்புகள் வருவது எப்போதாவது தான். குறுகிய காலத்திற்கு அந்த திரைப்படத்தின் கதாபாத்திரங்கள் நாங்கள் பயணிக்கும் இடமெங்கும் எங்கள் பின்னாலேயே பயணிப்பது போல் நாங்கள் உணர்கிறோம். அவ்வகையான திரைப்படைப்புகள் எங்கள் மனதை கவர வேண்டுமென்றால் அந்தத் திரைப்படங்களில் வரும் உள்ளடக்கங்களுடன் எங்கள் வாழ்க்கை இணைந்திருக்க வேண்டும். அவ் விடயங்கள் எங்கள் வாழ்க்கை பயணங்களுடன் ஒன்றிப்போக வேண்டும். எங்கள் வாழ்க்கையுடன் சிக்கிக்கொள்ள வேண்டும்.


ஆனால் அவ்வகையான திரைப்படங்கள் மிக அரிதென்றே கூறலாம். அத்தகைய திரைப் படைப்புகளுக்கு மத்தியில் 'பான்ஷு' என்பது நாங்கள் மண்ணுக்குள் போகும்வரை எங்களுடன் பயணிக்கும் ஒரு கதையுடன் உருவான படைப் பொன்று. பான்ஷு... 88/89 காலத்தை பதிவு செய்த திரைப்படமாக இருக்கலாம். கொடூர யுத்தத்தால், வடக்கு பற்றியெரியும்போது 88/89 வன்முறையால் காணாமலாக்கப்பட்ட ஒரு மகனைத் தேடி போராடும் ஒரு தாயின் கதையாக இருக்கலாம். ஆனால் 88/89 வன்முறையை காட்சிப்படுத்தும் பான்ஷு அதே நொடிகளிலேயே ஒட்டுமொத்த 88/89 காலத்தையும் மங்கலாக்கி, அக் காலத்தை விட கொடூரமான வன்முறைக் காலத்தின் சாட்சிகளை ஞாபகப் படுத்தி, அந்த ஞாபகங்கள் எனது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தவும், என் மனத்தை பதறவைக்கவும், வேதனைப்படுத்தவும் செய்தது.

ஆம். நான் 88/89 வன்முறைக் காலத்தை கண்டதில்லை. அந்த இருள் நிறைந்த நாட்களை என் கண்கள் காணவில்லை. ஆனால்... அதற்கும் மேலான கொடூர வன்முறையின் கதறல்களால் என் காதுகள் வெடித்து நடுங்கியது ஞாபகம் உள்ளது. இரத்தத்தால் நிறைந்திருந்த பாதைகள் ஞாபகத்திற்கு வந்தன. அதன் வலிகள் மட்டும் இல்லாமல் காயங்களின் தழும்புகள் கூட என்னுடன் பயணிக்கின்றன.

இலங்கையின் வரலாற்றில் பதிவான இளைஞர் போராட்டங்களில் இளையோர் எனும் மையத்தை நாங்கள் அறிவோம். அவர்களைச் சுற்றியிருந்த வன்செயல்களை நாங்கள் அறிவோம். அவ்வாறான ஒரு வரலாற்றை பற்றி தான் பான்ஷு திரைப்படத்தினூடாக விசா பதிவுசெய்கிறார். அதே போன்று அனைத்து போராட்டங்களிலும் அக் காலப்பகுதிகளில், ஒவ்வொரு பிரிவுகளுக்குள் இருந்த அரசியலையும் நாங்கள் அறிவோம். சில சந்தர்ப்பங்களில் அந்த அரசியல் கோட்பாடுகளை நியாயப்படுத்தும் சந்தர்ப்பங்கள் உள்ளன. சில சூழல்களுக்கமைய அந்த அரசியல் கோட்பாடுகள் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன. 88/89 அரசியல் செயற்பாடானது, மக்கள் விடுதலை முன்னணிக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடந்த மோதல் மிகப்பெரிய வன்முறைக் கலவரமாக மாறியதுவே. இந்த வன்முறை செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டவை... இல்லை... கொலைசெய்யப் பட்டன... குடும்பங்கள் சிதறிப்போயின... இவ்வனைத்தினாலும் மிகப்பெரியளவில் பாதிக்கப்பட்டன... ஏழை மக்களும் நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்களும் தான்.

பான்ஷு ஊடாக மக்கள் விடுதலை முன்னணியில் சேர்ந்த ஒரு இளைஞரும் அவர் காணாமலாக்கப்பட்டதினால் அவரை எதிர்பார்த்து மீண்டும் ஒரு போராட்டத்தில் ஈடுபடும் தாய் ஒருவரின் கதையொன்றை பேசுவதோடு, இதனூடாக வரலாற்றின் அனைத்து போராட்டங்களிலும் காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளைக் கேட்டுப் போராடும் வடக்கு கிழக்கு தாய் தந்தைமார்களின் அனைத்து போராட்டங்களையும் நினைவுபடுத்தி கின்றன.

பாபா நோனா எனும் தாயின் கதாபாத்திரத்தினூடாக அவரைப்போல் தன் பிள்ளையைத் தேடி போராடும் அனைத்து தாய்மாரையும் விசா பதிவு செய்திருக்கிறார். பெயர் தான் பபா நோனா. அது ஒரு சிங்களப் பெயர். அந்த தாயின் நெற்றியில் திருநீறு இல்லையென்றாலும், நான் அந்த தாயை பாபா நோனாவாக பார்க்கவில்லை. அவர் பாபா நோனா என்று என் மனம் ஏற்றுக்கொள்வதில்லை. உண்மையில் அவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாமல் என் மனம் தோல்வியடைந்த நிலையிலேயே உள்ளது.




இலங்கையில் நடைபெற்ற அனைத்து இளைஞர் போராட்டங்களிலும் இளைஞர்கள் சமத்துவமின்மையையும் அநீதியையும் எதிர்த்து போராடிய போராளிகள் என்பது எவ்வளவு உண்மையானதோ, அதே அளவு சில சூழ்நிலைகளில் பல்வேறு இலாபங்களுக்காக, சுயநலத்துக்காக அவர்கள் உபயோகிக்கப்பட்டது மறுத்து சொல்ல முடியாத வரலாறு எங்கள் பின்னால் காலங்காலமாக துரத்திக்கொண்டு வருகின்றன. குறிப்பாக, போர் களத்தில் போர் பூமியை கால்களால் அதிகம் ஸ்பரிசித்தது அச் சமூகங்களிலேயே வாழும் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் என்பது நிதர்சனமான உண்மையும் கூட.

பான்ஷு திரைப்படத்தில் வரும் சுது அய்யா போன்ற எத்தனைபேர் போராட்டங்களுக்காக இந்த மண்ணில் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பேர் காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள்? சுது அய்யாவின் நண்பரைப்போல் சுய இலாபங்களுக்காக போராட்டங்களை விலைபேசி விற்று, சொகுசாக சொந்த நாட்டில் அல்லது வெளிநாடுகளில் எத்தனைபேர் இச் சூழலில் வாழ்கிறார்கள்?

இவ்வாறான பல நிறங்களைக்கொண்ட மனிதர்கள் ஒவ்வொரு போராட்டச்சூழ்நிலைகளிலும் இருப்பதை நினைத்து மனதை சமாதானப்படுத்திக்கொள்வது எவ்வாறு? சில சமயங்களில் போராட்டங்களுக்காக உயிரை பணயம் வைத்தவர்களை நினைப்பதா? அல்லது சில சூழல்களில் நியாய தர்மங்களை சிந்திப்பதை மறுத்து தீர்மானிப்புகளை எடுத்து போராட்டக் களங்களில் செயற்பட்டவர்களை நினைப்பதா? இல்லையெனில், அறிந்தோ... அறியாமலோ.. இலாபங்களுக்காக செயற்பட்ட சில அரசியல் குழுக்களுக்குள் சிக்கி இறந்தவர்களை மற்றும் இப்போதும் பாவங்களைச் சுமக்கும் நபர்களை நினைத்து பரிதாபப்படுவதா? இவ்வாறான கதாப்பாத்திரங்கள் அன்றைக்கும், இன்றைக்கும் மற்றும் நாளைக்கும் நம் சமூகத்தில் இருப்பார்கள். பான்ஷு திரைப்படமானது வெறுமனே ஒரு போராட்டத்திற்குள் இருக்கும் அரசியலை மட்டுமில்லாது, அச் சூழலைச் சுற்றியுள்ள சமூக கட்டமைப்புகளையும் நன்றாக விவரிக்கின்றது. அது தெற்கில் மட்டும் காணக்கூடிய சூழலொன்றல்ல. இந்த உள்ளடக்கத்திலும் நான் 88/89 காலப்பகுதியையும் அச் சூழலையும் காணவில்லை. அவ்வாறான சமூக சூழல்களிலூடாகவும், இன்றைக்கும் வன்னியில் பதாகைகளுக்கு பின்னால் மூச்செடுத்துக்கொண்டு தங்களின் பிள்ளைகளை கேட்டும் மற்றும் தனது கணவரை, மனைவியை கேட்கும் தாய் தந்தைமார்களேயே பார்த்தேன். இல்லையெனில் தாய் தந்தையை ஏங்கி நிற்கும் பிள்ளைகளைப் பார்த்தேன். தனது அண்ணாவின் வலக்கை நினைத்து கோபத்தில் இருக்கும் சகோதரரைப்போல் பல சகோதரர்களைப் பார்த்தேன். இன்றைக்கும் வன்னியில், வடக்கிலும் கிழக்கிலும் சாதிய அரசியலுக்கு முன்னால் தங்களின் மதிப்பிற்குரிய வாக்குகளை இடும் மக்களைப் பார்த்தேன். இன்றைக்கும் அவ்வாறான சாதி ஒடுக்குமுறைகளால் குடிநீர் இன்றி வன்னியில் வாழும் மக்களைப் பார்த்தேன். அதுமட்டுமல்லாமல், சாதிகளின் பிடியில் தங்கியிருக்கும் தங்களின் தேர்தல் மேடைகளில் மட்டும் காணாமலாக்கப்பட்டவர்களை நினைத்து கண்ணீரிடும் நபர்களின் உரைகளைக் கேட்டு மௌனமாக நிற்கும் நம் சமூகத்தை பார்த்தேன். பாபா நோனா எனும் தாயை சுற்றியுள்ள சாதிய சூழலை திரைப்படத்தினூடாக பார்க்கும் போது மேலே குறிப்பிட்ட அனைத்து நபர்களும் என் கண் முன்னால் வந்து நிற்கும்போது தாங்கிக் கொள்ள முடியாத வேதனையுடனும், கோபத்துடனும் என் மனம் எரிவதை நான் உணர்ந்தேன். அது திரைப்படத்தைப் பார்த்து சில வாரங்கள் கடந்தும் என்னை நிம்மதியாக இருக்க விடவில்லை.

இறுதியாக நான் பாபா நோனா எனும் தாயை நினைத்து சந்தோசமடைந்தேன். அவர் ஒரு துணிச்சலான பெண். உண்மையில் எனது சந்தோசத்திற்கு காரணம் அதுவாக இருக்கும் என நான் சொன்னால் அது அபாண்டமான பொய்யாகும். ஓம். அவர் ஒரு துணிச்சலான பெண் தான். நான் உண்மையில் அவரை நினைத்து சந்தோசப்பட்டேன். அவர் காணாமலாக்கப்பட்ட தனது மகனை அழைத்து சென்ற அதிகாரியை நேரில் பார்த்திருக்கிறார். அவர் தனது மகனை அழைத்து சென்ற நாளை அறிந்திருக்கிறார். அவர் தனது மகனுக்கு நீதி கேட்டு உரிய இடங்களுக்கு பல கஷ்டங்கள் தாண்டியும் கூட செல்ல தெரிந்திருக்கிறார். அவருக்கு உறுதுணையாக சில நேரங்களிலாவது ஆறுதலாக இருக்க உறவினரான மகன் ஒருவர் இருக்கிறார். அவர் தனது மகனைத் கேட்டு ஒரு வலக்கை பதிவு செய்யும் அரசியல் மற்றும் சமூக சூழலொன்றில் வாழ்கிறார். குறிப்பாக அவர் தனது காணாமலாக்கப்பட்ட மகனை தேடி போராடுவதை பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்கு கேவலமான அரசியல் சூழலில் வாழ வில்லை. ஓம்.. நான் பாபா நோனாவை நினைத்து சந்தோஷப்பட்டேன். அது பாபா நோனாவின் போராட்டத்தை அல்லது அந்த தாயின் பாசத்தை, கோபத்தை மற்றும் கையறுநிலையை ஒரு தராசில் வைத்து அளவிட்டு, அது குறைவாக உள்ளது என்பதைக் கூறுவதற்கு இல்லை. அவர் ஒரு துணிச்சலான பெண். ஒரு போராளியும் கூட. அது மட்டுமல்லாது, அவர் ஒரு தாய். ஆனால்... எத்தனையோ தாய்மார்கள், தந்தைமார்கள் மற்றும் பிள்ளைகள் இந்த அனைத்து சூழலையும் இழந்தும் வாழ்கிறார்கள். ஆனால் போராட்டத்தை கைவிடாமல் இருக்கிறார்கள். இதுக்கிடையில் சமீபத்தில் தனது காணாமலாக்கப்பட்ட மகனை கேட்டு பதாகைகளுக்கு பின்னால் மூச்செடுத்த ஒரு தாயின் மூச்சு நின்று போனதும் நினைவுக்கு வருகின்றது.

பான்ஷு... இவ் அனைத்து போராட்டங்களையும், அந்த அனைத்து மனிதர்களையும் மட்டுமல்லாது, அனைத்து அரசியல் சூழல்களையும் ஒரு புகைப்படத்திற்குள் கொண்டு வந்து அதில் ஆழமாக பதிந்திருக்கும் சிக்கலான சூழலை நினைக்க வைக்கிறது, ஞாபகப்படுத்தி வைக்கிறது, மனதை வேதனைப்படுத்துகிறது. இல்லையெனில் பான்ஷு ஒட்டுமொத்தமாக மனதை மௌனமாக்கும் கலைப்படைப்பாக வரலாற்றில் பதிவாகும்.





# வடலிகள் வளர்ந்து விட்டன

○ அ.இரவி

நாட்களில் எது நல்ல நாள்? எல்லா நாட்களும் நல்ல நாட்களே என்று சிலர் சொல் வார்கள்.

"நாளென் செயும், வினை தான் என் செயும் எமை நாடி வந்த கோளென் செயும் கொடுங்கூற்றென் செயும்,"

எண்டு தேவாரமும் இருக்கு. ஆனால் எனக்கென்னவோ சனிக்கிழமை எண்டால் ஆகலும் விருப்பம். வெள்ளிக்கிழமை எண்டா லும் 'இண்டைக்கு கடைசி நாள். நாளைக் குப் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை' என்பதும், பொழுதுபட அம்மாள் கோயில் பூசைக்குப் போகலாம் என்பதும், அந்த நாளின் மரக்கறிகளும்தான் வெள்ளிக்கிழ மையை விருப்பத்திற்குரிய நாளாக்கியது.

வெள்ளிக் கிழமைக்கு உருளைக்கிழங்கு, முருங் கைக்காய் போட்டுப் பிரட்டல் கறி, வெண்டிக் காய் அல்லது கத்தரிக்காய் பொரித்து குழம்பு அல்லது வெந்தயக் குழம்பு, கீரை, பருப்பு , மரவள்ளிக்கிழங்கு, வெள்ளைக்கறி, வறை, இரசம், அப்பளம், வடகம், மிளகாய்ப் பொரியல், வெள் ளைச் சோறு, எண்டு மரக்கறிக்கு வெள்ளிதான். அதுவும் இரவு அம்மாள் கோயிலுக்குப் போட்டு வந்து புட்டோடை இரசமும், பொரிச்ச குழம்பும் விட்டுச் சாப்பிடுறது அமிர்தம்தான். அம்மா புகட்டிலை 'இளவாலிக்காமல்' இருக்க அப்பளம் வைத்திருப்பா. ஐப்பசி வெள்ளி எண்டால் இந்த வகையிலிருந்து அதிக மாறுதல் இருக்கும். ஐப்பசி வெள்ளி விரதத்துக்கு வெள்ளை அரிசிச்சோறு, அப்பளம், மிளகாய்ப் பொரியல், ஒரு சம்பல் இதுதான் அம்மாவுக்குப் பிடித்தது.

ஆடிச் செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாசிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள் எண்டு ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு கிழமை விரதம். ஒவ்வொரு விரதத்துக்கும் ஒவ்வொரு வகைச் சாப்பாடு . ஐப்பசி வெள்ளிக்குச் சம்பலும் சோறும், புரட்டாசிச் சனிக்குக் கருணைக்கிழங்குப் பிரட்டல், அம்மாள் கோயில் திருவிழா விரதத்துக்கு கட்டாயம் தயிர். சாப்பாட்டு வகைக ளிலை எத்தினை சங்கதிகள் இருக்கு.

வருசம் தோறும் சனிக்கிழமைக்குச் சாப்பாடு விதம் வேறை தான். காலமைக்கு வெள்ளியான் இரசமும், குழம்பும் இருக்கும் குழம்பு கொஞ்சம் புளிச்சும், இரசம் கொஞ்சம் ஊறியும் புதுசாக அவித்த வெள்ளைப்புட்டும் இருக்கும். மத்தியானத்துக்குக் கட்டாயம் வேள்வி இறைச்சி. கவுணாவத்தை வைரவர் கோயில், அல்லது கூட்டத்தார் கோயில், அல்லது உரும்பிராய் காட்டு வைரவர் கோயில், அல்லது ஊர் ஊராக இருக்கிற வைரவர், முதலி யார், ஐயனார், கூட்டத்தார் என்று கோயில்களில் ஒவ்வொரு சனியும் வேள்வி நடக்கும். மூத்த மாமா எப்பிடியோ குடலையில் இறைச்சி கொண்டு வருவார். அப்பிடி வேள்வி இல்லை யெண்டால் மாவிலங்கை பனங் கூடலுக்கை மூண்டு கிடாய் அடிபடும். சின்னத்தம்பி அல்லாட்டில் தம்பிப்பிள்ளை குட லைக்கை பங்கிறைச்சி கொண்டு வருவார். மத்தியா னம் எப்பிடியோ கிடாய் இறைச்சி. கறிக்கை அம்மா உருளைக்கிழங்கு அல்லாட்டில் பிலாக் கொட்டை வெட்டிப் போடுவா. அது இன்னும் ருசி.

பள்ளிக்கூட நாட்களில் ஒரே விசர்ச் சாப்பாடு தான். குத்தரிசிச் சோறு , மீன் குழம்பு, வெள்ளைக் கறி , கீரை, அல்லது வறை அல்லது மரவள்ளிக்கி ழங்குக்கறி, குழம்பு மீன், பொரிச்ச மீன், எண்டிருக் கும். திங்கட்கிழமை எண்டாலே பள்ளிக்கூடமும் தொடங்கும். வாத்திமாற்றை அடியும் தொடங் கும். இந்தச் சாப்பாடும் தொடங்கும். விசரும் தொடங்கும்.

அம்மா ஒரு சனிக்கிழமை ஒரு குழம்பு வைச்சா. எப்பேனும் இருந்திட்டுத்தான் அப்பிடி வைப்பா. பெரிய கறி மிளகாய் நாலைஞ்சு எடுத்து அதைக் கீறிப்போட்டு அதுக்குள்ளை முட்டையை அடிச்சு ஊத்துவா. பிறகு மிளகாயை நூலாலை கட்டி அதைப்போட்டு குழம்பு வைப்பா. குழம்பை இறக்கின உடனை நூலைக் கழட்டிப் போட்டு குழம்பும் விட்டு மிளகாயைக் கடிச்சு சோத் தோடை தின்ன வேணும். அதல்லோ ருசி! அப் பிடி குழம்பு வைச்ச ஒருநாள் அப்பா, ஏணி கட்டப் போய் ஏணியோடை விழுந்து போனார். காலிலை யும், நெத்தியிலையும் காயம். அண்டைக்கு அந்தக் குழம்பு எப்படி ருசிக்கும்?


ஆடிச் செவ் வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாசிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள் எண்டு ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ் வொரு கிழமை விரதம். ஒவ்வொரு விர தத்துக்கும் ஒவ்வொரு வகைச் சாப்பாடு . ஐப்பசி வெள்ளிக்குச் சம்பலும் சோறும், புரட்டாசிச் சனிக்குக் கருணைக் கிழங்குப் பிரட்டல், அம்மாள் கோயில் திருவிழா விரதத்துக்கு கட்டாயம் தயிர். சாப்பாட்டு வகைகளிலை எத்திளை சங்கதிகள் இருக்கு.

சனிக்கிழமைக்கென்று வேறும் சில சந்தோசங்கள் இருக்கு .நாளைக்குப் பள்ளிக்கூடம் என்கிற கவலை இல்லை. பின்னேரம் விளையாடப் போகலாம் என்கிற சந்தோசம் இருக்கு. மூண்டு நேரமும் ருசிக்கச் சாப்பாடு இருக்கு. ஞாயிற் றுக்கிழமையும் அப்பிடித்தான். பின்னேரம் விளையாடவும் போகலாம்தான். ஆனால் 'நாளைக்குப் பள்ளிக்கூ டம்' என்கிற உறுத்தல் இருக்கும். அதிலும் மேலாக சனி , ஞாயிறு இரண்டு நாள் லீவு எண்டு நிறைய வீட்டுப்பாடமும் தந்து விடுங்கள் இந்த விசர் வாத்திமார். வெள்ளியும், சனியும் அதை ஆர் செய்யிறது? ஞாயிறு பின்னேரம் மூசி மூசி விளை யாடிப்போட்டு வந்து, முகம் கழுவி, சாமிக்கு விளக்கும் கொளுத் திப் பிறகு வெளியாலை துளசி மாடத்துக்கும் விளக்குக் கொளுத்தி "அம்மாளே, வைரவரே, முருகனே, பிள்ளையாரே, ஐயனாரே, முதலியாரே, நாம்பிரானே. காளியே, சிவபெரு மானே, லட்சுமியே, சரஸ்வதியே, கிருஷ்ணரே அம்மா வைக் காப்பாத்த வேணும். அப்பாவைக் காப்பாத்த வேணும், அக்காவைக் காப்பாத்த வேணும், எங்கள் எல்லா ரையும் காப்பாத்த வேணும். எனக்கொரு தங்கச்சி வரப்பண்ணவேணும். நான் நல்லாப் படிக்கப்பண் ணவேணும். ஒருத்தருக்கும் ஒரு தீங்கும் வரக்கூ டாது. பாம்பொண்டும் கடிக்கக் கூடாது. பேய் வரக்கூடாது. கனவிலையும் பேய்களும், கடவுளும் வரக் கூடாது. எல்லாக் கட வுள்மாரும் எங்களைக் காப்பாத்த வேணும்," என்று கும்பிட்டு ஒரு தேவாரமும் புராணமும் பாடுவேன். வெள்ளி என்றால் திருவாசகமும் ஓதுவேன். கடவுளை வேண்டுவதில் அடுத்த நாளைக்கு நடக்கப் போகிற நிகழ்ச்சிக்கான சிறு விண்ணப்பமும் இருக்கும். அது நாளுக்கு நாள் மாறிக்கொள்ளும். "நாளைக்கு மழை பெய்யக்கூடாது. நாளையான் மச்சிலை மகாஜானாவை வெல்லப் பண்ண வேணும்" எண்டி ருக்கும் , " அப்பாவை கொழும்பாலை கவனமா வரப்பண்ணவேணும்," எண்டிருக்கும். " அம்மாவை கெதியிலை சுகமாக்க வேணும்." "சின்ன மாமாவுக்கு வேலை கிடைக்க வேணும்." "நாளைக்கு பெனடிக் வாத்தி பள்ளிக்கூடம் வரக்கூடாது" எண்டெல்லாமிருக்கும். இந்தக் கடைசி விண்ணப்பத்தைக் கடவுள் ஒரு நாளும் ஏற்றதில்லை. "நாளைக்கு ஒரு வாத்திமாரும் எனக்கு அடிக்கக்கூடாது" என்று விண்ணப்பத்தை மாத்திப் பாத்தன். ம்கூம். கடவுள் விட்டுக் குடுக் கத் தயாராயில்லை. அம்மாளை மாத்திரம் கேட்டுப் பார்க்கலாம். மற்றக் கடவுள்மார் கோபிப்பினமோ எண்டு அதுக்கும் பயம். இந்த விச யத்திலை கடவுள் என்னைக் கடுமையா சோதிச்சார்.

இந்தப் பயத்திலைதான் நித்திரை தூங்கி தூங்கி எண்டாலும் வீட்டுப்பாடம் செய்யிறது. இதனா லும் ஞாயிற்றுக்கிழமை அதுவும் மத்தியானத்துக் குப் பிறகு மகிழ்வுப் பொழுதில்லை.

சனிக்கிழமைக்கு இன்னுமொண்டும் இருக்கு. சரவணமுத்தய்யாவின்ரை முழுக்கு. 'சனி நீராடு ' எண்டு நெடுகச் சொல்லுவார். என்ன தப்பினாலும் சனிக்கிழமை முழுக்கு தப்பிறேல்லை. சனி விடிய தன்ரை தோட்டத்து மரக்கறிகளை ஆய்ஞ்சு பெரிய சாக்கிலை உருட்டி, சைக்கிள் கரியரில் கட்டுவார். நாதனண்ணை றோட்டு மட்டும் சைக்கிளை பின்னாலை இருந்து தள்ளிக்கொண்டு போக , சரவண முத்தய்யா சந்தைக்குப் போவார். வரேக்கை திருக்கை, கணவாய், சுறா, அறக்குளா, பாரை இவற்றில் ஏதாவதொன்று வாங்கி வருவார். இது எதுவும் அம்பிடாட்டில் விளை, ஒட்டி, ஓரா, வாளை என்றாவதிருக்கும். இதுபோக வீட்டில் வேள்வி இறைச்சியோ, பங்கிறைச்சியோ இருக் கும். நினைத்தாப்போலை தன்ரை வீட்டு கொழுத்த சாவலையும் அடிப்பார். பத்து மணி போலை வீட்டை வந்தால், சைக்கிளை 'ஸ்ராண் டிலை' விட்டிட்டு, சாக்கையும் குசினிக்கை எறிஞ்சிட்டு வளவின்ரை மூலைக்குப் போவார். இரண்டு போத்தல் கள் நுரை ததும்பக் கிடக்கும். சின்னமணி வைத்திருப்பார். வந்த சுறுக்குக்கு சிரட்டை யிலை ஊத்தி அரைப் போத்தலை மடக்குவார். "சாமான் சங்கு" என்று தலையாடும். போய் சின்னக் கோவணம் ஒன்றைக் கட்டிக் கொண்டு முத்தத்திலை நிண்டு உடம்பு முழுக்க நல்லெண்ணெய் பூசித் தேய்ப்பார். தலையாலை எண்ணெய் ஒழுகும். கறுத்த உடம்பு பளபள வெண்டு மின்னும்.

போய் மிச்ச அரைப் போத்தலை சிரட்டையிலை ஊத்துவார். பிறகு வேப்பமரத்துக்குக் கீழே இருக் கிற வாங்கிலை படுத்தபடி கண்ணுக்கை எண் ணெய் விட்டு வாயையும் எண்ணெயாலை நிறைப் பர். கண்ணைத் திறந்தபடி, வாயை 'உப்' பெண்டு ஊதியபடி அரை மணித் தியாலப்படுக்கை. எண்ணெயைக் கொப்புளித்து, மெல்லிய சுடு தண்ணி யாலை வாயை அலம்பி, மிச்சம் இருக்கிற ஒரு போத்தல் கள்ளையும், சிரட்டையையும் கொண்டு வந்து வாங்கிலை குந்துவார். வேர்த்து வேர்த்து ஒழுகும். சோதியம்மா சிரட்டைக்கை உறைக்க உறைக்க இறைச்சிக்கறி அல்லது கண வாய்க்கறி கொண்டு வந்து வைப்பா. முறுகின மீன் பொரியலும் வைப்பா. கள்ளையும் குடித்து, ஒரு பக்கம் காறியும் துப்பி, கறியையும் சப்பி , கடும் வெய்யிலுக்கு கண்கள் மயங்கி இருப்பார். வேப்ப மர நிழலும் அது தரும் இதமான காற்றும், உடம் புக்குச் சொகுசாய் இருக்கும்.



சரவணமுத்தய்யாவைப் பொறுத்து முழுக்கு ஒரு வேள்விதான்.

அரப்பும், நாலைந்து தேசிக்காயும் சேர்த்து அவித்திருக்கும். ஆவி பறக்கும் தேசிக்காயைத் தலை உடம்பெல்லாம் தேய்த்துப் பூசுவார். சிறு அங்குலமும் தப்பாது. கொதிக்கிற அரப்போடை கிணத்துக் கட்டுக்குப் போனால் அரை மணித்தியாலமா தேயல் நடக்கும். சூடு பறக்கும். ஏதாவதொரு தோட்டத்துண்டுக்கு தண்ணி போறமாதிரி இறைத்துவிட்டு அதிலை தலையை வைப்பார். துண்டெடுத்து துடைக்கிற போதும் சூடு பறக்கும்......

வந்து அடுப்பிலை போட்டுச் சுட்ட உள்ளி தின்பார். இரண்டு மணி போலை சாப்பிடக் குந்துவார். இறைச்சிகறி, மீனிலை ஒரு பொரியல், முட்டை அவியல், வரகரிசி அல்லது சாமைச்சோறு, இறைச்சி எலும்பிலை பால் விட்டு வைத்த இரசம். மூண்டு கோப் பைக்கு குறைவில்லை. சுருட்டும் பத்திக்கொண்டு வேப்ப மரத்துக்குக் கீழை வாங்கிலை தேகத்தைச் சரித்து பின்னேரம் எழும்பினாரெண்டால் இஞ்சி போட்ட மல்லித் தண்ணி , அவ்வளவும்தான். சனிக்கிழமை யாகம் அத்துடன் நிறைவு பெறும்.

இவ்வளவு நாளும் உழைத்துக் களைத்த உடம்புக்கு ஒரு நாள் யாகம் இது.எல்லாச் சனியும் இது நடக்கும் என்றேனா? அல்ல, அது பொய். வருசத்தில் நாலு அல்லது அஞ்சு சனி இதற்கு விலக்குண்டு.

அது குளிரத் தொடங்குகிற காலம். கொடும் வெயில் குறைந்து, ஒண்டிரண்டு மழையும் பெய்து, மண்ணில் பச்சை பரவி, அறுகம்புல்லு படரத் துவங்கிற காலம். முற்காலத்தில் "நாவற்பழோம் ..." என்று குறுக்குக் கட்டுக்கட்டி, கிழவிகள் கத்திக் கொண்டு கறுத்த நாவற்பழங்களை விற்றுத் திரிந்த காலம். பிற்காலத் தில் கறுத்த முந்திரிகைப் பழங்கள் குலைகுலையாகத் திரண்டு றோட்டு வழிய மேசையில் குவிந்திருந்த காலம்.

பங்குனிக்குப் பரவு கள்ளெண்டும், சித்திரைக்குச் சிதறு கள்ளெண்டும், வைகாசி ஆனிக்கு அரிபனைக் கள்ளெண்டும், ஆடிக்கு காய் வெட்டிக் கள்ளெண்டும், ஆவணிக்கு அருந்தல் கள்ளெண்டும் ஆகி, பிறகு கள்ளும் துண்டற இல்லாமல் போய் முருகையாண்ணையும், சோமண்ணையும், சுந்தரண்ணையும் றோட்டு வழிய பாடிக் கொண்டு திரியமுடியாமல் முழுசிக் கொண்டு திரியிற காலம்.

உவர் சோதிக் குருக்கள், நாலைஞ்சு கோயில் பின்னேரப் பூசைகளை முடிச்சுக்கொண்டு பூணூலையும் நைசாக் கழட்டி மடியுக்கை செருகிக் கொண்டு பூசையிலை வைச்ச மோதகம் வடைகளை ரேஸ்றுக்காகக் கொண்டு போய், மற்றாக்களுக்கும் குடுத்து கள்ளில்லாததினால் கசிப்புக்காக செல்லப்பன்ரை படலை தடவின காலம்.

அப்பிடியெல்லாம், அதுபற்றியெல்லாம் யோசிக்க முடியாத பருவத்தில் அப்பா எங்களைத் தேடி வந்தார். சீனன் கலட்டியில் படிச்சுக் கொண்டிருக்கிறம். கொட்டு மழை பெய்யுது. அப்பா குடை பிடிச்சுக்கொண்டு வாறார். சூழல் பாடம் படிப்பிச்சுக் கொண்டிருக்கிற செல்லாச்சி வாத்தியார் அப்பாவைக் கண்டு "கொப்பர் வாறார்" எண்டார். நான் வெட்கத்துடன் சிரித்து கிறுகிறு வெண்டு புத்தகங்களை அடுக்கினன். மழை பெய்தால் அப்பா குடையைக் கொண்டு வருவார்தான். ஆனால் இவ்வளவு வேளைக்கு வாறேல்லை. 'ஏன் அப்பா?' என்று கேட்டேன். 'அம்மா வந்திட்டா...' எண்டார்.

கனநாள் அம்மா ஆஸ்பத்திரியிலை இருந்திட்டு வாறா. ஒருநாள் நானும் அக்காவும் ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாவைப் பாத்தம். ஆஸ்பத்திரிக்கு முன்னாலை தோடம்பழம் வாங்கிக்கொண்டு போனம். திரும்பி வரேக்கை நாவற்பழம் வாங்கினம். அம்மா சுகமா இப்ப வீட்டை வந்திருக்கிறா. ஆனால் அம்மாவாலை இனி எனக்கொரு தங்கச்சி தர ஏலாதாம். அம்மாவை ஓடிப்போய்ப் பாக்க வேணும் போலை இருந்தது. கோதாரி மழை பெய்யுது. அப்பாவின் பெரிய 'மான்மார்க்' குடைக்குள்ளை நானும் அக்காவும் ஒடுங்கிப் போய் போனம்.

அம்மா அறைக்கை கட்டில்லை படுத்திருந்தா. அம்மாவைக் கண்ட உடனை எனக்கு அழுகை வரேல்லை. வரப்பாத்துது . 'ராசா, பிள்ளை...' எண்டு எங்கன்ரை கையைப் பிடிச்சு கொஞ்சம் அழுதா. அம்மாவை ஆஸ்பத்திரியில் வைத்துப் பாத்த அம்மம்மாவும் வந்திருந்தா. சந்தோசமாக இருந்தது. தகரத்தில் அடித்து மழை கொட்டியது. பீலியால் தண்ணி ஊத்திண்டு ஒரு கோடு மாதிரி இறங்கி நிலத்தைக் கிண்டி ஓட்டையாக்கியது. பத்து நாளா அம்மா இல்லை. மத்தியானம் அப்பாவின்ரை சமையல். அதுதான் இரவைக்கும். குழம்பெண்டு 'ஓடாவாடாத்தண்ணி' வைப்பார். அதுக்கு சொதி தேவையில்லை . ஆனால் இருக்கும், பிறகு பருப்புக்கறி. மீன்குழம்புக்கு ஆரும் பருப்பு வைப்பி



னமே. இரவு வெறுமை தீர அப்பா காட்ஸ் அடிக்கப் பழக்கினார். எண்டாலும் அம்மாவின் ஞாபகம் வந்து வந்து போனது ........

எல்லாம் போய் இப்ப அம்மா வந்திட்டா. அதுவும் புரட்டாசிச் சனிக்கு அம்மா வந்திட்டா. அப்ப போயா, போயா முன்தினம் எண்டுதான் லீவு. சனி ஞாயிறு பள்ளிக்கூடம் நடக்கும். புரட்டாசிச் சனி எண்டால், அம்மாள் கோயில் திருவிழா எண்டால் கொஞ்சம் வேளைக்கு விடுவினம். இண்டைக்கு நாங்கள் இன்னும் வேளையோடை வந்திட்டம்.

புரட்டாசி சனிக்கு அப்பா சமைக்கிறார். ஏப்பையிலை மரக்கறிகளைக் கொண்டு அம்மாவின்ரை கையிலை விட்டு ருசிக்கக் குடுத்து 'சரியோ, சரியோ ' எண்டு கேட்கிறார். அம்மாவும் கொஞ்சம் உப்பு போடுங்கோ , 'இன்னும் புளி விடுங்கோ,' உறைப்புக் கூடிப் போச்சு, பாலை விடுங்கோ, வெங்காயத்தைத் தாளிச்சுப் போடுங்கோ எண்டு சொல்லச் சொல்ல அப்பாவும் சளைக்காமல் அத்தனையும் செய்கிறார். ஆனால் கருணைக்கிழங்குப் பிரட்டலை மாத்திரம் காணம். புரட்டாசிச் சனிக்கு எல்லாக் கறிகளோடையும் கட்டாயம் கருணைக் கிழங்குப் பிரட்டலும் இருக்கும். அது என்ன ருசி! மடத்தடி அத்தை கருணைக்கிழங்கிலை குழம்பு வைப்பா. காய்மாதிரி கடிபடும். அதையும் ஆரும் சாப்பிடுவினமே? அம்மா வைப்பா ஒரு பிரட்டல் கறி, காய் மாதிரிக் கடிப்படாது. அப்பிடியே மசிஞ்சு , கரைஞ்சு சோத்து டன் இணையும். நல்ல காலம். அம்மா இல்லாமல் அப்பா காய்ச்சினால் கருணைக்கிழங்கு காய் மாதிரிக் கடிபடும்.

ஆனால் இந்த அடை மழைக்கை காகங்களுக்கு எங்கை போறது?

ஆலம் இலை, அல்லது பலாவிலை எடுத்து, காய்ச்சின அத்தனை கறி, சோறு எல்லாம் வைச்சு நல்லெண்ணெயும் கொஞ்சம் விட்டு காகங்களுக்குப் படைச்சாப் பிறகுதானே நாங்கள் சாப்பிடவேணும். காகங்களும் மூதேசிக் காகங்கள்.ஏணி வைச்சு வீட்டுக்கு மேலே ஏறி சோத்தை வைப்பம். சனியன்கள் வெருண்டு கொண்டு நிக்குங்கள். பள்ளிக்கூடத்தாலை பணிசை சப்பிக்கொண்டு வரேக்கை பறந்த படியே பறிச்சுக்கொண்டோடுற சுறுக்கென்ன! இஞ்சை நல்ல சாப்பாடாப் படைச்சாலும் ஏமலாந்தி வெருண்டு கொண்டு நிக்குங்கள்.

புரட்டாசி சனிக்கு இந்த முறை நாங்கள் மூண்டு விசயத்தை விடப்போறம். கருணைக்கிழங்குப் பிரட்டல், காகங்களுக்குப் படையல், இரண்டையும் சொல்லிட்டன். மூண்டாவது விசயம் அம்மம்மா அவா தாற காசு. அந்தக் காசுக்கு வாங்கிற நாவல் பழம். நாவல் பழத்தைப் பாத்தால் முதலாம் வகுப்பிலை நாகம்மா வாத்தியார் பழக்கின சுட்டபழம் நாடகம் ஞாபகம் வரும்.

என்னை முருகனா நடிக்க விட்டுப் பாத்திச்சினம். மரத்திலை ஏற எனக்குப் பயம். அவ்வையாரா நடிக்க மங்களம் இருக்கு. பிறகு நாவற்பழம் பொறுக்கிற சின்னப் பிள்ளையளா நவராத்திரிப் பூசைக்கை நடிச்சம். நாகம்மா வாத்தியார் உண்மையான நாவல் பழத்தையே கொட்டினார். அது பொறுக்க, சிறீபாலன் முழங்கையாலை இடிச்சு இடுப்பிலை நோ.

புரட்டாசி சனிக்கு அம்மம்மா தந்த காசிலை நாவல் பழம் வாங்கி கீரிமலைக் கடற்கரை மணலிலை உருட்டிப் பாத்தன். மணல் ஒட்டிச்சுது. ஊதினன், மணல் பறந்தது. முருகனின் சுட்டபழம் அது. திண்டன், இனிப்பிலை வித்தியாசம், நான் தின்ன வேணும் எண்டிருந்த முருகனின் சுட்ட நாவற்பழம் திண்டிட்டன். இன்னும் மூண்டு கனி இருக்கு. "வாழையும் ஏழைப்புலவனும் " எண்ட கதையிலை வாற வாழைக்கனி, பிள்ளையார் பெற்ற மாங்கனி , அவ்வையார் உண்ட நெல்லிக்கனி . அதுகளுக்குச் "சான்சே " இல்லை. இந்த முறை சுட்ட நாவல் பழத்துக்குமே சான்ஸ் இல்லை. அம்மம்மா எங்கன்ரை வீட்டிலை நிக்கிறா.

அம்மம்மா கீரிமலையிலை நிண்டால் கடைசிச் சனிக்குக் கீரிமலைக்குப் போவம். கனக்கக் கடைகள் சிவன் கோயில்லை இருந்து கடக்கரைவரை முளைச்சிருக்கும். முதல் நாளிரவு நாங்கள் வந்திடுவம். சின்னமாமா கறுப்புத்துணிகளை அளவளவா வெட்டித்தர அதுக்குள்ளை எள்ளுப் போட்டு கறுப்பு நூலாலை பொட்டளி பொட்டளியாய் கட்டுவம். காலமை கடக்கரையிலை மேசை வைச்சிருப்பார். மேசையிலை சுட்டிகள், சுட்டிகளுக்கை எள்ளுப் பொட்டளிகள், போத்தல் மூடியிலை நல்லெண்ணெய் விட்டு சுட்டிக் குள் ஊத்துவம். பொட்டளி நல்லெண்ணெய்யிலை ஊறும். ஒரு சுட்டி இருவத்தைஞ்சு சதம். நல்லெண்ணெய் இன்னும் ஒரு மூடி விடவேணு மெண்டால் பத்துச்சதம். பெரிய சுட்டி அம்பது சதம். ஆகப் பெரிய சுட்டி ஒரு ரூபா. சின்னச் சுட்டி இரண்டு ரூபா. அதுக்குள்ளை பத்துப் பொட்டளியாவது இருக்கும். பிறகு அருச்சனைத் தட்டு வாழைப் பழம், கற்பூரம் எல்லாம் இருக்கு. விசயன் வீசுக் கோத்துப் பேணிக்கை கற்பூரம் அடுக்கி அதை ஆக்களுக்கை வித்துக்கொண்டு திரிவான். சாமான்களை விக்கிறதும், காசை வாங்கி லாச்சிக்கை எண்ணிப் போடுறதும், மிச்சக் காசைக் குடுக்கிறதும் ஒரு சந்தோசம்தான். அடிக் கடி லாச்சியைத் திறந்து எவ்வளவு காசிருக்கெண்டு எண்ணிப் பாப்பன்.

சின்னமாமாவின்ரை கடைக்குப் பக்கத்திலை அம்மம்மா அரப்பு அவிச்சு விப்பா. பெரிய சருவத்திலை ஐம்பதறுபது தேசிக்காய் களோடை அரப்பு அவிஞ்சபடி இருக்கும். ரின்பால் பேணிக்கை அவிச்ச அரப்பையும் விட்டு ஒரு தேசிக்காயையும் போட்டுக் குடுப்பா. இருபத்தைஞ்சு சதம் தேச்சு முழுகுறதுக்கு ஒரு மூடி நல்லெண்ணெயும் கொடுத்தால் இன்னும் பத்துச் சதம்.

வருசம் முழுக்க அம்மம்மா கீரிமலையிலை உள்ள தேத்தண்ணிக் கடைகளிலை எறியிற ரின்பால் பேணிகளைப் பொறுக்கிச் சேமிச்சு வைச்சிருப்பா. கடக்கரைக் காத்துக்கு அது கறள் பிடிக்கும். அதுக்காக எண்ணெய் பூசுவா. காத்துப் படாமல் சாக்குக்கை மூடி வைச்சிருப்பா. அரப்பு அள்ளிக் குடுக்க அது உதவும். பேணிகள் முடிய மோனை பேணிகளைப் பொறுக்கிக் கொண்டு வா ராசா..... என்பா. அரப்புத் தேய்த்து விட்டு எறியிற பேணிகளை பொறுக்கிக்கொண்டு வருவன் ஆரும் அரப்பு தேய்ச்சுக் கொண்டு நிண்டால் எப்ப முடியும் எண்டு பக்கத்திலை நிப்பன். எங்கையோ இருந்து விசயனும் ஓடி வருவான். எல்லாத்திலையும் விரோதி விசயன்தான். சின்னமாமாவின்ரை கடைக்கு முன்னாலை நிண்டு கற்பூரம் வித்துக்கொண்டு பேணிகளும் பொறுக்கிறான். சின்னகப் பேத்திக்கு அல்லாட்டில் ஐயாம்மாவுக்கு அதைக் கொண்டு போய் விக்கிறான். எல்லாத்தையும் காசாக்க அவனுக்கு எப்பிடித் தெரியுதோ? எல்லாம் முடிய அம்மம்மா இருபத்தைஞ்சு சதமும், சின்னமாமா அம்பது சதமும் தருவினம்.

அது இல்லாமல் போச்சுது இந்தப் புரட்டாசி சனிக்கு. நாவல் பழம் இல்லாமல் போச்சுது. ஐஸ்பழம் இல்லாமல் போச்சுது. கருணைக்கிழங்குப் பிரட்டல் கறி இல்லாமல் போச்சுது. காகங்கள் இல்லாமல் போச்சுது. இனித் தங்கச்சி கிடைக்கும் எண்ட நம்பிக்கை யும் இல்லாமல் போச்சு. இந்தப் புரட்டாசிச் சனிக்கு , மழை மாத்திரம் அடிச்சு

(மறுபக்கம்)



# வடலிகள்...



ஊத்துது. கனநாளைக்குப் பிறகு அம்மாவும் எங்களோடை இருந்து சாப்பிட்டா. சாப்பாடு ருசியோ இல்லையோ அம்மாவோடை சாப்பிட்டது ருசி. அம்மா எனக்கொரு வாய் தீத்தி விட்டா. அம்மா எனக்குச் சோறு தந்தா, தங்கச்சி தரமாட்டாவாம். பராபரனுக்குப் பரிதினி இருக்கு. சூட்டிக்கு நந்தினி இருக்கு. வசந்தனுக்கு வசந்தி இருக்கு. எனக்கு மாத்திரம் ஒரு தங்கச்சி இல்லை . ஆனால் இந்த மழை மாத்திரம் நல்லாப் பெய்யுது.

அப்பிடி ஒரு மழை கொட்டின புரட்டாசி சனி ஒண்டு வந்தது.

கருணைக்கிழங்குப் பிரட்டல் கறி இருந்தது. காகங்கள் இல்லாமல் போனதுக்கு மழை மாத்திரம் காரணம் இல்லை. ஏனெண்டால் மழை மத்தியானத்துக்குச் சற்று முன்பாகவே நின்றுவிட்டது. தாராளமாகக் காகங்கள் வரலாம். அம்மா கா ...... கா...' எண்டு கத்திப் பாத்தா. அப்பா துலாவிலை ஏறி காகங்களுக்குச் சாப்பாடு வைச்சார். ஒண்டுக்கும் காகங்கள் மசியேல்லை. காகங்களுக்கு எப்பிடித் தெரிஞ்சுது அது? நான் தானே அதைக் கண்டனான். நான் அதை ஒருத்தருக்கும் சொல்லேல்லை. ஆனால் உங்களுக்குச் சொல்ல வேணும்.

எழுத்திநாலாம் ஆண்டு. புரட்டாசிச் சனி. அண்டைக்கு பிரதம மந்திரி சிறீமா பலாலி விமான நிலையத்திலை வந்திறங்கிறா. யாழ்ப் பாணத்திலை பல்கலைக்கழகம் திறக்கப் போறாவாம். படிச்ச ஆக்களுக்கும், மேலை மேலை படிக்க விரும்பிற ஆக்களுக்கும்தானே உந்தப் பல்கலைக்கழகம். எனக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்? ஆனால் எங்கன்ரை இடத்துக்கு சிறீமாவாறாள்.

நாங்கள் ஒண்டையும் மறக்கேல்லை. தமிழாராய்ச்சி மாநட்டிலை நாங்கள் செத்ததை மறக்கேல்லை. தமிழ் பொடியங்களை எங்கன்ரை அண்ணைமாரை 'தமிழ்' எண்டு கதைச்சதுக்காக சிறையிலை போட்டு சித்திரவதைப்படுத்தினதை மறக்கேல்லை . றேடியோவிலை 'தமிழ்' எண்டு ஒரு சொல் பாட்டிலை வரக்கூடாது. வந்தால் பாட்டு வராது. இதையொண்டையும் மறக்கேல்லை. எங்கன்ரை சிவகுமாரனை சாக்காட்டினவள். அதையும் மறக்கேல்லை. தமிழ் எண்டால் எவ்வளவு ஆய்க்கினைப்படுத்தினவள். இப்ப ஏன் இஞ்சை வாறாள்? ஆருக்கும் ஆத்திரம் வரும்தானே? ஆத்திரம் வராமல் பந்தம் பிடிக்கிற கொஞ்சச் சனங்களும் இருந்துதுகள். அவையள் சிறீமாவை வரவேற்க எண்டு வெளிக்கிட்டினம். சங்கக்கடை லொறிகளிலை கூட்டம் கூட்டமா அவையள் போச்சினம். அதுதானே எங்கன்ரை கவிஞர்காசி ஆனந்தன் அப்பவே பாடினவர். "வெங்காயம் ஏத்திற சங்கக்கடை லொறி களிலை வெங்காயங்கள் ஏறிப்போகுது " எண்டு. பண்டத்தரிப்பு , சங்கானை, மானிப்பாய், காரைநகர், சங்கக்கடை லொறிகளெல்லாம் எங்கன்ரை றோட்டாலை பலாலிக்கு சிறீமாவை வரவேற்க ஆக்களை ஏத்திக்கொண்டு போகுதுகள்......

வீட்டுக்குப் பக்கத்திலை தஞ்சிட்டி முந்தல். டச்சு றோட்டு வந்து, எங்கன்ரை றோட்டிலை ஏறிற முச்சந்தி அது. முந்தலிலை ஆனந்தண்ணை நிக்கிறார். நான் கிட்டப்போனன். ஆனந்தண்ணையின்ரை சண்டிக்கட்டுக்கை பெரிசா , பாரமா ஏதோ சாமான்கள். "என்னண்ணை ," எண்டு கேட்டன். "ஓடுறா வீட்டை '' என்று கலைத்தார். ஏதோ நடக்கப் போகுதெண்டு தெரிஞ்சுது. நான் வீட்டை வந்திட்டன்.

கொஞ்ச நேரம்தான். ஒரு லொறி றோட்டாலை போய்ச்சுது. சடார் பிடாரெண்டு பலத்த சத்தம். ஓடிப்போய் பாத்தன். டச்சு றோட்டலை ஆனந்தண்ணை சைக்கிள்ளை பறக்கிறார். லொறி ஒண்டு பனை மரத்திலை அடிபட்டு நிக்குது. லொறிக்குள்ளை சனங்கள் "ஐயோ, ஐயோ" எண்டு குழறுதுகள். உவையளுக்கு உது வேணும். ஓடிப் போய் முன்பக்கம் பாத்தன். லொறிக்கு முன்னாலை பெரிய கல்லொண்டும், கண்ணாடிகள் சிதறியும் கிடக்கு. முன்னுக்கிருந்த றைவர் மற்ற ஆக்களுக்கு காயம். றைவர் கண்ணையும், நெற்றியையும் பொத்தியும் இரத்தம் ஊத்திண்டுது. அப்பா வந்து என்னை வீட்டை போகச் சொல்லிக் கலைச்சார். அப்பாவிலை கோவம் கோவமா வருது. விடுப்புப்பாக்க என்னை விடுறாரில்லை. ஆனால் அவர் மாத்திரம் விடுப்புப் பாக்கிறார்.

நான் வீட்டை போனன். விரதத்துக்கான அம்மாவின் சமையல், கிணத்தடியிலை அக்காவின் தோயல். அப்பிடியே சுத்தி விட்டு நைசாக பின்வளத்தாலை தஞ்சிட்டி முந்தலுக்கு வந்தன். பொலிஸ் ஜீப் நிக்குது. சனங்களெல்லாம் இறங்கி நிக்கினம். பொலிஸ்காரர் லொறியைச் சுத்தி சுத்தி வரீனம். திடீரென லொறிக்கு மேலே ஏதோ விழுந்தது. பொலிஸ்காரர் திடுக்கிட்டினமோ, பயந்தினமோ தெரியாது. அலமலந்து போச்சினம். பாத்தால் அது பனம்பழம் . எனக்குச் சிரிப்பாயும் வந்தது. முழுசிக் கொண்டிருக்கிற மாதிரி நிண்டன். பொலிஸ்காரர் நிக்கிற ஆக்களிட்டையும், கண்ணன் கடையிலையும் ஆர் கல்லெறிஞ்சது எண்டு தெரியுமோ? எண்டு கேட்டிச்சினம். ஒருத்தரும் ஒண்டும் சொல்லேல்லை. எனக்கு உள்ளை ஒரு குறு குறுப்பு . நான் அந்த வீரனைக் கண்டேன். அந்த சாகசச் செயலைப் பார்த்தேன். வடலிகள் வளர்ந்துவிட்டன. வயிரம் பாய்ந்து விட்டது.

எனக்கு ஆனந்தண்ணையின்ரை குணத்தைத் தெரியும். கல்லெறிந்த அவரது கைகள் இப்ப நடுங்கிக் கொண்டிருக்காது. மனசு படபடக்காது. நான் நம்புறன். லொறி றைவரின் கண்ணைக் குறி பார்த்து கல்லெறிந்த அவரது கைகள், காகங்களுக்குச் சாப்பாடு படைச் சிருக்கும். விரதச்சோறை ஆற அமர குழைச்சுத் தின்னச் செய்திருக்கும். மேலும் சிறீமாவை வரவேற்கப் போனோரின் கன்னங்கள் பறக்க அவரது கைகள் வெளுத்து விட்டன .........

பிறகு பிறகு புரட்டாசி சனிக்கும், எனக்கும், மழைக்குமான தொடர்புகள் குறைந்துகொண்டு போயின. எனக்கு ஏழரைச் சனி, அட்டமத்துச் சனி எண்டு அடிக்கடி வந்தது. எனக்கெண்டில்லை. ஊரிலை எல்லாருக்கும் வந்தது. எங்கள் ஊரிற்குள் எல்லாச் சனிகளும் புகுந்துவிட்டன. ஹெலி சுட்டது. பொம்பர் சுற்றியது. ஷெல்கள் விழுந்தன. இராணுவம் சுற்றி வளைத்தது. சுட்டுக் கொன்றது.

நான் படிப்பெண்டும், வேறு வேலை எண்டும் வீடு விட்டுக் கிளம்பினேன். அம்மா ஊட்டிய அமுதம் எல்லாம் அற்றுப்போயிற்று. அப்பா தந்த கருணை எல்லாம் காணாமல் போயிற்று. என் முதுகு வெய்யில் தாங்கி முதுகுப்பக்கச் சேட் வெளிறிப் போச்சு. என் தலை மழை சுமந்து நெஞ்சில் சளி கூடுகட்டி நிலைச்சுப் போயிற்று.

ஒரு புரட்டாசிச் சனி.

நான் வீட்டை நிண்டன். அம்மா விரதம் பிடிக்கச் சொல்லி வில்லங்கப்படுத்தினா. "உனக்கு இப்ப ஏழரைச் சனி நடக்குது " எண்டா . எனக்கு எழுபதரைச் சனி இருந்தாலும் அதுக்கு அஞ்சுகிற காலம் போய்விட்டது. ஆயினும் அம்மாவுக்காக விரதம் இருந்தேன். அதுவுமல்லாது எனக்கே விரதம் பிடிக்க ஆசையா இருந்தது. எவ்வளவு காலத்துக்குப் பிறகு கிணற்றடியில் ஒரு முழுக்கு. அம்மாவின் கையால் மரக்கறிச் சாப்பாடு. முக்கியமா கருணைக் கிழங்கு பிரட்டல். "அம்மா எனக்குக் கருணைக் கிழங்குப் பிரட்டல் கறி கட்டாயம் வேணும்" " அதுதான் ராசா வாங்கி வைச்சிருக்கிறன்."

முழுக்கு முடிய "கா ...... கா..." என்று கத்தி, காகத்தைத் தேடினன். காகங்கள் பறந்து , கீழே வராமல் உண்ணாவிரதமிருந்தபடி இருந்தன. எங்கள் கத்தல்களுக்கு மேலாக, மெதுவாய் ஓடிய ஒரு காரில் "லவுட்ஸ்பீக்கர் " மிருதுவான இசையைப் பரப்பியவாறு மென்மை யான குரலில்.

''........ கோரிக்கைகளை முன்வைத்து, நீர்கூட அருந்தாமல் சாகும் வரை உண்ணாவிரதமிருந்த எங்கள் அரசியல் துறைப் பொறுப்பாளர், தியாகச் செம்மல் திலீபன் அவர்கள் இன்று காலை ......"

பிறகு பிறகு கருணைக் கிழங்குப் பிரட்டலோ, காகத்தின் கரையலோ எதுவும் இல்லாது, எனக்கும் புரட்டாசி சனிக்கும் இடையே உள்ள உறவு மிக நீண்டு போயிற்று ........

*( நன்றி: காலம் ஆகி வந்த கதை)*



## பெரும் தியாகத்தின் பேராற்றல்...

எமது அடையாளங்கள்
பதியும் வண்ணம்
நீளத் தொடர்கின்றது
பார்த்தீபன் தியாகம்,

தமிழர் வாழ்வழித்த
பெரும் சக்தியுடன்
பசியாயுதம் கொண்டு
படைநடத்திய திலீபம்
எமக்குள்ளே இன்னும்
வலிமை பெற்று நிமிர்கின்றான்,

விடுதலை தேடிய
ஊர்களில் அவன்
இன்னும் விழித்து நிற்கிறான்,

வேட்டையாடப்படும்
நிலங்களில் அவன்
வேட்கை பேசத்தொடங்கி
எஞ்சியிருக்கும் எமக்காக
வீரியம் பெற்று நிமிர்கின்றது,
தவிக்கும் விழிகளுடன்
இந்த தேசம் சுதந்திரம்
எப்போது பெறும் என்ற
ஏக்கம் உன்னை மெல்ல
மெல்ல தீண்டுவதை
காணமுடிகின்றது,

நகரமுடியாது இருக்கும்
எமது இருப்புகளில்
உங்கள் தியாகம்
ஓர் நாள் நிகழ்த்திக்காட்டும்
புதிய சரித்திரத்தை ,

ஆயினும்
நெருப்பாய் தகிக்கும்
எம் கிழிந்து போன
உரிமைகள் உன் தியாகத்தின்
முன் மண்டியிடுகின்றன,
எதுவும் செய்யமுடியாமல்,

ஆனால்
நிலத்தை விழுங்கும்
முதலைகள் இன்று
மெல்ல மெல்ல
உணருகின்றன
பெரும் தியாகத்தின்
பேராற்றலை,
அது போதும்
திலீபா....

ஒளியற்று கிடக்கும்
தேசத்தின் வெளியில்
நாம் வெளிபட்டு எழுவோம்
ஓர்நாள் ,

தே(ச)ப்பிரியன்
கிளிநொச்சி




# ரணகளத்திலும் ஒரு கிளுகிளுப்பு....

தெற்கு அரசியலில் மையங்கொண்ட '20' எனும் புயல் தற்போது சூறாவளியாக மாறியுள்ளது. இதனால் 'அரசியல் பேரிடர்கள்' ஏற்படக்கூடும் என எதிர்வுக்கூறப் பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படும் நெருக்கடிகளை சவால்களை எதிர்கொள்வதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கிடையில் 'அரசியல் இடப்பெயர்வுகளும்' (கட்சிதாவல்கள்) அரங்கேறும் என எதிர்ப்பார்க்கப்படுவ தால் அடுத்துவரும் நாட்களில் தேசிய அரசியலில் பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் பஞ்சமிருக்காது என்பது உறுதி.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைபு எவ்வித திருத்தங்களுமின்றி கடந்த 22ஆம் திகதி கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆளுங் கட்சியிலுள்ள சிலரும் '20' இல் உள்ள ஓரிரு சரத்துகளுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியதால் அரச உயர்பீடத்துக்கு தலையிடி ஏற்பட்டது.

இதனால் '20' ஆவது திருத்தச்சட்டவரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முதல்நாள் அதாவது 21 ஆம் திகதி அவசர அவசரமாக அமைச்சரவைக் கூட்டத் தையும், ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தையும் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. முதலில் அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்றது. இதன்போது 20 தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. தேவையான திருத்தங்களை குழுநிலை விவாதத்தின்போது மேற்கொள்ளலாம் எனவும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளி யான பின்னர் '20' இல் கைவைப்பதே சிறப்பு எனவும் முடிவெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் ஆளுங்கட்சி குழுக்கூட்டம் நடைபெற்றது. அமைச்சரவைக் கூட் டத்தில் பங்கேற்ற களைப்போடு வந்த அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் கைகளில் 'கேக்' காணப்பட்டது.

அட, என்ன விசேசமாக இருக்கும் என எம்.பிக்கள் மனதுக்குள் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கையில், மச்சான் 'ஹப்பி போர்த்தே' என மஹிந்தானந்த உள்ளிட்ட அமைச்சர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். அதன்பின்னர் , ரணகளத்திலும் ஒரு கிளு கிளுப்பு என்பதுபோல அமைச்சர் ரோகிதவின் பிறந்தநாள் கொண்டாட்டம் இடம்பெற்றது.

அதேவேளை, '20' தொடர்பில் மற்றுமொரு தகவலும் உள்ளது. அதாவது 20 ஐ எதிர்க்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பஸிலுக்கு எதிரானவர்கள் என்ற விம்பம் உருவாக்கப்பட்டு வருகின்றது, அதில் எவ்வித உண்மையும் இல்லை என சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் அமைச்சரவையிலும், ஆளுங்கட்சி கூட்டத்திலும் குறிப் பிட்டதாகத் தகவல்.

## மொட்டுடன் சங்கமம்



கட்சித் தாவலுக்குப் பேர் போன பிரபல வர்த்தகரும், இலங்கை தொழில் கட்சியின் தலை வருமான ஏ.எஸ்.பி. லியனகே விரை வில் மொட்டு கட்சியுடன் சங்கமிக் கவுள்ளார் என தகவல் வெளியாகி யுள்ளது. ராஜபக்சக்களுக்கு நெருக்க மானவரான லியனகே, 2015ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த மண்கவ்விய பின்னர், தனது 'பீகொக்' மாளிகையைக்கூட மஹிந்தவுக்காக வழங்கு வ தற்கு முன்வந்திருந்தார். எனினும், காலப் போக்கில் மைத்திரியுடன் சங்கமித்து வெளிநாட்டு தூதுவர் பதவியொன்றை யும் பெற்றுக்கொண்டார்.

அவ்வப்போது 'சமாளிப்பு அரசியலுக் காக' ராஜபக்சக்களை விமர்சித்தாலும் மனதுக்குள் மரியாதையை தக்கவைத் துக்கொண்டி ருந்தார். மஹிந்தவின் மகன் கட் டார் சென்றிருந்தவேளை, விமானநிலையத்துக்கே சென்று வரவேற்பளித்து சர்ச்சையிலும் சிக்கி னார். கடைசியாக நடைபெற்ற பொதுத்தேர்த லில் ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத் தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் போட்டி யிட்டார். ஆனால் அவரின் கட்சி நுவரெலியா வில் தனித்து களமிறங்கியிருந்தது. தமிழ் வாக்கு களை சிதறடிப்பதற்கான உபாயமே இதுவென வும் விமர்சிக்கப் பட்டது.

தற்போது தேர்தல் முடிவடைந்துவிட்டதால் மொட்டு கட்சியிடம் சரணடைவதற்கு ஏ.எஸ். பி. லியனகே தயாராகிவிட்டதாகவும், இதற்காக தூதனுப்பியுள்ளார் எனவும் தகவல் வெளியாகி யுள்ளது. அத்துடன், மைத்திரிக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மெஹான் லால் கிரேரும் மொட்டு கட்சியுடன் விரைவில் இணை யவுள்ளார்.

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## நான்காம் மாடியில் அங்கஜன்

கொழும்பு, மருதானையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் தலைமையகக் கட்டடத்தின் நான்காம் மாடியில் விசேட அலுவலகமொன்று அமைக்கப்பட் டுவருகின்றதாம். எதற்காக இந்தத் திடீர் ஏற்பாடு என அலுவலகத்தில் பணிபுரியும் சிரேஷ்ட அதிகாரிகள் சிலர், கட்சி பிரமுகர்களிடம் வினவியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்போது மறுசீரமைக்கப் பட்டுவரும் சூழ்நிலையில் கட்சிக்கான வெளிவிவகா ரப் பிரிவும் புதுப்பிக்கப்படவுள்ளது.

கடந்தகாலங்களில் வெளிவிவகார பிரிவு உரியவகை யில் இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக் கின்றது.

இவ்வாறு அமைக்கப்படும் வெளிவிவகாரப்பிரிவுக்கு பொறுப்பாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராம நாதன் நியமிக்கப்படவுள்ளார் என சுதந்திரக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.


## ஹிருணிக்காவுக்கும் வலை?



அரசியல் கவர்ச்சிக்கன்னி ஹிருணிக்கா பிரேமச் சந்திரவையும் மொட்டு கட்சி குறிவைத்துள்ளது என அரசல் புரசலாக கதை அடிபடுகின்றது. ஹிருணிக்காவின் தந்தை சுதந்திரக்கட்சியின் வெற்றிக்காக உழைத்தவர், கொலன்னாவையில் ஐ.தே.க. ஆதிக்கத்துக்கு முடிவு கட்டியவர். மஹிந்தவின் தொழிற்சங்க ஆலோசகராகவும் செயற்பட்டவர்.

இறுதியில் அரசியல் மோதலால் சுட்டுப்படு கொலை செய்யப்பட்டார். அவருக்கு கௌரவ மளிக்கும் முகமாக ஹிருணிக்காவை உள்வாங்க வேண்டும் என சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது. அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணித் தால் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகிவி டும் என்பதால் 'பகைமை' மறந்து ராஜபக்சக்க ளுடன் அரசியல் உறவாடுமாறு ஹிருணிக்கா வுக்கு அவருக்கு நெருக்கமானவர்கள் ஆலோ சனை வழங்கியுள்ளதாகவும் தகவல். மேல்மா காண முதலமைச்சர் என்ற ஆசையும் ஹிருணிக் காவின் மனதில் விதைக்கப்பட்டுள்ளதாம். எது எப்படியிருந்தாலும் இதுபற்றி இன்னமும் அதி காரப்பூர்வமாக எவ்வித தகவலும் வெளியாக வில்லை. ராஜபக்ச அரசாங்கத்தை கடுமையாக விளாசித்தள்ளும் ஹிரு, அவர்களுடன் எப்படிச் சங்கமிப்பார் என்ற வாதமும் எழுந்துள்ளது.

## வடக்கே வரும் பாகு



தென்னிலங்கையின் மூத்த இடதுசாரித் தலைவர்களுள் ஒருவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, தமிழர் விவகாரத்தில் அன்று எப்படியோ இன்றும் அப்படியேதான் என கூறுமளவுக்கு கொள்கை மாறாது அரசியல் நடத்துகின்றார்.

எங்கு அநீதி அரங்கேறினாலும், எவராவது அடக்கி ஒடுக்கப்பட்டாலும் அங்கு நீதியின் குரலாக வந்து நிற்பார். அவருக்கென தனிக்கட்சியொன்று இருந்தாலும் அக்கட்சிக்கு வாக்கு வங்கியில்லை. மேல் மாகாணசபைக்கு மாத்திரமே அவர் தெரிவானார்.

இறுதியாக மாநகரசபை உறுப்பினராகப் பதவி வகித்தார். கடைசியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் களுத்துறை மாவட்டத்தில் களமி றங்கினார். ஆனாலும் வெற்றிபெறவில்லை. தமிழர்களுக்காக குரல் எழுப்பியதால்தான் தெற்கிலுள்ள சிங்கள, பௌத்த மக்களால் பாகு நிராகரிக்கப்படுகின்றார் என அவருக்கு நெருக்கமானவர்கள் கருத்து வெளியிட்டு வந்தனர். ஆனால் விரைவில் மாகாணசபைத் தேர்தலொன்று நடைபெறும்பட்சத்தில் வடக்கில் போட்டியிடும் எண்ணம் விக்கிரமபாகுவுக்கு இருப்பதாகவும், தமிழ்க்கட்சிகள் பச்சைக்கொடி காட்டினால் அவர் நிச்சயம் களமிறங்குவார் எனவும் பாகுவின் சகா ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

நாவல்பழக் கடகத்தை தலையில் சுமந்துகொண்டு நாகமணியக்கா நடக்கும் போது அவளது இடுப்பும் பிருஷ்டத் தசைகளும் அசையும் வாகினை காண பலரது கண்கள் காத்துக்கிடந்தன.

# நாவல்பழக்கார நாகமணியக்கா

இராகன்



கிராமத்து மனிதர்கள்... 15

கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்டு வருகின்றது.

தலையிலே பொருள்களைச் சுமந்து திரிந்து விற்றுச் சீவியம் நடத்துகின்ற பலர் இருக்கி றார்கள். இன்றைக்கு படுக்கை விரிப்புகள், நிலவிரிப்புகளை கோபுரம் போல அடுக்கி வைத்து தலையிலே ஏற்றிவைத்து வீடுவீடாகக் கொண்டு திரிந்து விற்பவர்கள் எல்லாம் பிரதான ஒரு முதலாளியின் கூலியாட்களாகவே ஆங் காங்கே இறக்கி விடப்படுகின்றனர். கால் கடுக்க, தலை வலிக்க சுமந்து சென்று விற்கும் ஒவ்வொரு 'பீஸ்"களுக்கு ஏற்ப அவர்களுக்கு 'கொமிஷன்' கிடைக் கும். ஒரு காலத்தில் 'பழைய கோட்' வியாபாரிகள் ஊரின் மூலை முடுக்குகளிலெல்லாம் 'மணிக்கடைச் சாமான்கள்' விற்றுத் திரிந் தார்கள். இன்று 'பான்ஸிக் கடை கள்' என்று சொல்லப் படுபவைதான் அன்று 'மணிக்கடைகள்'. பான் ஸிக் கடை ஒன்றை தலை யில் தூக்கி வருவது போல 'பழைய கோட்' வியாபாரிகள் கூவி விற்றபடி வருவார் கள். பழைய பட்டுச் சேலைகளின் சரிகைக ளைக் கொடுத்து சில் வர், அலுமினியப் பாத் திரங்களை வாங்குவதில் ஊர்ப் பெண்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள். தலை யில் சுமந்து தோசை, இடியப்பம் போன்ற பலகாரம் விற்பவர்கள், தலை யில் சுமந்து மீன் வியாபாரம் செய்யும் பெண் கள், தலையில் சுமந்து நல்லெண்ணெய் விற்பவர் கள் என்று நீளும் பட்டியலில் 'நாவல்பழக்கார நாகமணியக்காவும்" அடங்கியிருந்தார். புரட் டாதி மாதம் தொடங்கிவிட்டால் போதும் நாக மணியக்கா தலையில் பெட்டி சுமக்கத் தொடங் கிவிடுவாள். நாவல் மரங்கள் காய்க்கத் தொடங்கி விடும். நாகமணியக்கா அழகி. நல்ல நிறம். 'பண்' கொண்டை போட்டிருப்பாள். நெற்றியில் கொலு விருக்கும் ஒரு ரூபாக் குத்தியளவு குங்குமப் பொட்டு. மஞ்சள் பொடிபூசிப் பழுத்த முகம். மூக்கின் இரு புறங்களிலும் மின்னி ஜொலிக்கும் கில்லிட்டு மூக் குத்தி. வாய் குதப்பிச் சிவந்த வெற்றிலையின் சாறு ஊறிக் கொவ்வையான உதடுகள். வேகமாக நடப் பதற்கு வசதியாக முழங்காலுக்கும் கணுக்காலுக் கும் இடையே உயர்ந்து நிற்குமாறு உடுத்தப்பட்ட சேலை. சேலைக்குச் சற்றேனும் பொருத்தமில் லாத மேற்சட்டை. கழுத்தில் மஞ்சள் தாலி நூல். கையில் சுற்றிய கௌரி விரதக் காப்பில் செருகி வைத்த மஞ்சள் பூ. நாகமணியக்காவின் அழகு கண்ணைவிட்டு நீங்காத கொள்ளையழகு. நாவல் பழக் 'கடகத்தை" தலையில் சுமந்துகொண்டு நாகமணியக்கா நடக்கும்போது அவளது இடுப் பும் பிருஷ்டத் தசைகளும் அசையும் வாகினைக் காண பலரது கண்கள் காத்துக்கிடந்தன.

நாகமணியக்கா பேசும் நளினம் ததும்பும் முரட் டுத் தமிழைக் கேட்க இளவட்டங்கள் சூழ்ந்து கொள்வர். தன் வயதோட்டைக்காரிகளுடன் நாமணியக்கா பேசும்போது வரும் தூஷணை வார்த்தைகளை கேட்டு 'வீக்கோ வர்ஜதந்தி" விளம்பரச் சிரிப்புச் சிரிப்பார்கள் பெண்கள். பள் ளிக்கூட வாயிலில் நாகமணியக்காவின் வியாபா ரத்துக்குப் போட்டியாக பலர் இருப்பர். கச்சான் கார சின்னத்தங்கம்,'தும்பு மிட்டாஸ்" துரையப்பு, 'பம்பாநைஸ்" கோவிந்தி, ஐஸ்பழக்கார சண்முகம் என்று கடைவிரித்திருப்பவர்கள் பலர். தும்புமிட்டாஸ், பம்பாநைஸ், ஐஸ்பழம் எல்லா வற்றையும் கடந்து நாகமணியக்காவின் நாவல் பழத்துக்குப் பிள்ளைகளிடம் இருந்த கிராக்கி அதிகம். நாகமணியக்காவின் அரவணைக்கும் பேச் சும், நாவல் பழத்தை மிருதுவாக அவள் கையாளும் விதமும்தான் அந்த வசீகரத்துக்குக் காரணம். கட கத்தினுள் மொழுமொழுவென்று கருமணியாக மின்னும் நாவல் பழத்தை குழந்தையை வருடுவ துபோல கைகளால் மிருதுவாக வருடி அள்ளி, ஆலம் இலையை, கோலி எடுத்து, அதனுள் பவ் வியமாய் போட்டு, பிள்ளைகளின் கையை அரவ ணைப்போடு பிடித்து, நாவல்பழம் சிந்தாதவாறு உள்ளங் கைளை விரித்து 'கவனம் ராசா", 'கவனம் அம்மாச்சி" என்று சொல்லி வைத்துவிட்டு வாயின் வெற்றிலைச் சிவப்புத் தெரி யச் சிரிக்கும் நாகமணியக்கா வின் அழகு பிள்ளைகளின் கண்ணை விட்டு அகலாது. இளவட்டங்களோடு அவர்க ளுக்கு ஏற்றபடி பேசுவாள் நாகம ணியக்கா. 'பொடியா சுட்டப ழம் வேணுமா? சுடாதபழம் வேணுமா?" என்று கேட்பார். பழத்தைக் காகிதத்தால் ஒட் டிய பையில் போட்டுக் கொடுத்தால் சுட்டபழம்! ஆலம் இலை கோலி கையிலேயே கொடுத்தால் சுடாதபழம்!

நாகமணி ஓர் அளவுப் பேணி வைத்திருப்பாள். 'மில்க் மெயிட்" பால் பேணி மக்கள் வாழ்வில் ஓர் அளவு கருவியாக எப்படியானது? என்று நாகம ணிக்கும் தெரியாது. ஒரு கொத்து அரிசி என்றால் நான்கு 'மில்க்மெயிட்" பால் பேணி அளவு என் றானது! ஒரு 'மில்க்மெயிட்" பேணியளவு ஒரு 'சுண்டு". ஒரு சுண்டு நாவல் பழம் ஐந்து ரூபா.

நாகமணியக்காவின் பள்ளிக்கூட வாசல் வியாபா ரத்தில் இப்படி ஓர் அன்பு கலந்திருக்கும். நாகம ணியக்காவுக்கு பிள்ளைகள் இல்லை என்று ஒரு கதையிருந்தது. நாகமணியக்கா புரட்டாதி மாதத் துக்கு முன்னுள்ள காலத்திலும், கடகம் தான் சுமப் பாள். அதே விபூதி, குங்கும ஆசாரத்துடன் அவள் மீன் வியாபாரம் செய்யும்போது மீனே சைவமாக மாறிப்போகும்! தலையிலே மீன் சுமந்து வீடுவீடா கக் கொண்டு வருவாள். கடகத்துள் மீன். கட கத்தை நிலத்தில் இறக்கி வைக்கும்போது மண் ணில் படாதவாறு வட்டமாக இழைக்கப்பட்ட தட்டு ஒன்று. கடகத்தின் வாயை மூடிவைக்க அதேவகைத் தட்டு ஒன்று. தலையில் சுமை தாக் காதவாறு துணியால் சுற்றப்பட்ட திரியணை. கீளி, கும்பிளா, பாரை, முரல் என்று நடுத்தர அயிற் றங்களும் சூடை, காரல், கூனி என்று சிறிய அயிற் றங்களும் தான் நாகமணியின் கடகத்தில் இருக்கும். நாகமணியின் வரவை எதிர்பார்த்து ஊர்ப்பெண்கள் குழுக்குழுவாக தெருக்களில் காத்து நிற்பர். நடந்து சென்று கடற்கரையில் மீன் எடுத்து இடுப்பொடியச் சுமந்துவந்து தெருக்களில் நுழைந்து வழிதோறும் வியாபாரம் செய்வாள் நாகமணியக்கா.

மீனைக் கடனாகக் கேட்டால் புன்முறுவலோடு கொடுத்துவிட்டுப் போய்விட்டு, அடுத்தநாள் கடற்கரை செல்லும்போது வசூலித்துக்கொள் வாள். ஆனால் விலையை மலிவாகக் கேட்டால் கண்ணகிக் கோபம் வந்துவிடும். வார்த்தைகள் தடம் புரளும். வாயில் வராததெல்லாம் வரும்! தட்டில் எடுத்துப் பரப்பிய மீன்களை கடகத்துள் போட்டுக்கொண்டு புயலாய்ப் புறப்படுவாள். அவளைச் சீண்டிப் பார்ப்பதற்கென்றே சிலர் சூடையையே, சூடை விலை கேட்பர். வாங்கிக் கட்டிக்கொள்வர். மீன் விற்கும் போது புயலாய் சூழன்றடிக்கும் நாகமணியக்கா, நாவல்பழ வியா பாரம் செய்யும் போது மட்டும் பூவாய் வருடு வது எப்படி? நாவல்ப ழம் சுமந்து பூவாக வந்த காலம் ஒன்றில் அவள் புயலாக மாறிய சம்ப வம் ஒன்று நடந்ததை ஊரே மூக்கில் விரலை வைத்துப் பேசும். மீன் பெட்டி சுமக்கும்போது அவள் உள்ளிருந்து வெளிப்படும் 'ஆண்" அன்று நாவல்பழக் கடகம் சுமக்கும் போது வெளிப்பட்டதைக் கண்டு தெருவே வியந்தது! 'சல்லிப்பெட்டி செல்வரா சன்" ஊரில் ஒரு சண்டியன். தொடை தெரிய சாரத்தை மடித்துச் சண்டிக்கட்டுக் கட்டி, 'புல் ஸ்லீவ்" சேட்டை அனாயசமாக உடம்பிலே போட்டு நெஞ்சில் விழுந்த வெட்டுக் காயமொன் றின் தழும்பு வெளியிலே தெரியுமாறு நெஞ்சுச் சட்டைப் பொத்தான்களை திறந்து விட்டு, தன் கோலாவாலாக் காலை அகலவைத்து தெருவில் போகும்போது போய் வருபவர்களைச் சண் டைக்கு இழுக்கும் வகையில் பேசி, வாடிக்கைக் கள்ளை குடித்துத் திரும்பும் போது புளியடிச் சந் தியில் தன் சண்டிய நண்பர்களுடன் நின்று சரள மாகத் தூஷணைகள் பேசி இன்புற்றிருக்கும் பேர் வழி அவன். இப்படிப்பட்ட சண்டியன் நாவல்ப ழக் கடகம் சுமந்துவரும் நாகமணியக்காவை வழிதெருவில் கண்டால் 'பம்முவான்'. வழியை மாற்றி வேறு வழியில் போய்விடுவான். தவிர்க்க முடியாது நேரெதிரே கண்டுவிட நேர்ந்தால் தலை யைக் கவிழ்த்துக் கொள்வான். 'சல்லிப்பெட்டி' சப்பைப் பெட்டியாகிப்போனது எப்படி? சல்லிப் பெட்டிக்கு நாகமணியக்கா மீது ஒரு கண்.

நாவல் பழப் பெட்டியோடு வரும்போதுதான் அந்தக் கண் அவளை மேயும். நாவல் பழம் விற்ப வள்தானே, மடக்கிப் போட்டுவிடலாம் என்று ஓர் எண்ணம். அவள் அறியும் படியாகவே தன் ஆசையை பல தடவைகள் சண்டித்தனத்தோடு வெளிப்படுத்தியிருந்தான். ஒரு சமயம் வியாபாரம் முடித்துக்கொண்டு நாகமணியக்கா வரும்போது, நல்ல வெறியோடு தெருவில் வந்த சல்லிப்பெட்டி, நாகமணியக்காவோடு 'வம்பு' செய்ய முயற்சித்தி ருக்கிறான். அவனது தூஷணைகளைத் தாங்க முடியாத அவள் நாவல்பழப் பெட்டியை இறக்கி வைத்துவிட்டு, தெருவோரத்திலிருந்த வீடொன் றில் புகுந்து உலக்கை ஒன்றை எடுத்துவந்து சல் லிப்பெட்டிக்குப் போட்ட போட்டை அந்தத் தெருவின் 'ஆண்கள்'பலர் வேடிக்கை பார்த்தபடி நின்றார்களாம்! அன்றிலிருந்து யாரோ எதற்கா கவோ சல்லிப்பெட்டியைச் சுட்டுக் கொல்லும் வரை அந்தத் தெருவில் அவன் தூஷணை பேசி யதே கிடையாது என்பது வரலாற்றுச் செய்தியாக நிலைத்துப் போனது!

# வித்துவான் பதில்கள்



**காதலிப்பது தவறா? காதலிக்காமல் இருப்பது தவறா?**

*எஸ்.ரி. சிவனேந், மறவன்புலோ*

அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை



**அகம்பாவம் பற்றி உங்கள் கருத்து என்னவோ?**

*சு.தயா, சுதுமலை*


அதைக் கொண்டிருப்பவரின் 'அகம்'.... 'பாவம்'




**20 ஆம் திருத்தத்தின் குறைபாடுகளை ஆராய்ந்து பார்த்தீங்களா வித்து ஐயா?**

*கே. கணேஷ் கோண்டாவில்*

நாம் ஏன் வேலைமினைக்கெட்டு ஆராய வேண்டும். விரைவில் 21ஆம் திருத்தம் வரும்போது 20 இன் குறைபாடுகள் தாராளமாகவே வெளிவருமே!





**காதலில் தோல்வியடைந்தவுடன் தற்கொலை செய்வோர் குறித்து...?**

*செ.அற்புதன், இணுவில்.*

ஒரு மலரை நம்பியிருக்கும் தனிவண்டு.



**பொருள்களின் விலைகள் கடைக்குக் கடை வேறுபடுகின்றனவே காரணம் என்ன வித்து...?**

*த.ஜெயக்குமார், குப்பிளான்*

காரணமெல்லாம் தெரியாது கம்பஸ் பைல் ஒன்று தேவை. முதற்கடையில 130/= சொன்னார்கள். அடுத்தகடையில் 110/= என்றார்கள். இன்னும் சற்றுத்தூரம் போயகக்கேட்டேன் 90/= என்றார்கள். எனக்குள் ஒரு நப்பாசையான எண்ணம். இப்படியே குறைந்து கொண்டு போனால் இன்னும் ஒரு அஞ்சாறு கடை தள்ளிக் கம்பஸ் பைலும் சும்மா தந்து கையில் 20 ரூபாவும் தந்து விடுவார்களோ...

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்
**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

# மட்டன் பொடிமாஸ்



**தேவையான பொருட்கள்**

மட்டன் - 1/4 கிலோ
பெரிய வெங்காயம் - 1
பூண்டு - 10 பல்
தேங்காய்த் துருவல் - கால் கப்
பொட்டுக்கடலை 1/2 கப்
சோம்பு - 1 ஸ்பூன்
கசகசா - 1 ஸ்பூன்
மிளகாய்த் தூள் - 1ஸ்பூன்
மல்லித் தூள் - 1/4 ஸ்பூன்
மஞ்சள் தூள்- 1/2 ஸ்பூன்
பட்டை - 4 துண்டு
கராம்பு- 6
கறிவேப்பிலை - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

மட்டனுடன் உப்பு, மஞ்சள், தண்ணீர் சேர்த்து குக்கரில் வேக வைக்கவும்.
பெரிய வெங்காயம், பூண்டை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
அடுத்து தாச்சியில் சோம்பு , பொட்டுக்கடலை, கசகசா சேர்த்து வதக்கி மிக்ஸியில் அரைத்து எடுத்துக் கொள்ளவும்.
வேக வைத்த மட்டனை உதிர்த்து, பொட்டுக்கடலைப் பொடி, மிளகாய்த் தூள், மல்லித் தூள், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து தண்ணீர் தெளித்து பிசைந்து கொள்ளவும்
தாச்சியில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் பட்டை, கராம்பு வெடித்ததும் வெங்காயம், பூண்டு, கறிவேப்பிலை சேர்த்து வதக்கிய பின்னர், அதில் பிசைந்து வைத்த மட்டனைச் சேர்த்துக் கிளறவும்.
நன்கு உதிர்ந்து வந்ததும் எலுமிச்சை சாற்றைப் பிழிந்துவிட்டு இறக்கினால் சுவையான மட்டன் பொடிமாஸ் ரெடி.

# பாதங்கள் புதுப்பொலிவுடன் மின்ன...!



பருவநிலை மாற்றத்தினால் பாதங்களில் வெடிப்புகள், சொரசொரப்பு போன்ற பிரச்சினைகள் இருந்தால் இந்த சிம்பிளான பேக்கை போட்டு பாதங்களை புதுப்பொலிவடையச் செய்யலாம்.




**தேவையான பொருட்கள் :**
ரோஜா 3
சந்தனப் பவுடர் 1 ஸ்பூன்
ரோஸ் வோட்டர் 1 ஸ்பூன்
மஞ்சள் தூள் 1 ஸ்பூன்
பால் 1 கப்

**செய்முறை:**

ரோஜா இதழ்களை தண்ணீர் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அடுத்து, சந்தனப் பவுடர், ரோஸ் வோட்டர் மற்றும் மஞ்சள் தூள் ஆகியவற்றைச் சேர்த்துக் கலந்துகொள்ளவும்.
இந்த பேக்கினை கால்கள் மற்றும் பாதங்களில் தடவி, 20 நிமிடங்கள் ஊற வைத்த பின்னர் நன்றாக மஜாச் செய்து கொள்ளவும். அதன்பின்னர், குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இதனை வாரம் இரண்டு முறை செய்துவர பாதங்கள் நன்கு பொலிவு பெறும்.

மகளிருக்கான உங்களது குறிப்புக்கள் வரவேற்கப்படுகின்றன
எழுதி அனுப்புங்கள்

மகளிர் பகுதி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555



# கடவுளும், சாத்தானும்!

○ ராஜ்சிவா

அறிவியல் தொடர் 7





துகள்களும், எதிர்த்துகள்களும் ஒன்றுக்கொன்று மாறானவையல்ல. எதிர்த்துகள்கள் ஒன்றும் சாத்தான்களும் கிடையாது. சாதாரணத் துகள்கள் போன்றவைதான் எதிர்த்துகள்களும். ஏற்றம் மட்டுமே மாற்றமானவை. அதனாலேயே இவற்றை, பிம்பத்துகள்கள் (mirror matter) என்றும் சொல்கின்றனர். கண்ணாடியில் நீங்கள் பார்க்கும் உங்கள் பிம்பம் ஒன்றும் உங்கள் எதிரியோ, சாத்தானோ கிடையாதல்லவா? ஆனாலும், சாதாரண துகள்களும், எதிர்த்துகள்களும் ஒன்றையொன்று சந்திக்கும்போது, தம்மை அழித்துக் கொள்கின்றன. தேவையற்ற வீண் விவாதங்களினால் இறை நம்பிக்கைவாதி ஒருவரும், இறை மறுப்பாளர் ஒருவரும் அடித்துக் கொள்வதுபோல, இவையும் தம்மிடையே ஒன்றையொன்று அடித்துக்கொண்டு அழிந்து போகின்றன. அதனால் மட்டும் இவற்றைக் கடவுளும், சாத்தானும் என்று ஒரு பேச்சுக்குச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், இவற்றில் எது கடவுள், எது சாத்தான் என்பதுதான் தெரியாது. எதிர்த்துகள்களை உருவாக்குவதற்குத் தொழிற்சாலை இருப்பதாக 5 ஆவது பகுதியில் சொன்னதாக ஞாபகம். அதை நாம் இப்போது பார்க்கலாம். ஒரு தொழிற்சாலையில் பொருளொன்றை உற்பத்தி செய்கிறார்கள் என்றால், அந்தப் பொருளின் அடிப்படையை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பூமியெங்கும் காணப்படும் சாதாரண துகள்களோடு ஒப்பிடும்போது, எதிர்த்துகள்கள் மிகநூதனமான அம்சங்களைக் கொண்டவை. ஒரு கிராம் அளவுடைய எதிர்த்துகள்கள், 50 மில்லியன் கிலோவாட் மணி ஆற்றலைக் கொடுக்கக்கூடியவை. அதாவது, ஹிரோஷிமாவில் நடந்த அணுகுண்டு வெடிப்பைப் போல, மூன்று மடங்குகள் ஆற்றலை அவை வெளிப்படுத்தும். சரியாகக் கவனியுங்கள், வெறும் ஒரேயொரு கிராம் அளவிலான எதிர்த்துகள்கள் உருவாக்கக்கூடிய ஆற்றல் அவை. கால் பவுண் தங்கத்தின் அரைவாசியே போதும், கொழும்பைப் போல மூன்று பெரிய நகரங்களை நொடியில் அழித்துவிடுவதற்கு. இதனாலேயே, உலகின் அதிகப் பெறுமதிவாய்ந்த துகள்களாக, எதிர்த்துகள்கள் மதிப்பிடப்படுகின்றன. ஆனால், இந்த ஆற்றலை அழிப்பதற்கு மட்டுமல்ல, ஆக்கலுக்காகவும் பயன்படுத்திக்கொள்ள முடியும். குறிப்பாக விண்கலங்களுக்கான எரியாற்றலாகவும் இவற்றைப் பயன்படுத்தலாம். இது மருத்துவத்துறையிலும் இப்போது பயன்படுத்தப்படுகிறது. ஆங்கிலத் திரைப்படங்களிலும், அறிவியல் கதைகளிலும் மிகமோசமாகத் தவறான விதங்களில் எதிர்த்துகள்கள் பற்றிக் கதைகள் புனையப்படுகின்றன. அதனால், பலருக்கு அவற்றின் உண்மையான அறிவியல் அறிவு கிடைக்காமலே போய்விடுகின்றது. அவர்கள் சொல்வதுபோல, எதிர்த்துகள்களை மொத்தமாக அதிகளவில் ஒன்று சேர்த்துச் சேமிக்க இதுவரை முடியவில்லை. சாதாரண வாழ்வில், ஓரிரு எதிர்த்துகள்கள் உருவாகிப் பின்னர் அழிந்து போகின்றன. வாழைப்பழத்தில்கூட எப்போதாவது எதிர்த்துகள்கள் உருவாவதுண்டு. பொட்டாசியத்தின் ஐசோடோப், வாழைப்பழத்தில் சிதைவடையும்போது, பொசிட்ரோன் என்னும் எதிர்த்துகள்கள் அவ்வப்போது அதில் தோன்றுவதுண்டு. அந்த வாழைப்பழத்தை உண்ணுவதால்,எமது உடலினுள்ளும் அந்தப் பொசிட்ரோன் துகள் உருவாகலாம். அது சாதாரணத் துகளுடன் இணைந்து தன்னை அடுத்த கணமே அழித்துக் கொள்ளும். அப்போது, உங்கள் உடலினுள் ஏதோ வெடிவிபத்து ஏற்பட்டுவிடுமோ என்று நீங்கள் பதறிவிடத் தேவையில்லை. ஒரு பொசிட்ரோன் துகளின் அழிவு எதையும் குலைத்துவிடுவதில்லை. ஒரு கிராம் எதிர்த்துகள்கள் என்று எடுத்துக் கொண்டால், அதில் எத்தனை கோடி கோடி எதிர்த்துகள்கள் இருக்கும் தெரியுமா? அவற்றில் ஒரேயொரு துகள் எந்தத் தீங்கையும் செய்துவிடாது. ஆனால், ஒன்றுசேர்ந்த சில எதிர்த்துகள்கள் ஆபத்தானவையே!

ஒரு கிராம் எதிர்த்துகளிலிருந்து நம்பவே முடியாத அளவு ஆற்றலை நாம் பெறமுடியுமெனின், அதன் பெறுமதியும் அதிகமானதாகவே இருக்க வேண்டும். 2006 ஆம் ஆண்டு, ஒரு கிராம் எதிர்த்துகள்களைத் தயாரிப்பதற்கு 25 பில்லியன் டொலர் தேவைப்படும் எனக் கணித்தார்கள். இன்றைய நிலையில், ஒருகிராம் எதிர்த்துகள்கள் மூன்று குவாட் ட்ரில்லியன் டொலர் எனக் கணித்திருக்கிறார்கள். அதாவது 3,000,000, 000,000,000 டொலர். இவ்வளவு மதிப்புடைய எதிர்த்துகள்களைத் தயாரிப்பதற்குத்தான் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையின் பெயர், ELENA Antimatter factory. இந்த எதிர்த்துகள் தொழிற்சாலை வேறெங்கும் அமைக்கப்படவில்லை. உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமான, சுவிஸ் நாட்டு சேர்ன் நகரில் அமைக்கப்பட்டிருக்கும் 'ஹாட்ரோன் பெருந்துகள்மோதி' (Large Hadron Colider LHC) இருக்கும் இடத்துடன் இணைந்தே இந்தத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. எலெக்ட்ரோன் நீக்கிய ஐதரசன் அணுவின் கருக்களை (ஹாட்ரோன்) ஒளியின் வேகத்துக்கு நிகரான வேகத்துடன், இருபக்கமும் வட்டவடிவப் பாதையில் மோதும்படி செலுத்துவதற்காக அமைக்கப்பட்டதே இந்த LHC. அங்கு மிகை வேகத்துடன் பயணிக்கும் துகள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும். அப்போது, பெருவெடிப்புடன் இலட்சக்கணக்கான வெவ்வேறு புதுத் துகள்கள் உருவாகிச் சிதறும். கிட்டத்தட்ட 'பிக் பாங்' பெருவெடிப்பின் ஆரம்பக் கணத்துக்கு இணையானது அது. ஆனால், பிக்பாங் வெடிப்பை விடவும் மிகச் சிறியது. அப்போது உருவாகும் துகள்களில். எதிர்த்துகள்களும் காணப்படும். அப்படி உருவாகும் துகள்கள் பலதிசைகளிலும் சிதறிச் செல்லும். அப்படிச் செல்லும் துகள்களை எலேனா ('ELENA') உள்வாங்கிக்கொள்ளும். ELENA என்பதன் அர்த்தம் Extra Low ENergy Antiproton ring என்பதாகும்.

அதிவேகத்துடன் வரும் துகள்களின் வேகத்தை இவை வட்டவடிவப் பாதையொன்றில் கட்டுப்படுத்தப்படுகின்றன. பெரும் ஆற்றல் கொண்ட காந்தங்களின் மூலம் அவற்றின் வேகம் வெகுவாகக் குறைக்கப்படுகின்றன. அப்போது, புரோட்டோன் துகளின் எதிர்த்துகளான 'அன்டிபுரோட்டோன்கள்'அங்கு சிறைப்படுகின்றன. மின்காந்தப் புலன்கள் சூழ்ந்த ஒரு தொட்டியில் அங்கும் இங்கும் நகரமுடியாத வகையில் எதிர்ப்புரோட்டோன்கள் வலையில் மாட்டிக் கொள்கின்றன. இதை பென்னிங் மாம்பேர்க் சிறைப்பிடித்தல் (Penning Malmberg trap) என்பார்கள். ஒரு பொருளையோ, திரவத்தையோ, வாயுவையோ நம்மால் ஒரு குடுவையிலுள் சேர்த்து வைத்திருக்க முடியும். கண்ணாடிக் குடுவைகள் பெரும்பான்மையானவற்றைச் சேர்த்து வைக்கக்கூடிய பொதுக் குடுவையாகும். ஆனால், எதிர்த்துகள்களை எதில் சேர்த்து வைப்பது? பூமியில் காணப்படும் எதனுடன் சேர்த்தாலும் அவை தாமும் அழிந்து, சேர்பவனையும் சேர்த்து அழித்துவிடுகின்றன. அதனால், இந்த எதிர்ப்புரோட்டோன்களை எதில் சேர்த்துப் பாதுகாப்பது? எதனாலும் அதைச் சேர்த்துப் பாதுகாக்க முடியாதே! ஆனால், நவீன அறிவியல் அதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தது. எதிர்த்துகள்களுக்கு என்னவிதமான ஏற்றம் இருக்கின்றனவோ, அதே ஏற்றம் கொண்ட காந்தப் புலனைச் சுற்றிலும் ஏற்படுத்தினால், அவை எங்கும் நகர முடியாமல் அந்த இடத்திலேயே அசைய முடியாமல் சிறைபிடிக்கப்படும். இதையே, பென்னிங் மாம்பேர்க் சிறைப்பிடித்தல் என்கிறார்கள். கிட்டத்தட்ட குளிக்கும் தொட்டி (bath tub) போன்ற அமைப்பில் காணப்படும் குழாய்களினூடாகச் செல்லும் துகள்களில், எதிர்ப்புரோட்டோன்கள் மட்டும் காந்தப் புலனங்களினால் சிறையாக்கப் படுகின்றன. சிறைப்பிடிக்கப்பட்டுச் சேமிக்கப்படுகின்றன. "ஓஹோ! அப்படியென்றால், இதுவரை நிறைய எதிர்த்துகள்களைச் சேர்த்து வைத்திருப்பார்களே! அவையெல்லாம் அதிகப் பெறுமதி வாய்ந்தவையே! இதை வைத்தே உலகப் பணக்காரர்களாகிவிடலாமே!" என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி நினைத்தால் உங்களை நீங்களே செருப்பால் அடித்துக் கொள்ளவும். இதுவரை காலமும் வெறும் 10 நானோகிராம் அளவுள்ள எதிர்த்துகள்களையே நம்மால் சேமிக்க முடிந்தது.

வெறும் இருநூறு எதிர்ப்புரோட்டான்களை நானூறு நாட்களுக்குச் சேமித்து வைத்திருக்கவே முடிகிறது. ஆங்கிலத் திரைப்படங்களில் காட்டப்படுவதுபோல, ஒரு கண்ணாடிக் குப்பியிலெல்லாம் அவற்றை எடுத்துச் செல்ல முடியாது. வில்லன் கடத்திச் செல்லும் பொருளாக ஒரு சிறியளவு சூட்கேசில் அதை வைத்துக்கொண்டு போக முடியாது. கிட்டத்தட்ட, மிகப்பெரிய பார உந்துகளில் பிரமாண்டமான அமைப்புடன் மட்டுமே அவற்றை ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியும். அதற்கும் பல கோடிகளில் டொலரைக் கொட்டிச் செலவு செய்யவேண்டும். அன்டிமாட்டர் ஃபக்டரி என்றதும், ஏதோ ஒரு தொழிற்சாலையில் தினமும் இலட்சக்கணக்கான எதிர்த்துகள்கள் உருவாக்கப்படுகின்றன என்று நீங்கள் நினைத்திருந்தால், மன்னிக்க. அங்கு சேரனைப் போலத் தவமாய்த் தவமிருந்தே எதிர் துகள்களைச் சேமிக்கிறார்கள். இன்றுள்ள நிலையில், ஒரு கிராம் எதிர்த்துகள்களைச் சேமிப்பதற்கு 2 மில்லியன் ஆண்டுகள்கூட ஆகலாம். ஆனாலும், எமது அறிவியல் வளர்ச்சியில் ஆச்சரியங்கள் எப்போதும் நடைபெறும். யாருக்குத் தெரியும், இன்னும் சில ஆண்டுகளில்கூட அதற்கான அறிவியலை நாம் பெற்றுவிடலாம். அதுவரை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# கள்ள விசாவில் இந்தியாவுக்கு...!



○ பொக்கிசன்

ரெண்டு மூண்டு தரம் கப்பலிலை இந்தியாவுக்குப் போட்டு வந்தாச்சு. இந்த முறை பிளைற்றிலை போவம். குகநேசன் அண்ணை அடிக்கடி போய் வாறவர். இந்தமுறை என்னையும் தன்ர செலவிலை கூட்டிக்கொண்டு போறனெண்டு சொன்னவர். போட்டு வந்தால் எனக்கு ஆயிரம் ரூபா தருவார்.

நேரம் ஏழரையாகுது. கொழும்புக்குப் போற மினிபஸ்கள் நிக்குது. முன்னுக்கு நிண்ட பஸ்ஸில் போய் ஏறினன். கொண்டக்டர் "எவடம்?" என்றார். நான் "கொழும்பு" எண்டன். மினி பஸ்ஸுக்கு 100.00 ரூபா. பெரிய பஸ் எண்டால் 150.00 ரூபா. அதோடை பெரிய பஸ் எண்டால் கன நேரமெடுக்கும். சின்ன பஸ்கள் விடிய முன்னம் போயிடும். போற வழியிலை எல்லா இடத்திலையும் செக்கிங் . முந்தி ஸ்ரீலங்கன் ஆமி செக் பண்ணின இடங்களிலை, இப்ப இந்தியன் ஆமியின்ரை செக்கிங். சாவகச்சேரியிலை தொடங்கி ஆனையிறவு, கிளிநொச்சி, மாங்குளம், புளியங்குளம் எல்லா இடத்திலையும் இறங்கி ஏற வேணும். ஈரற்பெரியகுளம் தாண்டியிட்டா அங்காலை ஒரு செக்கிங்கும் இல்லை. ஈரற்பெரிய குளத்திலை எல்லா வாகனங்களையும் மறிச்சு வச்சிருந்து விடியப்பிறம் தான் போக விடுவங்கள். ஈரற்பெரிய குளத்திலை எல்லா வாகனங்களும் நிக்குது. எங்கடை வான் மூண்டாவதா நிக்குது. நான் இறங்கி வீதியிலை நிலத்தில் படுத்திருந்தன் . என்னைப்போலை வேறும் பலர் படுத்திருந்தனர். இண்டைக்கு கொஞ்சம் வெள்ளென 'பரியரை' திறந்திட்டாங்கள். முன்னாலை நிண்ட வான் லைட் போட்டுக்கொண்டு போகுது. வீதியிலை படுத்திருந்த ஆக்கள் எல்லாம் வாகனங்களில் ஏறினார்கள். கொழும்புக்கு வந்தாச்சு .நேர பண்ணையாரின் லொட்ஜுக்கு போனன். பண்ணையார் இந்தியக்காரன் .பண்ணையாரின் லொட்ஜ் செட்டித்தெருவிலை மூலையிலை கிடக்கு. மேல் வீட்டில உள்ள இரண்டு அறைகளையும் வாடகைக்கு குடுத்திட்டு கீழ் வீட்டிலை பண்ணையார் குடும்பமாக இருக்கிறார். ஒன்று பெண்களுக்கு, மற்றையது ஆண்களுக்கு. ஒரு பாய்க்கு ஒரு நாளைக்கு முப்பது ரூபா. வெளிநாட்டுக்கு போற பெடியள் எல்லாம் அங்கை தான் தங்குறது. உரும்பிராய் ரீச்சர் ஒருவர் மகளையும் கூட்டிக்கொண்டு வந்து நிற்கிறார், மகளை வெளிநாட்டுக்கு அனுப்புறத்துக்கு. இந்த முறை கள்ள விசாவிலை தான் போக வேணுமெண்டு அண்ணை சொன்னவர். ஒருக்கா போய் வந்தா ஆறு மாதத்துக்குப்பிறகு தான் விசா தருவாங்கள். அதாலை கள்ள விசாவிலை தான் போக வேணும். நாளைக்கு போறதுக்கு ரிக்கெட்போட்டாச்சு. அண்ணை பாஸ்போட்டை கொண்டு போட்டார் விசா குத்துறதுக்கு. நான் அண்ணையைக் கேட்டேன் "பயமில்லையோ?" எண்டு அவர் " சீ அதொண்டும் பயமில்லை" எண்டார்.

கஸ்டம்ஸ் அதிகாரிக்கு 200.00 ரூபா குடுக்கச்சொல்லி அண்ணை சொன்னார். இல்லாட்டி' பாக் 'எல்லாம் கைவிட்டுக் கொட்டி கிளறிப் பார்ப்பங்கள்.

அண்ணை சொன்ன மாதிரி நானும் இரண்டு நூறு ரூபாத்தாள்களை 'பாக்'குக்குள் வைத்து விட்டு "200 தெனவா சேர்" என்றேன். கஸ்டம்ஸ் அதிகாரி காசை எடுக்கவில்லை. நான் பேசாமல் நின்றேன். போகலாம் என்பதுபோல சைகை காட்டினார். நான் விறு விறு வென்று 'பாக்கின்' சிப்பை பூட்டிக்கொண்டு புறப்பட்டன். கள்ள விசா எண்டா கட்டு நாயக்கவிலை பிரச்சினையில்லை.. "ஏன் காசை எடுக்கவில்லை?" என்று அண்ணையிடம் கேட்டேன். "மேலை நிண்டு பெரியவன் பாத்துக்கொண்டு நிண்டிருப்பான் , அது தான்போல" எண்டார்.

கப்டன் 'எனவுன்ஸ்' பண்ணினார் " நவரத்தினம் என்பவர் தன்னுடைய பைகளை அடையாளம் காட்ட வரவும்" (Mr.Navaratnam come and identify your baggage please) .

நான் யாரோ நவரத்தினத்தைக் கூப்பிடுகினம் என்று நினைத்துக்கொண்டு பேசாமலிருந்து விட்டன். திருச்சியில் போய் இறங்கியாச்சு. என்ரை 'பாக்' வரவில்லை; எனது 'பாக்' வரவில்லை என்று அங்கை நின்ற அதிகாரியிடம் சொன்னேன்' "உங்களை பாக்கை அடையாளம் காட்ட கூப்பிட்டோம். ஏன் வரவில்லை?" என்றார். அப்ப தான் எனக்கு விளங்கிச்சுது பாஸ்போர்ட்டிலை கிடந்த அப்பாவின்ரை பெயரைப்பார்த்து நவரத்தினம் எண்டு கூப்பிட்டவை எண்டு. இமிகிரேஷன் பகுதியில் மூண்டு பேர் இருந்தார்கள். அண்ணை.300.00 ரூபா இந்தியா காசு குடுக்கச்சொன்னவர். இந்த விசாவை பாக்க ஒரிஜினல் விசா மாதிரித் தானே கிடக்கு.காசு கொடுக்காமல் பாஸ்போர்ட்டை குடுப்பம். என்ன சொல்லுகினம் எண்டு பாப்பம். பாஸ்போர்ட்டை எடுத்து நடுவிலை இருந்தவரிடம் கொடுத்தேன்.

" கள்ள விசாவா?" என்றார். நான் ஓமெண்டு சிரிச்சுக்கொண்டு மூன்று நூறு ரூபாத் தாளையும் எடுத்துக்கொடுத்தேன். வாங்கி லாச்சிக்குள்போட்டு விட்டு சீல் குத்திப்போட்டுத் தந்தார். நான்' பா'க் இல்லாமல் வர சுங்க அதிகாரிக்கு சந்தேகம் வந்துவிட்டது. என்னைத் தனிய அழைச்சுக் கொண்டு போய் சேர்ட்டை கழட்டச்சொன்னார், கழட்டினேன், டிரௌசரையும் கழட்டச்சொன்னார், உள்ளாடையையும் கழட்டச்சொன்னார். நான் பேசாமல் நின்றேன் "நீ சிங்களவனா?" என்றார். நான் "இல்லை' என்றேன்.

"முஸ்லிமா?" என்றார். நான் "இல்லை பரமேஸ்வரன் என்றேன்.

"ம் கழட்டு" என்றார். கழற்றினேன். நிலத்திலிருந்து முக்கச் சொன்னார் . அவர் சொன்னபடி செய்தன்.


" சரி போ" என்றார். வெளியே வந்து அண்ணையிடம் விசயத்தை சொன்னேன்.

"உன்ர தோற்றத்தைப் பார்த்துவிட்டு போதைவஸ்துக் கடத்தல்காரன் என நினைத்து விட்டார் போலிருக்கிறது" என்றார் . விசா விடயத்தையும் சொன்னேன் .

"நேற்றுக் குடுத்த விசா இலக்கங்கள் இங்கை அனுப்பியிருப்பார்கள். அவனுக்கு இலக்கத்தைப் பார்த்தவுடன் இது கள்ள விசா எண்டு தெரிஞ்சிருக்கும்.சென்னைக்கோ, திருவனந்தபுரத்திற்கோ கள்ள விசாவில் போக முடியாது .பிடிச்சப்போடுவாங்கள் "என்றார்; மறு நாள் போய்த்தான் எனது 'பாக்கை' எடுத்து வந்தேன்.

பாகம் 15





○ ந.பரமேஸ்வரன்

# யாழ். மாநகர சபையின் வரலாறு

## (1906 - 1949)

13.05.1939 அன்று நடைபெற்ற கூட்டத்தில் சட்டத்தரணிகளின் வீட்டு மின்சார இணைப்புக்கு வீடுகளுக்குரிய கட்டணமே அறவிடுவதென தீர்மானிக்கப்பட்டது. சில சட்டத்தரணிகள் தமது வீட்டிலேயே அலுவலகத்தை நடத்துகின்றனர் எனவே அவர்களிடம் வியாபாரஸ்தலங்களுக்குரிய கட்டணமே அறவிடப்பட வேண்டுமென பிரஸ்தாபிக் கப்பட்டது; கொழும்பில் சட்டத்தரணிகளின் அலுவலகங்களுக்கு வியா பாரஸ்தலங்களுக்குரிய கட்டணமே அறவிடப்படுவதாக ஒருசாரார் தெரிவித்தனர்; இதற்குப்பதிலளித்த உறுப்பினர் துரையப்பாவும் மாகாண பொறியியலாளரும் கொழும்பில் சட்டத்தரணிகள் தமது வீட்டில் அலுவலகம் நடத்தவில்லை எனத் தெரிவித்தனர்; இறுதியில் சட்டத்தரணிகளின் வீட்டு மின்சார இணைப்புக்கு வீடுகளுக்குரிய கட்டணமே அறவிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

★★★★

1939ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வரி செலுத்துவோர் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட நகரசபையை மாநகரசபையாக மாற்றுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தது. மாவட்ட நகரசபையை மாநகரசபையாக மாற்றினால் வரிகள் அதிகரிக்கப்படுமென இவர்கள் பிரசாரம் செய்து வந்தனர். இவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் உறுப்பினர் பதஞ்சலி இந்து சாதனம் பத்திரிகையில் கட்டுரையொன்றை எழுதியிருந்தார்; கட்டுரையின் சாராம்சம் வருமாறு.

"வரி செலுத்துவோர் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட நகரசபையை மாநகரசபையாக மாற்றுவதற்கு கடும் எதிர்ப்புத்தெரிவித்து வருகிறது. 1936ம் ஆண்டு இந்த பிரேரணை கொண்டு வரப்பட்ட போது நானும் எதிர்ப்புத்தெரிவித்தேன். மாநகரசபையாக மாற்றப்பட்டால் வரிகள் அதிகரிக்கும் என்பதற்காக. பின்னர் மாநகரசபை சட்டங்களை எடுத்து படித்துப் பார்த்தேன். யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்து கிடைக்கும் பட்சத்தில் அது ஒரு பூரண அதிகாரமுள்ள சபையாக இருக்கும். சட்டமியற்றும் அதிகாரம் மாநகரசபைக்கு உண்டு.

வரிகள் மக்களின் மீது சுமத்தப்பட மாட்டாது. வரிகளைப்பற்றி தீர்மானிக்கும் அதிகாரம் சபைக்கு உண்டு. காலி மாநகரசபை எமது சபையை விட சிறியது. அவர்கள் நீண்ட காலமாக சிறப்பாகத் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். எனது வட்டாரத்தில் சிலர் அப்பாவித்தனமாக என்னிடம் கேட்கின்றனர் யாழ்ப்பாணத்திற்கு மாநகர அந்தஸ்துக் கிடைத்தால் நாங்கள் எங்களது விட்டு வேலிகளை பிடுங்கி விட்டு மதில் கட்ட வேண்டுமாம் உண்மையா என்று. இது மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக சிலரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விஷமத்தனமான பிரசாரம்."

பதஞ்சலியின் கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் உறுப்பினர் ஐயாத்துரை இந்துசாதனம் பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருந்தார்.

" மாநகரசபை உருவாக்கப்படும் பட்சத்தில் முழுநேர ஆணையாளர் ஒருவரும் முழுநேர சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும் இவர்களுக்கெல்லாம் சபை நிதியிலிருந்து தான் சம்பளம் கொடுக்க வேண்டும் இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது ?"

(தொடரும்)

*இந்த வார சஞ்சீவியின் வழமையான சில அம்சங்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிரசுரமாகவில்லை. அடுத்த இதழில் வழமை போன்று பிரசுரமாகும்.*

*(ஆ-ர்)*

அவசரமா ஒரு கடுதாசி

# அலம்பல் அமைச்சருக்கு.....

எல்லாருக்கும் வணக்கம், எனக்கு நல்ல சுகம் எண்டு சொல்ல மாட்டன்.போன கிழமை மாட்டடியிலை நிக்கேக்கை சாதுவா மழைத் துமி பட்டிட்டுது. அதாலை தடிமனாக்கிப் போட்டுது. இருந்தாலும் பேப்பரைப் பாத்தாப்போல கை சும்மா இருக்குமோ? நாட்டிலை நடக்கிறதைப் பாத்துக் கொண்டு இருக்கேலுமோ? எழுதிறதை எழுதிச் சனத்திட்டை ஞாயங்கேக்க வேணும் எண்டு கடதாசி எடுத்து எழுதிறன்.

போனகிழமை பேப்பரைப் பாத்த நேரம் தொட்டு நெஞ்சுக்கை கிடந்து குத்திற ஒரு விசயத்தை முதலிலை எழுதவேணும் . திருவிளையாடல் படத்திலை நாகேஷ் சொன்ன மாதிரி,பாட்டெழுதிப் பேர் வேண்டுற ஆக்களும் இருக்கினம். அதே நேரம் மற்றவை எழுதிற பாட்டிலை குற்றங் கண்டுபிடிச்சுப் பேர் வேண்டுற ஆக்களும் இருக்கினம் .

அது மாதிரி எங்களுக்கையும் சிலர் இருக்கினம். தன்னைப் பற்றித் தெரியாது. தான் செய்த திருகுதாளங்கள் தெரியாது. தன்னிலை குற்றச் சாட்டு உள்ளதெண்டதும் தெரியாமல், மற்றவையளைக் குறை சொல்லிப் பேர் வேண்டுற மாதிரி,திலீபனைப் பிழையாய்ச் சொல்லித் தாங்கள் நல்ல பிள்ளைக்கு விளையாடப் பாக்கினம் அவை .

திலீபனைக் கொலைகாரன் எண்டு 'அந்தாள்' சொன்னப் பிறகு பொதுவெளியிலை அந்தாளுக்கு விழுகிற அடியைப் பாத்தா , ஏன் வாயைத் திறந்தன் எண்டும் சிலவேளை அவர் நினைக்கக் கூடும்.தலை தூக்கேலாத அடி . எட! உலகமெல்லாம் எழுச்சியாக சனம் திலீபனை நினைவுகூரேக்க , உந்த மாதிரிச் சொல்லலாமோ? ஒரு சாதாரணமான ஆளும் உப்பிடி எதையாவது சொல்லேக்கை இடம், பொருள், ஏவல் எண்டு பாத்திட்டுத் தான் சொல்லுவன். அந்த அறிவு கூட அவருக்கு இல்லைப்போலை! கதைக்கக் கதை இல்லாட்டி உதையே கதைக்கிறது?

கதைக்கிறதுக்குக் கதையே இல்லை! ஆகாயத்திலை இருந்து வலை விழுந்திருக்கு. அது அந்தாளின்ரை திணைக்களத்தின்ரை கதை . அதைப் பற்றிக் கதைக்கலாம். இல்லாட்டி கரையோரச் சனத்திட்டை கன பிரச்சினை இருக்கு. தெற்கிலை இருந்துவந்து கள்ளமா மீன்பிடிக்கி றாங்கள். அது கிடக்கட்டும். நாட்டிலை 17, 18, 19, 20 எண்டு இராவிராவாக் கத்திறாங்கள். அதைவிட, ஒருபக்கம் நாட்டிலை கடும் மழை எண்ணுறாங்கள். மற்றப்பக்கம் காத்தெண்டு சொல்லுறாங்கள்.

இந்தியாவுக்கு மசகெண்ணெய் ஏத்திக் கொண்டு வந்த கப்பல் கடலுக்கை வைச்சு நெருப்புப் பிடிச்சிட்டுதெண்டு சனம் அல்லோலகல்லோலப்படுகிது. அதிலை இருந்து வடியிற எண்ணெய் கடலோடை கலந்து கடல்வளம் பழுதாப்போகப்போது எண்டு மீன்பிடிகாரர் தலையிலை கைவைச்சுக் கொண்டு கிடக்கிறாங்கள். இதைப் பற்றிக் அவர் கதைக்கலாம். இல்லாட்டி அம்பிட்டிய தேரர் ஆக்களைக் கட்டி வைச்சு அடிச்ச கதை இருக்கு. அதுவும் அவ்வளவு சுவாரஸ்யமா இல்லாட்டி, மகிந்தா ஐயாவுக்குப் பேரப்பிள்ளை பிறந்திருக்காம். புது வரவெல்லே. அதின்ரை சாதகத்தை வேண்டிப் பாத்து அதின்ரை பலன் பேரனுக்கு, தேப்பனுக்கு, குடும்பத்துக்கு நல்லதோ? கெட்டதோ? குழப்புமோ? குழப்பாதோ? அதையாவது பாத்துச் சொல்லலாம். அதுஅவைக்கும் ஒரு ஆசுவாசமாயிருக்கும்.

'இந்தாள்' அதையெல்லாம் விட்டு, வாயை வைச்சுக் கொண்டு சும்மா இருக்காமல்,"திலீபன் கொலைகாரன். அவனை ஆர் தியாகி எண்டது?" எண்ட மாதிரித் தேவை இல்லாத பல கேள்வியளைக் கேட்டதாலை , நாய் எடுத்த சத்தி மாதிரி சனம் முகநூலிலையும், இணையத்திலையும் கண்ட கண்ட மாதிரிப்பழைய சூளை மேட்டுக் கதையளை எல்லாம் கக்கத் துவங்கிவிட்டினம். அதாலை யானை தன்ரை தலையிலை தானே மண் அள்ளிப் போட்ட கதை மாதிரியாப் போச்சு.

ஆனால் ஒண்டு. இந்தாள் வலு சூரன். அவற்றை தலை சும்மா ஆடாது. அவர் இப்பிடிச் சொன்னதாலை கட்டாயம் அவருக்கு ஏதாவது நன்மை இருக்கும்.இந்த நேரத்திலை , திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிரிழந்ததை நினைவுகூருகிற இந்த நாளுகளிலை, உவர் உதைச் சொன்னதுக்கு ஏதாவது முக்கிய பின்னணி இருக்கும்.ஒண்டில் உவற்றை தலைமை சொல்லச் சொல்லி இருப்பினம்

"சனம் திலீபனை நினைக்கிற நேரத்திலை உதைச் சொல்லிச் சனத்தைக் குழப்பச்சொல்லி."

இல்லாட்டி திலீபன்ரை நினைவுநாள் தங்கடை பழைய திருகுதாளத்தை ஞாபகப்படுத்திறதாலை, திலீபன் மீது சனம் வைச்சிருக்கிற நல்ல எண்ணத்தை மாத்த வேணும். அதாலை உப்பிடி ஏதாவது இடைக்கிடை சொல்ல வேணும் எண்டு "அவை" சொல்லிக் குடுத்திருப்பினம். ஆனபடியாலை; அவரைச் சொல்லச் சொன்ன அந்தக் குழப்பவாதி ஆர்? எண்டதை ஒருக்காக் கேட்டுச் சொல்ல ஏலுமோ? பாத்துக்கொண்டிருப்பன்.

நன்றி .
தங்கள் மேல் அதி பட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.




○ மாயன்

சவேந்திராசுரனுக்கு பெரும்பசி. எப்படியும் நூறு மனிதர்களையாவது உண்டால்தான் அவனது பசி அடங்கும் போல இருந்தது. ஆனால் அவனது கெட்டகாலமோ என்னவோ கண்ணுக்கெட்டியதூரம் வரை எந்தவொரு மனித உருவத்தையும் காணவில்லை. அவனது இராட்சத உருவம் , அவன் வருகையை முன்னரேயே மனிதர்களுக்கு எச்சரித்து விடுவதால், பலமுறை அவன் பசியோடு திரும்பிப் போகவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருந்தன. என்றாலும் இன்றைக்கு அப்படி ஏமாந்து போவதில்லை என்ற ஒரு முடிவோடுதான் அவன் தன் இருப்பிடத்தை விட்டுக் கிளம்பியிருந்தான்.

சவேந்திராசுரன் என்னதான் மிகப்பெரிய இராட்சதனாக இருந்தாலும், அவனால் மனிதர்களை அவ்வளவு இலகுவில் நெருங்கமுடிவதில்லை. காரணம் அவன் வருகையை அறிந்து ஏதாவது குகைகளுக்குள் அல்லது அடர்ந்த காடுகளுக்குள் தஞ்சமடைந்து விடுகின்றனர். அப்படித் தஞ்சமடைந்த குகை , காடு எதுவெனக் கண்டுபிடிக்கும் மோப்ப சக்தி சவேந்திராசுரனுக்கு இல்லை. அதனாலேயே அவன் பிடியில் இருந்து அந்த நகரத்து மக்கள் தப்பிக்க முடிந்திருந்தது.

" இன்றைக்கும் இந்த மானிடப் பதர்கள் எங்கோ ஒளிந்துவிட்டார்கள் போலும். ஆனால் நான் திரும்பிப் போகப் போவதில்லை, எத்தனை நாளானாலும் என் பசியைத் தீர்க்காமல் அசையமாட்டேன்" என்று பலத்த குரலில் சத்தமிட்டவாறு நகரத்தை நெருங்கினான்.

நகரத்து மக்கள் சவேந்திராசுரனில் தப்பிப்பதற்காகவே ஒவ்வொரு வீடுகளிலும் இரகசியச் சுரங்கப் பாதைகளை அமைத்திருந்தார்கள். சவேந்திராசுரனின் சத்தம் கேட்டதுமே அந்தச் சுரங்கப் பாதைகளில் இறங்கி, பாதுகாப்பான குகைக்குச் சென்றுவிடுவார்கள். இன்றும் அப்படித்தான் அவர்கள் எல்லோருமே பாதுகாப்பான இடங்களை நோக்கி நகரத் தொடங்கியிருந்தார்கள். என்றாலும் வழக்கமாக மனிதர்களைக் காணாவிட்டால் மறைந்துபோகும் சவேந்திராசுரனின் காலடியோசை இன்று இன்னும் முன்னேறுவதை உணர்ந்தார்கள். 'ஏதோ முடிவுடன் தான் சவேந்திராசுரன் இன்று புறப்பட்டிருக்கிறான்' என்பதை ஊகித்த நகர மக்கள், தங்கள் நகர்வை இன்னும் வேகப்படுத்தினர். வேகமாக வந்த சவேந்திராசுரனின் கால்கள் சட்டென நின்றன. அவனது பாதையில் குறுக்கிட்டது தமிழினியின் உணவுக்கடை. தன் பருத்த உடலை அசைத்து, கொஞ்சமாகக் குனிந்து அந்தக் கடையைக் கூர்ந்து நோக்கினான் அசுரன். எல்லா உணவுப் பதார்த்தங்களும் சுடசுட இருந்தன. அத்தோடு சில வாழையிலைகளில் சற்றுமுன் சிலர் உணவருந்திய அடையாளங்களையும் சவேந்திராசுரன் கண்டுகொண்டான். அவனது கண்கள் விரிந்தன.

" இப்போதுதான் அவர்கள் உணவருந்தியிருக்க வேண்டும்.அப்படியானால் அதிகதூரம் போயிருக்க முடியாது. எனக்கு மிக அருகாமையில் தான் இங்கே எங்கோ இருக்க வேண்டும்" எனப் பலமாகச் சொல்லியவாறே, அவர்களைத் தேடத் தொடங்கினான்.

வர வரப் பெரிதாகிக் கொண்டே வந்த சவேந்திராசுரனின் காலடியோசைகள், சட்டெனக் காணாமல் போனதால்,பாறை ஒன்றின் மறைவில் ஒளிந்திருந்த இளஞ்சந்திரன் மகிழ்ந்தான். அவன் திசைமாறி வேறுபக்கம் போகத் தொடங்கிவிட்டான் என்ற நினைப்போடு, கொஞ்சம் வெளியே எட்டிப் பார்த்தான்.

அவ்வளவுதான், சுண்டெலியைப்பிடிப்பது போல அவனை , சவேந்திராசுரனின் கைகள் மேலே தூக்கின.

( புதிர்கள் தொடரும்)

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 1990 - 1995

## 6

○ தில்லைநாதன் கோபிநாத்






**1990** ஆம் ஆண்டுத் தொடக்கத்தின்போது, யாழ்ப்பாணக்குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருந்தன. அக்கால அரசியல், களநில வரத்தை விளங்கிக் கொள்வது, அந்தக் காலகட்டத்துப் பதிப்புச் செயற்பாடுகளை விளங்கிக் கொள்ள உதவும் என்ற வகையில் அது குறித்து சுருக்கமாகப் பார்க்கலாம்.


1970களில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தமிழ்ப் போராளிக் குழுக்கள் பரவலாகச் செயற்படத் தொடங்கின. 1981இல் யாழ்ப்பாணப் பொது சன நூலகம், ஈழநாடு அலுவலகம் போன்றவை எரிக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்கள், ஆயுதப் போராட்டக் குழுக்களின் செயற்பாடுகள் பரவலாக விரிவாக்கப்படக் காரணமாகியது. 1983 யூலைக் கலவரம் இனப்பிரச்சினையை, தீவிரமான ஆயுதப் போராட்டமாக்கின. அதனைத் தொடர்ந்து போராளிக் குழுக்கள் தனியாகவும் சேர்ந்தும் இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் மேற்கொண்ட தாக்குதல்களால் படையினர் முகாம்களில் முடங்கும் நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் போராளிக் குழுக்கள் தமக்கிடையேயும் சண்டைகளைத் தொடங்கினர். 1986இல் விடுதலைப் புலிகள் ஏனைய போராளிக் குழுக்களைத் தடைசெய்தும், ஈவிரக்கமற்ற தாக்குதல்களை நடத்தியும் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தனர். தனிப்பெரும் போராட்டக் குழுவாகத் தம்மை முன்வைத்த னர். 1986ஆம் ஆண்டு இறுதியில் யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது எனலாம்.

1987இல் இலங்கை இராணுவம் புலிகளிடமிருந்த நிலப்பகுதிகளைக் கைப்பற்றும் நோக்குடன் வடமராட்சியில் ஒப்பரேசன் லிபரேசன் என்னும் படை நடவடிக்கையை ஆரம்பித்தது. ஒப்பரேசன் பூமாலை என்ற நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்துக்கு வான்வழியாக உணவு, மருந்துப் பொருட்களைப் போட்டதன் மூலம் இந்தியா விடயத்தில் தலையீடு செய்தது. இதனைத் தொடர்ந்து இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணம் உட்பட தமிழர் பிரதேசங்களில் நிலை கொண்டது. 1987ஆம் ஆண்டு செப்ரெம்பரில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீபன் உண்ணாவிரதமிருந்து காலமானார். அதனைத் தொடர்ந்து இந்திய அமைதிப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் தொடங்கின. ஈழமுரசு, முரசொலி பத்திரிகை அலுவலகங்கள் இந்திய அமைதிப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாயின.

புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் இரண்டு ஆண்டுகள் போர் நடந்தது. 1989 இல் பிரேமதாச அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தொடங்கியது. இந்தியப் படைகளுடன் போரிட உதவும் வகையில் புலிகளுக்கு ஆயுதங்களை பிரேமதாச அரசாங்கமே வழங்கத் தொடங்கியது. இலங்கை அரசாங்கமும் புலிகளும், இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என அழுத்தம் கொடுத்து வந்தனர். அக்காலத்தில் இந்தியத் தேர்தலில் ராஜீவ் காந்தி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்தியா தனது படைகளை மீளப்பெறும் முடிவுக்கு வந்தது. 1989ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியப் படைகள் வெளியேறத் தொடங்க அவர்களது கட்டுப்பாட்டில்இருந்த பெருமளவு தமிழ்ப் பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

1980 துகளில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ஈழநாடு, ஈழமுரசு, உதயன், முரசொலி பத்திரிகைகளில் ஈழமுரசு மீண்டும் வெளிவரவில்லை. ஈழமுரசின் ஊழியர்களைத் திரட்டிக் கொண்டு ஈழநாதம் நாளிதழ் 1990ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதியன்று தொடங்கப்பட்டது. 1990 பெப்ரவரி 5ஆம் திகதி முரசொலி மீண்டும் வெளிவரத் தொடங்கியது. 1990களில் முரசொலி, ஈழநாடு பத்திரிகைகள் புலிகளின் நேரடிச் செல்வாக்குக்கு உட்பட்டே வெளியாகின. ஈழநாதம் 'மக்கள் தினசரி' எனக் குறிப்பிடப்பட்டு இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டு வெளியாகிய போதிலும் அது புலிகளின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இயங்கியது. அவ்வகையில் 1990 களில் புலிகளின் நேரடிச் செல்வாக்குக்கு உட்படாமல் வெளியாகிய நாளிதழாக உதயனே அமைந்தது.

1985 நவம்பர் 27ஆம் திகதியன்று வெளியாகத் தொடங்கிய உதயன் பத்திரிகை, யாழ்ப்பாணத்தின் நான்காவது நாளிதழ் ஆகும். 1916 இல் தொடங்கப்பட்ட பாலபாஸ்கரன் பத்திரிகை சில மாதங்கள் மட்டுமே வெளியாகி மறைந்தது. அவ்வகையில் அது இலங்கையில் தமிழிலும், வடக்கில் யாழ்ப்பாணத்திலும் தொடங்கிய முதல் நாளிதழ் முயற்சியாகும்.







இரண்டாவது நாளிதழான ஈழநாடு 1959இல் வார இதழாகவே தொடங்கப்பட்டுப் பின்னர் நாளிதழாக மாறியதொன்றாகும். இது போலவே 1984இல் ஈழமுரசும் வார இதழாகத் தொடங்கப்பட்டுப் பின்னர் 1985இல் நாளிதழாக மாற்றப்பட்டது.

ஆனால் உதயன் நாளிதழோ முதலாவது இதழ் முதல் நாளிதழாகத் திட்டமிடப்பட்டுத் தொடங்கப்பட்டு இன்றுவரை அவ்வாறே தொடர்கிறது. மேலும் ஏற்கனவே குறிப்பிட்டபடி 1990 களில் புலிகளின் கட்டுப்பாட்டில் அல்லது நேரடிச் செல்வாக்கில் வெளிவராத ஒரே யாழ்ப்பாண நாளிதழாகவும் உதயன் அமைகிறது. யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நீண்டகாலம் (35 ஆண்டுகள்) வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் நாளிதழாகவும் உதயன் அமைகிறது. ஈழப்போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பலம்பெறத் தொடங்கிய காலத்திலிருந்து, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட காலம் வரையும் அதன் பின்னரான அரசியற் போராட்டங்கள்தொடர்பானதாகவும் தொடர்ச்சியான செய்திப் பதிவாகத் தொடரும் நாளிதழ் என்ற வகையில் உதயன் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான முக்கிய ஆவணப்பதிவாகவும் அமைகிறது.

1860துகளில் யாழ்ப்பாணத்தின் செய்திப் பத்திரிகைப் பாரம்பரியம் இலங்காபிமானி, யப்னா பிறிமன் போன்ற பத்திரிகைகளுடன் ஆரம்பமானது. அந்தச் செய்திப் பத்திரிகைப் பாரம்பரியத்தில் இலங்காபிமானி (1863-1933), ஈழகேசரி (19301958), ஈழநாடு (1959-1995) வரிசையில் உதயனது இடமும் (1985இன்றுவரை) மிக முக்கியமானது எனலாம்.

உதயன் தொடங்கிய காலத்தில் ஏற்கனவே வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு, ஈழமுரசு நாளிதழ்கள் ஏ3 தாள் அளவிலேயே வெளியாகிக் கொண்டிருந்தன. உதயன் அதிலிருந்து வேறுபட்டுக் கொழும்புப் பத்திரிகைகள் போல பெரிய பக்க அளவுடன் தொடங்கப்பட்டது. "உண்மை, அஞ்சாமை, நடுநிலைமை" ஆகியவற்றைப் பெயருக்குக் கீழ் குறிப்பிட்டு "இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்" என்ற முதற்பக்க அடிக்குறிப்புடன் உதயன் தொடங்கப்பட்டது.

"அரசியல், பொருளாதார சுதந்திரம் மலர வேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்க வேண்டும். ஈழம் வாழ் தமிழ் மக்கள் உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு இணையாக உயர வேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவ வேண் டும். எங்களிடம் உள்ள கல்வி, மனிதசக்தி முதலான பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்த வேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும்." போன்ற எதிர்பார்ப்புக்களை ஈட்டுவதற்குப் பங்களிக்கும் நோக்குடன் உதயன் தொடங்கப்பட்ட தாக பிரசுர முகா மைப் பீடத்தினரினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"பயங்கரமான இருள் மண்டிய, இருளைக் கலைத்து ஒளி தந்து உலகை உய்விக்க உதித்து எழும் போது பகலவனான சூரியன், உதயனாகிறான்" என்றும் "ஆதியில் தமிழர் சூரியனையே முதலில் வழிபட்டனர்; தமிழர் வாழ்வியலிலும் சூரியனுக்கு முதலிடம் தரப்பட்டது" என்றும் உதயன் எனும் பெயர்த் தெரிவுக்கான காரணம் பதிவாகியுள்ளது. செய்தி எழுதும் பேனா அம்பாகவும் அதன் வாயில் செய்தி எழுதப்பட்ட காகிதம் இருப்பதாகவும் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல விரைந்து உதயன் செய்தி தருவான் என்பதாக உருவகிக்கப்பட்டு உதயனின் இலச்சினை சூரியனைப் பின்னணியில் கொண்ட வில்லும் அம்புமாக வரையப்பட்டது. உதயன் எழுத்துக்களும் சூரியனும் நீல நிறத்தில் அமைந்திருந்தன. 2020இலும் கூட இதே வடிவமைப்பிலும் நிறத்திலுமே உதயனது இலச்சினை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் முதல் இதழிலேயே "முச்சந்தி முரளி"யும் அறிமுகமானான். முரளி என்பவன் பல்வேறு கோட்டுச் சித்திரங்களாக வரையப்பட்டு முரளியின் கருத்தாக ஓரிரு வரிகள் முதற்பக்கத்தில் இடம்பெற்றன. அவ்வப்போது மறைந்தாலும், தொடர்ச்சியாக முச்சந்தி முரளி பகுதி உதயனின் முதற்பக்கத்தில் வெளிவருகிறது. அத்துடன் தினசரி சினிமா, வெளி உலகில், விளையாட்டு போன்ற பகுதிகளும் முதல் இதழ் தொடக்கம் இடம்பெற்றன. "உதயனின் வார இதழ் சஞ்சீவி" என்ற அறிவிப்பும் முதலிதழிலேயே இடம்பெற்றது. சஞ்சீவியும் அவ்வப்போது பிரசுரமாகாதிருப்பினும், 2020இல் மீண்டும் முன்னைய மிடுக்குடன் வெளிவரத் தொடங்கியுள்ளது.



# பலி எடுத்த கசிப்பு

**முக்கொம்பன்!**

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்று. அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கும் பூநகரி பொலிஸ் பிரிவுக்கும் இடைப்பட்ட பகுதி. வயல் வெளிகளும், ஓங்கி வளர்ந்த காடும், உவர் நில வெளிகளும் சூழ்ந்த, பெரும் கானகத்தை ஊடறுத்து அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம்.

சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் முக்கொம்பனில் இருந்த வனப்பு இப்போது இல்லை. ஊரில் மட்டுமல்ல, அந்த ஊரின் மக்களிலும் பழைய செந்தழிப்பு இல்லை. எங்கும் வறுமை.

காலை இருள் விலகும் முன்னரே வயல் வேலைகளுக்கும், காட்டுக்கு விறகுவெட்டுவதற்கும் தோட்டத்துக்கும் சென்றுவிடும் கடினமான உழைப்பை வெளிப்படுத்தும் முக்கொம்பன் மக்களுக்கு என்ன ஆயிற்று? ஊருக்குள் இறங்கி விசாரித்த போதுதான் பல அதிர்ச்சித் தகவல்கள் வந்து முகத்தில் அறைந்தன.

இப்போதெல்லாம் முக்கொம்பனில் உள்ள ஆண்களில் பலர் வேலைக்கே செல்வதில்லை. வீட்டிலேயே படுத்திருந்துவிட்டு, மாலையானதும் வெளிக்கிட்டு வெளியே போய்விடுகிறார்கள். போகும்போது மறக்காமல், தங்கள் மனைவி வேலை செய்து கொண்டுவரும் சம்பளத்தில் பெரும்பகுதியை அப்படியே 'லபக்' செய்துவிடுகிறார்கள். அப்படிக் கொடுக்காவிட்டால், மனைவியை அடித்து, உதைத்தாவது அந்தப் பணத்தைப் பிடுங்காமல் விடமாட்டார்கள்.

வீட்டில் பிள்ளைகள் பசியோடிருந்தாலென்ன, நோய் நொடியென்று அந்தரித்தாலென்ன, எதைப் பற்றியுமே சிந்திக்காது குடும்பத்தலைவர்கள் மாலையானதும் கால்போனபோக்கில் புறப்பட்டுவிடுவார்கள். அந்தக் கால்கள் ஏதேனும் கசிப்புக்கோட்டையில் தான் தரிக்கும். பின்னர் மதி மயங்கும் வரை கசிப்பு அருந்திவிட்டு, நள்ளிரவை நெருங்கும் சமயத்தில் தான் வீட்டுக்கு வருவார்கள். வந்தபின்னும் சும்மாயிருப்பதில்லை. மனைவி, பிள்ளைகளோடு சண்டை சச்சரவென்று அன்றிரவு முழுவதும் கச்சேரி தொடரும். மீண்டும் அடுத்தநாள் மாலைவரை, வீட்டில் சும்மாயிருந்து, தினவெடுத்துவிட்டு, மாலையில் கசிப்பைத் தேடி ஓடும் படலம் தொடரும். முக்கொம்பனில் பெரும்பாலான வீடுகளில் இதுவே இப்போதைய வாழ்வியல் கோலம்.

**துயரம் தொடர்கதை**

அது ஒரு இளம் குடும்பம். பெற்றோரின் விருப்பத்தை மீறி இருவரும் காதலாகி, கசிந்துருகி, தம்பதியருமாகிவிட்டனர். அவன் நல்ல உழைப்பாளி. நாள் தவறாது கூலி வேலைக்காவது சென்று, குடும்பத்தை நன்றாகப் பார்த்துக்கொண்டான். அவர்களின் இல்லறவாழ்வின் இனிமையால், வாரிசொன்றும் கிடைத்தது. ஆனால் அதற்குள் அவன் மாறிப்போனான். சேர்க்கைகள் அதிகமாகி முக்கொம்பனில் வழக்கமாக ஆண்களுக்கு வரும் நோய் அவனுக்கும் தொற்றிவிட்டது. ஆம், அவனும் "கசிப்பு" க்கு அடிமையாகிவிட்டான். வேலைக்குச் செல்வதில்லை. குழந்தை பிறந்து மூன்று மாதங்கள்கூட ஆகாத நிலையில், குடும்பப் பாரத்தை அவள் சுமக்கத் தொடங்கினாள். பச்சை உடம்போடு, பால்மணம் மாறாப் பிள்ளையை வீட்டில் விட்டுவிட்டு அவள் கூலி வேலைக்குப் போய்வரத் தொடங்கினாள். அவன் வீட்டில் ஒய்யாரமாகப் படுத்திருப்பான். அவள் கூலிவேலை முடித்து வந்ததும், முதல்வேலையாக அவன்கையில் அந்தக் காசின் பெரும்பகுதியைக் கொடுத்துவிட வேண்டும். இல்லையேல் அடித்து உதைத்து பணத்தைப் பறித்துச் சென்றுவிடுவான்.

ஒருநாள் அவள் அந்த 4 மாதக் குழந்தையை அவனது பொறுப்பில் விட்டுவிட்டு வேலைக்குப் போய்விட்டாள். தூக்கத்தில் இருந்த குழந்தை திடீரென விழித்து, அழத் தொடங்கியது. அவன் ஏனென்றும் எட்டிப் பார்க்கவில்லை. அந்தளவுக்கு போதை.

குழந்தை வீரிட்டு அலறி, மூச்சுத் திணறும் நிலை. பக்கத்து வீட்டுப் பெண்ணொருவர் தெய்வாதீனமாக குழந்தையின் அலறல் கேட்டு ஓடோடி வந்தபோது, குழந்தை மயங்கும் நிலைக்குப் போயிருந்தது,. பின்னர் அவர் தன் பாலைக் கொடுத்ததால், அந்தக் குழந்தையின் உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்த நிலையில் தான் முக்கொம்பனில் அண்மையில் நிகழ்ந்த துயரச்சாவொன்று, அங்கு கசிப்பால் ஏற்பட்டுள்ள அவலங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது.

## கசிப்பால் கருகிய மொட்டு


02.09.2020 காலைப்பொழுது.

அவள் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவி. பெயர் தர்சனா.

அன்று பாடசாலைக்கு செல்லவில்லை. காலையிலேயே அழுதபடி ஏதோ எழுதுகிறாள். அருகிலிருந்த பதினொரு வயதான தம்பி " ஏனக்கா அழுகிறாய்... என்ன எழுதிறாய்?" என்று கேட்டுள்ளான். அவள் "ஒன்றுமில்லை. தலையிடிக்குது" என விரக்தியாகப் பதில் சொல்லிவிட்டு தனது அறைக்குள் சென்றுவிட்டாள்.

அறைக்குள் போன அக்கா நீண்டநேரம் வெளியே வராததால் பத்தரை மணியளவில் அவளை "அக்கா .. அக்கா " எனத் தம்பி அழைத்துப் பார்த்தான். ஆனால் பதிலேதும் இல்லை. கதவைப் பலமாகத் தட்டியும் அவள் வந்து திறக்கவில்லை. சந்தேகத்தோடு கதவில் இருந்த துவாரம் ஊடாக உள்ளே பார்த்தான். அங்கே கண்ட காட்சி அவனைத் தூக்கி வாரிப்போட்டது. அவனது அக்கா தர்சனா தாயின் சேலையில் தூக்கு மாட்டி, தொங்கிக் கொண்டிருந்தாள்.

பயம் தலைக்கேற வெளியே ஓடியவன், வீதியில் நின்ற தந்தையிடம் தகவலைச் சொன்னான். அவரும், அங்கு நின்ற மீன் வியாபாரி ஒருவரும் வேகமாக ஓடிவந்து கதவை திறக்க முயன்றனர். கதவு உட்பக்கமாக பூட்டப்பட்டிருந்தது. கதவின் ஒரு பகுதியை உடைத்து உள்ளே சென்றபோது, தர்சனாவின் கதை முடிந்து போயிருந்தது.



**குடியைக் கெடுத்த குடி**


தர்சனாவின் தந்தை பூநகரி. தாய் யாழ்ப்பாணம். இடப்பெயர்வு காலத்தில் இருவரும் காதல் திருமணம் செய்துள்ளனர். திருமணம் செய்து சில வருடங்களிலேயே இருவருக்கும் இடையில் தொடங்கிய சண்டை இன்னும் தீராமல் தொடர்கிறது. சிறுமியின் தந்தை கசிப்புக்கு அடிமையாகி, வேலைக்கு செல்வதே இல்லை. சீதனமாக கொடுத்த சொத்துக்கள் அத்தனையும் தந்தையின் குடியால் அழிந்துபோய் நீண்டகாலம். விபத்தொன்றில் சிக்கி தந்தைக்கு ஒரு கால் இல்லை. என்றாலும் குடிக்கும், சண்டைக்கும் குறைவில்லை. இந்தக் குடும்பச் சண்டைகளால் தவித்து நின்ற பிள்ளைகளை முழுமையாகப் பராமரித்து அரவணைத்து கொண்டது அம்மம்மாவும் அம்மப்பாவுமே. உறவினர்களின் உதவியோடு தர்சனாவின் அக்கா ,சுவிட்சர்லாந்து சென்று இப்போது அங்கேயே திருமணமும் முடித்துவிட்டார்.

அம்மம்மா தர்சனாவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து தங்களுடன் வைத்திருந்து பாடசாலையில் சேர்த்திருந்தார். அதனால் தர்சனா விடுமுறை நாட்களில் எப்போதாவது முக்கொம்பன் வந்து பெற்றோரையும் இரு சகோதரர்களையும் பார்த்துச் செல்வாள். ஆனால் அதற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அம்மம்மாவோடு தங்கியிருந்து படித்துவந்த தர்சனாவை இவ்வருடம், மார்ச் மாதமளவில் முக்கொம்பனுக்கு கூட்டிவந்து அங்குள்ள பாடசாலையில் தாயார் இணைத்துள்ளார்.

தந்தைக்கு வாகனம் திருத்தும் வேலை தெரிந்திருந்தாலும் அதை அவர் இப்போது செய்வதில்லை. வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் பணம் அனுப்ப அதைச் செலவு செய்வதே இவரின் முழுநேரத் தொழில். ஊரில் மூன்று ,நான்கு பெண்கள் கசிப்பு விற்பனையில் கொடிகட்டிப் பறக்கிறார்கள். அவர்களின் நிரந்தர வாடிக்கையாளர்களில் தர்சனாவின் தந்தையும் ஒருவர். வீட்டினை பற்றிய எந்த அக்கறையும் இல்லாமல் கசிப்பு விற்கும் வீடுகளிலேயே அவர் தன் நேரத்தைச் செலவிடுவது வழக்கம். வீட்டில் நிற்பதை விடவும் கசிப்பு விற்கும் வீடுகளில் நிற்கும் நேரமே அதிகம் என்கிறார்கள் அக்கம் பக்கத்தவர்கள்.

வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் சண்டை ஏற்பட்டு, அடிதடி வரை செல்வதும், பின்னர் பொலிஸில் மனைவி முறைப்பாடு செய்துவிட்டு, உறவினர் வீடுகளில் தஞ்சமடைவதும் தர்சனாவின் வீட்டில் வழக்கமான நடைமுறையாகிப் போனது.

(மறுபக்கம் பார்க்க)




**ஏன் என்னில் ஒருவரும் பாசம் இல்லை... நான் உங்கள் பிள்ளை இல்லையா... அப்பா குடிக்காதீங்க... அம்மாவோட சண்டை பிடிக்காதீங்க...**

**அம்மா சத்தியமா இஞ்ச இருக்க பிடிக்கல.. எங்காவது போய் சாகலாம் போல கிடக்கு ..**

படிக்கோணும் எண்டும் ஆசையா இருக்கு.. எங்காவது போய் சாகாம வேலை செய்தா மாதம் மாதம் காசு அனுப்புவன்.

### கசிப்பால் வந்த வினை

"நான் ஓ.எல் படிச்சு முடிச்சிட்டு பொலிஸில சேர்ந்திடுவன். பொலிஸில சேர்ந்து இங்க "கசிப்பு" விற்கிறதை இல்லாமல் செய்வன். " என்று உறவினர்களிடமும் நண்பர்களிடமும் அடிக்கடி சொல்லிக்கொள்வாளாம் தர்சனா.

கசிப்பு குடித்து வந்த தந்தை, காலப்போக்கில் வீட்டில் வைத்து அதனை விற்பனை செய்யவும் தொடங்கினார். நஞ்சுண்ட காடு எனும் அயல் கிராமத்தில் இருந்து , அவர் விற்பதற்கான கசிப்பைக் கொண்டுவந்து கொடுக்கத் தொடங்கினான் ஒருவன். அவனுக்கும் வயது 17 தான்.

அவனது பெற்றோர் பிரிந்து வேறு வேறு திருமணங்கள் செய்ததால், அவன் நஞ்சுண்ட காட்டில் உள்ள உறவினர்களின் வீட்டில் தான் தஞ்சமடைந்து வாழ்கிறான் அந்த உறவினர்களோ அவனை நல்லவழியில் வளர்க்காமல், தாங்கள் உற்பத்தி செய்யும் கசிப்பை விற்பனை செய்யவே அவனைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இப்போது அவன் இப்போது ஊரில் பெயர்போன கசிப்பு வியாபாரி. அவனது பெயரை கூறி விசாரித்தால் "கசிப்பு விக்கிற பெடியனோ" எனக் கேட்கும் அளவுக்கு பிரபலமானவன்.

அவன் கசிப்பைக் கொண்டு வர, தர்சனாவின் தந்தை அதை விற்க புதிய கசிப்புக்கூட்டணி முக்கொம்பனில் உருவானது. அவர்கள் இருவரும் மிக நெருக்கமாக, ஒன்றாக அமர்ந்து கசிப்பு அருந்துமளவுக்கு நட்பாகினர்.

ஒருமுறை இவர்கள் கசிப்பு விற்பனை செய்யும் தகவலறிந்து வந்த பொலிஸார் சிறுமியின் தந்தையைக் கைது செய்தனர். பின்னர் நீதிமன்றால் அவர் விடுவிக்கப்பட்ட பின்னர் கசிப்பு விற்பனைக்கு முழுக்குப் போட்டார் தந்தை.

ஆனால் கசிப்புக் குடிப்பதை அவரால் கைவிடமுடியவில்லை. சிலவாரங்களுக்கு முன்னால், வழக்கம் போல வீட்டில் ஏற்பட்ட சண்டை இன்னும் உச்சமடைய, தர்சனாவின் தாயார் மண் எண்ணெயை ஊற்றி தனக்கு தானே தீ வைத்துக்கொண்டார். பின்னர் காயங்களோடு காப்பாற்றப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பெற்று வரும் போது ஊரில் உள்ள சமூக சேவை செய்யும் ஒருவரை தொடர்பு கொண்ட தாயார் "என்ர பிள்ளை வீட்ட இருக்கிறது பாதுகாப்பு இல்லை. நான் வரும்வரை அவளைப் பாதுகாப்பான இடத்தில் சேர்த்துவிடுங்கோ" எனக் கூறியுள்ளார். அவரும் பிரதேச சபை மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு விடயத்தை தெரிவிக்க ,ஏதாவது சிறுவர் இல்லத்தில் சேர்த்துவிடுவோம் என அவர்களும் தெரிவித்துள்ளனர்.ஆனால் அப்படி நடப்பதற்கிடையில் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

### தந்தை சுமத்திய அபாண்டம்

01. 09. 2020 .

நள்ளிரவு 1.30 மணியளவில் அயல் வீட்டுக்குச் சென்றுள்ளார் தர்சனாவின் தந்தை.

"என்ர மகள் ரூமுக்குள்ள ஒரு பெடியனோட கதைச்சுக்கொண்டு இருக்கேக்க பிடிச்சிட்டன் . வீட்ட ஒருக்கா வாங்கோ" என அயல்வீட்டாரை கட்டாயப்படுத்தி அழைத்து வந்துள்ளார். அவர்கள் வரும் போது அங்கே வெளி முற்றத்தில் உள்ள மரக்குற்றி ஒன்றில் சிறுமியின் தந்தைக்கு கசிப்பு கொண்டுவந்து கொடுக்கும் அந்தப்பெடியன் தான் இருந்துள்ளான். அயல் வீட்டார் "இந்த நேரம் ஏன் இங்கே வந்தாய் ?" என ஏசி அவனைக் கலைத்தனர்.

சிலநிமிடங்களில், உறவினர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட தர்சனாவின் தந்தை " மகள் ஒரு பெடியனோடு ரூமுக்குள் இருந்த போது பிடித்தேன். சாட்சியாக அயல் வீட்டாரைக் கூட்டிவந்து காட்டினேன்" என அருவருக்கத்தக்க முறையில் கதைத்துள்ளார். ஊர் முழுவதும் இவ்வாறு இன்னும் பல அருவருக்கத்தக்க கதைகளை பரப்பியுள்ளார் இந்த கசிப்புக்கு அடிமையான தந்தை.


அடுத்தநாள் காலையில் கடிதம் எழுதி வைத்து விட்டு, தர்சனா தூக்கில் தொங்கிவிட்டாள்.

அதற்கு முதல் நாள் நடந்த ஏதோ ஒரு சம்பவம் தான் தர்சனாவை இப்படி ஒரு முடிவுக்கு கொண்டு போயிருக்க வேண்டும் என்பதே ஊரவர்களின் சந்தேகம்.

### கசிப்பு பெடியனின் வாக்குமூலம்

"இரவு 11.30 மணியளவில் தொலைபேசியில் தர்சனாவின் தந்தை தொடர்பு கொண்டு, கசிப்புக் கொண்டுவருமாறு கேட்டார். அந்த நேரம் நான் முக்கொம்பனில் உள்ள உறவினர் வீட்டிலேயே நின்றேன். அந்த வீட்டிலும் கசிப்பு விற்பார்கள், எனவே கசிப்பைக் கொண்டுவர சைக்கிள் இல்லாததால், தர்சனாவின் வீட்டுக்குப் போய் சைக்கிளை வாங்கிவரலாமென்று போனேன்.

அங்கே தர்சனாவின் தந்தையோடு கதைத்துக் கொண்டிருந்தபோது, அவர் என்னை இருக்கச் சொல்லிவிட்டு அயல்வீட்டுக்குப் போய்விட்டார். பிறகு அவர்களோடு வந்து என்னோடு சண்டை பிடித்தார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவரிடம் என்ன பிரச்சினை என்று கேட்டேன்.




அதற்கு தர்சனாவின் தந்தை, "நீ இஞ்ச நிக்காத இப்ப பொலிஸ் வரும் "என கலைத்ததால் நான் வந்துவிட்டேன். நானாக அவர் வீட்டுக்குச் செல்லவில்லை. செல்லவே இல்லை . ஏதோ பிளான் பண்ணித்தான் என்னை வரச் செய்திருக்கிறார். ஆனால் என்ன பிளான் என்றுதான் எனக்கு இன்னமும் புரியவில்லை. இது நடந்த அடுத்தநாள் தான் அந்தப்பிள்ளை தற்கொலை செய்தது."

### தர்சனாவின் இறுதிக் கடிதத்தில் இருந்து.......

"ஏன் என்னில் ஒருவரும் பாசம் இல்லை... நான் உங்கள் பிள்ளை இல்லையா... அப்பா குடிக்காதீங்க... அம்மாவோட சண்டை பிடிக்காதீங்க...

அம்மா சத்தியமா இஞ்ச இருக்க பிடிக்கல.. எங்காவது போய் சாகலாம் போல கிடக்கு .. படிக்கோணும் எண்டும் ஆசையா இருக்கு.. எங்காவது போய் சாகாம வேலை செய்தா மாதம் மாதம் காசு அனுப்புவன்.

செத்தா அனாதை பிணமா விட்டுருங்க ...

அம்மா உங்களை அப்பிடி வச்சு பாக்கணும் இப்படி வச்சு பாக்கணும் என்று ஆசை.. எல்லாம் உடைஞ்சு போச்சு...

அம்மா என்னை மன்னிச்சிருங்க...." என்று தொடர்ந்து செல்கிறது அந்த ஏழு பக்க கடிதம்....

### அயலவர்களின் சந்தேகங்கள்

தந்தையோடு இருக்கும் பிள்ளையை எங்காவது பாதுகாப்பாக விடுமாறு தாய் கூறியது ஏன்?

தன்னுடைய மகள் மீதே தந்தை அருவருக்கத்தக்க வதந்திகளை பரப்பியது ஏன்? அதுவும் தாயார் வீட்டில் இல்லாத நேரம் ?

சம்பவ தினத்தன்று காலை இளைய மகனிடம் நண்டு வாங்கிக் கொடுத்துவிட்டு "சமைப்பாளா என அக்காவிடம் கேள்" என்று தந்தை சொன்னதாகவும், நண்டைக் கொண்டு போய் அக்காவைத் தேடியபோதே அவள் தூக்கில் தொங்கியது தெரியவந்ததாக கூறப்படுகிறது. ஆனால் அந்த வீட்டில் எங்குமே நண்டு இருக்கவில்லை. அது எப்படி? வாங்கிக் கொடுத்த நண்டுகள் என்னாயின? அல்லது அந்த நண்டுக்கதை இட்டுக்கட்டப்பட்டதா?

தர்சனாவின் உயிரற்ற உடலை கீழிறக்கி வைத்துவிட்டு, எந்தப் பதற்றமும் இன்றி தர்சனாவின் தந்தை முற்றத்தில் இருந்து தொலைபேசியில் உரையாடியுள்ளார். ... மகள் இறந்து கிடக்க இப்படி அவர் நடந்து கொண்ட தன் மர்மம் என்ன?

நள்ளிரவு கசிப்பு விற்கும் பெடியனை வீட்டுக்கு வருமாறு தானே அழைத்துவிட்டு, அயல்வீட்டுக்காரருக்கு மகளின் றூமுக்குள் அந்தப் பெடியன் இருந்ததாகத் தந்தை சொன்னது ஏன்?

இந்தக் கேள்விகளுக்கு விடை தெரியவேண்டுமானால், தர்சனாவின் தந்தையையும், கசிப்புப் பெடியனையும் கைதுசெய்து விசாரிக்க வேண்டுமென்பது உறவினர்களின் கோரிக்கை. இதுவிடயத்தில் பொலிஸார் கவனம் செலுத்திச் செயற்படுவார்களா?

### கசிப்பு விற்கும் பூலான் தேவி

முக்கொம்பனிலும்,அதன் அயல் கிராமமான நஞ்சுண்டகாட்டிலும் கசிப்பு வியாபாரம் இப்போதும், தடையின்றித் தொடர்கிறது. நஞ்சுண்ட காடு மற்றும் முக்கொம்பனில் ஒரு பகுதியும் அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டவை. முக்கொம்பனின் மற்றைய பகுதி பூநகரி பொலிஸ் நிலைய ஆளுகைக்கு உட்பட்டது. அதிக அளவிலான கசிப்பு உற்பத்தி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே நடைபெறுவதாகவும் பொலிஸாருக்கு அதுபற்றித் தெரியப்படுத்தினாலும் நடவடிக்கை இல்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்தோடு பொலிஸாருக்கு தகவல் கொடுப்பவர்கள் யாரென்ற விபரத்தையும், பொலிஸார் கசிப்புக் காய்ச்சுபவர்களுக்கு கொடுத்து விடுவதால், தகவல் கொடுப்பவர்கள் அச்சுறுத்தல்களை எதிர் கொண்ட சம்பவங்களும் உண்டு.

அதனால் தான் இப்போது எவரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்க முன்வருவதில்லை என்கின்றனர் பிரதேச வாசிகள்.

நஞ்சுண்ட காட்டில் பெண்மணி ஒருவர் ஒளிவு மறைவின்றி, பகிரங்கமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்வதாகவும், பொலிஸாருக்கு பயமின்றி விற்பனை செய்வதால் அந்த பெண்மணிக்கு கிராமத்தவர்கள் " பூலான் தேவி" என பெயரிட்டு அழைப்பதுமாகவும் கூறப்படுகிறது. இந்தக் கசிப்பு பாவனையால் இன்னும் எத்தனை தர்சனாக்கள் பலி கொள்ளப்படப்போகின்றனரோ?

### ஆளுநருக்கு கோரிக்கை

"வட மாகாணம் இப்போது பெண் ஆளுநரொருவரது கட்டுப்பாட்டில் இருப்பதால் , எங்கள் பகுதிப் பெண்களின் நிலையை கருத்தில் கொண்டு விசேட பொலிஸ் குழுக்க ளூடாக இந்த கசிப்புப் பாவனையை முற்றாக இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரென எதிர்பார்க்கின்றோம்" என்கின்றனர் கிராம மக்கள்.

# கோரோனா 2.0 கொல்லுமா உலகை?

ஆர்.பிரகாஸ்

கொரோனாப் பெருந்தொற்றின் வீரியமும் அதன் பரவலும் இன்னமும் கொஞ்சமேனும் குறையாத நிலையில், கொரோனா இரண்டாவது அலை பல நாடுகளைத் தாக்கத் தொடங்கியுள்ளது. இந்த இரண்டாவது அலையால் ஏற்படப்போகும் அழிவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்று எச்சரிக்கின்றது உலக சுகாதார ஸ்தாபனம்.

கொரோனாவை முழுவதுமாகக் கட்டுப்படுத்திய நாடுகள் என்று அடையாளப்படுத்தப்பட்ட தென்கொரியா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிலும் இஸ்ரேல், ஈரான், சவூதி உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலும், பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்பெய்ன் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் இந்த இரண்டாவது அலைக்குரிய சமிக்ஞைகள் மிகவலுவாகவே தென்படுகின்றன. அதிலும் குறிப்பாக தென்கொரியா, ஈரான், நியூசிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கொரோனா இரண்டாவது அலையைத் தவிர்ப்பதற்காக பெரும் கட்டுப்பாடுகளை முழுமூச்சாக விதிக்க ஆரம்பித்துள்ளன. கொரோனாவின் முதல் அலை ஏற்படுத்திய அழிவுகளையும் பொருளாதாரப் பின்னடைவுகளையும் சரிசெய்வதே உலக நாடுகளுக்குப் பெரும்பாடாக உள்ள நிலையில் இரண்டாம் அலை எழுச்சி பெறுமாயின் அதை விட நெருக்கடியான விடயம் என்று நிகழ்கால உலகில் வேறொன்றும் இருக்கப்போவதில்லை.



### வருமா வராதா?

என்னதான் சமூக இடைவெளிகளைப் பேணினாலும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிலும் இந்தப் பேரவலத்தில் இருந்து உலக நாடுகளைக் காப்பதற்கு தடுப்பூசிகளால்தான் மட்டுமே முடியும் .கொரோனாப் பெருந்தொற்று முதற்கட்டமாகப் பரவ ஆரம்பித்து சுமார் 9 மாதங்கள் நிறைவடைந்தபோதிலும், அதற்குத் தடுப்பூசியைக் கண்டறிவதில், உலக நாடுகள் தொடர்ந்து விழிபிதுங்கியே நிற்கின்றன. இன்னும் எவ்வளவு காலத்துக்கு இந்த விழி பிதுங்கல்கள் தொடரப்போகின்றன என்று உறுதியாகத் தெரியாத நிலையே உள்ளது. சீனா, ரஷ்யா, அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தடுப்பூசி கண்டுபிடிப்புக்கான இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டன என்று சொல்லப்படுகின்ற போதிலும் அதன் துல்லியத்தன்மை யாதென இதுவரை மெய்ப்பிக்கப்படவில்லை.

“கொரோனா தொடர்பில் தெளிவற்றவர்களாக நாம் இருந்தமையால் முதலாம் அலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று உலக நாடுகள் தம்மைத்தாமே நியாயப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இரண்டாவது சுற்றுக்கு அவ்வாறான நியாயப்பாடுகள் எதையுமே சொல்ல முடியாது. தற்போதிலிருந்தே உச்சக்கட்ட விழிப்பு ணர்வுடன் அனைத்து நாடுகளும் செயற்பட வேண்டும். பொருளாதாரப் போட்டிகளுக்கு முக்கியத்துவம்கொடுத்து அதன் நீரோட்டத் துக்குள் மூழ்கிவிடாது தனிமைப்படுத்தல்கள் பரிசோதனைகள் சுகாதார நடவடிக்கைகள் என்பவற்றை அதிகமான அளவில் உலக நாடுகள் மேற் கொள்ள வேண்டும். இல்லையேல் கொடூரமான விலங்கு களாலும், போர்களாலும், இயற்கைப் பேரிடர்களாலும் அழிக்கமுடியாத உலகை, கண்ணுக்குத் தெரியாத கொரோனா அழித்ததாக வரலாறு சொல்லும் நிலை வரலாம்.



# நேர்மை இழந்தாரா டோனி?

ஐ.பி.எல் தொடர் ஆரம்பமாகி தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் தற்போது பேசுபொருளாகியுள்ள விடயங்களில் முக்கியமானது, டோனியின் தலைமைத்துவம்.

இரண்டு விடயங்களில் இந்தத் தொடரில் டோனி பெரிதும் பேசப்படுகின்றார். ஒன்று வழக்கம்போல் அவரின் தலைமைத்துவம்பற்றி போற்றப்பட்டும் தூற்றப்பட்டும் வருகின்றது. மும்பைக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் ஹார்திக் பாண்டியா உள்ளிட்ட வீரர்களுக்கு களத்தடுப்பு வியூகம் அமைத்து நேர்த்தியான பந்துவீச்சு வரிசையைப் பயன்படுத்தியதை அடுத்து டோனி தூக்கிவைத்துக் கொண்டாடப்பட்டார். அதேநேரம் ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் அணித் தெரிவு உள்ளிட்ட காரணங்களால் டோனியின் தலைமைத்துவம் முன்புபோன்று இல்லை என்று முன்னாள் வீரர்கள் பலரும் கருத்துத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர்.

ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் முரளி விஜய், கேதர் யாதவ் இருவரும் தேவையற்ற வீரர்கள். இவர்களுக்குப் பதிலாக இளம் வீரர்களை களமிறக்கியிருக்க வேண்டும் என்று பலரும் தெரிவிக்கின்றனர். முரளி விஜயை ஆரம்ப வீரராக அல்லாமல் அம்பதி ராயுடு மற்றும் வட்சனை களமிறக்க வேண்டும் என்பதே அத்தகைய விமர்சனங்களை முன்வைப்போரின் பரிந்துரை. அதேபோன்று லுங்கி இங்கிடி நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக பிராவோ அணிக்குள் இடம்பெற வேண்டும் என்றும் கருத்து ரைக்கப்படுகின்றது. இரண்டாவது, கிரிக்கெட் ஒரு பொழுதுபோக்காக இருந்தாலும் அதிலும் நேர்மையைக் கடைப்பிடிக்கும் வீரர்களில் சச்சின், ராவிட் போன்று டோனியும் ஒருவராகக் கருதப்பட்டார். ஆனால் தற்போது அவரின் நேர்மை மற்றும் அறம் என்பவற்றின் மீதும் பெரும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பந்து நிலத்தில்பட்டு பிடியெடுப்புச் செய்தபின்னர் ஆட்டமிழப்புக் கேட்டு நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதை அடுத்தே இந்தக் கருத்து முன்வைக்கப்படுகின்றது. எனினும் காய்க்கும் மரத்துக்குத்தான் கல்லெறிவார்கள் என்கின்றனர் டோனியின் ரசிகர்கள்.

ஆர்.லயனல்




# உடைகின்றது பார்சா!

பார்சிலோனா அணி உடைகின்றது. மெஸ்ஸி அந்தக் கழகத்தில் இருந்து வெளியேறவுள்ளார் என்றெல்லாம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இதில் பாதி உண்மை பாதி வதந்தி.

ஆம்! பார்சிலோனா உடைகின்றது என்பது உண்மை. மெஸ்ஸி வெளியேறுகின்றார் என்பது வதந்தி. அப்படியனால் யார் வெளியேறுகின்றார். மெஸ்ஸிக்கு நிகரான திறமையுடைய சில ஆட்டங்களில் மெஸ்ஸியை விடவும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய சுவாரஸ் பார்சிலோனாவில் இருந்து வெளியேறுகின்றார். நெய்மர் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் பார்சிலோனாவில் இருந்து வெளியேறியிருந்தார். அவரின் இழப்பை ஈடுகட்ட பார்சிலோனா பெரும்பாடுபட்டது. தற்போதுதான் அந்த அணி உம்திதி, கிரீஸ்மன் உள்ளிட்ட வீரர்களை ஒப்பந்தம்செய்து பலம்பெற்றது. தற்போது மீண்டும் சுவாரஸ் வெளியேறுகின்றமையானது பார்சிலோனாவுக்குப் பெரும் பின்னடைவே. ஆக, என்.எஸ்.எம் கூட்டணியில் தற்போது எஞ்சியிருப்பது மெஸ்ஸி மட்டும்தான்.

# ஒளிர்ந்த உலக அதிசயம்!




பொலிவுட் நடிகர் ஷாருக்கானுக்கு உலகமெங்கும் பெரும் ரசிகர் பட்டாளம் உண்டு. ஐக்கிய அரபு இராச்சியத்தில் சாருக்கான் மேற்கொண்டுள்ள முதலீடுகளால் அந்த அரசுக்கு ஷாருக்கான் என்றாலே எப்போதும் அலாதி பிரியம்.

அரபு இராச்சியத்துக்கு ஷாருக்கான் மீதுள்ள இந்த முதலீட்டுக் காதல் தற்போது அவரின் அணியான கொல்கத்தா மீதும் வந்துள்ளதாம். ஐ.பி.எல்லில் கலந்துகொள்ளும் அணிகளில் கொல்கத்தா அணியும் ஒன்று. கொல்கத்தா அணி தனது முதலாவது ஆட்டத்தில் கடந்த புதன்கிழமை மும்பையை எதிர்த்து விளையாடியபோது தன் வசமிருக்கும் உலகத்தின் மிக உயரமான கட்டடமான புர்ஜ் கலிபாவில் கொல்கத்தா வீரர்களின் ஒளிப்படங்களை ஒளிரவிட்டதாம் அரபு இராச்சியம். அப்படிச் செய்தும் என்ன பயன்? அந்த ஆட்டத்தில் கொல்கத்தா போராட்டக் குணத்தை வெளிப்படுத்தாமல், தோல்வியடைந்ததுதான் மிச்சம்.